
கோகுலம்

GOKULAM

மே '94 ரூ. 3.00





புதிய புதிய நிறம்!
புதிய புதிய சுவை!
இலவச
ஜங்கிள் புக்
ஸ்டிக்கர் பெற
வேண்டுமானால்
புதிய
PARLE
POPPINS
*ரூ. 1.25
நிகர அடக்கம் 25 கிராம்
*அச்சிடப்பட்ட சில்லறை விலை
அனைத்து வரிகள் உட்பட
பழச் சாறு மற்றும் பல்ப் கொண்டது.
கூடுதல் நறுமணங்கள் சேர்ந்தது.
பாப்பின்ஸின் 4 மேலுறைகளை
உங்கள் முகவரியுடன் இங்கு
அனுப்பவும் : பாப்பின்ஸ்
பாயிண்ட், பார்லே ப்ராடக்ட்ஸ்
லிமிடெட், த.பெ.எண். 907,
பம்பாய்-400 057.
everest/94/PP/6-tm



கோகுலம்

1994
மே மாத இதழ்
மலர் : 12
இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்.



அருமைச் சிறுவர் சிறுமியரே.

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

விடுமுறையை எப்படிக் கழித்து வருகிறீர்கள்? புதிய ஊர்களுக்குப் போய்ப் புதிய நண்பர்கள், புதிய காட்சிகளைக் கண்டு மகிழ்பவர்கள் ஒரு அஞ்சலட்டையில் இதைப் பற்றி எழுதி அனுப்பலாமே. வித்தியாசமான சூழ்நிலை, அதிசயச் செய்திகள் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக் கூடியவைதானே? சிலர் உள்ளூரிலேயே இருந்து விடுமுறையைக் கழித்து வருவீர்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியும் பயனும் அளிக்கக் கூடிய சில நல்ல செயல் களைச் செய்யலாமே? இதைப் பற்றியும் எழுதி அனுப்புங்கள்.

இந்த இதழில் கோடை விடுமுறைப் போட்டி வெளியாகியிருக்கிறது. இதைத் தவிர வழக்கமாக வரும் போட்டியும் வந்திருக்கிறது. "என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்" பகுதி இந்த இதழில் வெளியாகியிருக்கிறது. இதற்கு தினமும் ஏராளமானவர்கள் எழுதி வருகிறார்கள். இது வரை எழுதாதவர்கள் உடனே எழுதியனுப்புங்கள்.

போன இதழின் அமைப்பைப் பாராட்டிப் பலர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். பிருந்தாவனக் கதையரங்கத்தை ஏன் நிறுத்தி விட்டீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நிறுத்தவில்லையே. ஒரு பக்கக் கதைகளாக அவை பிரிந்து வந்திருக்கின்றன அவ்வளவே!

அபிராமியின் அட்டிகை முடியப் போகிற கட்டத்திற்கு வந்து விட்டது. அதனால் விறுவிறுப்பும் சுவையும் கூடியுள்ளது.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

அன்புடன்
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)




கோகுலம் 1994 மே



★ பாம்பு துரை பக் - 75

★ கடல் கன்னிகள் உண்மையா? பக் - 7





★ மோப்பம் பக் - 13

இந்த இதழில்...



இரண்டாவது ஜல்கிரீம்!

பிரபலமான ஆர்ச்சர்டு ரோடில் உள்ள சினிமா தியேட்டரில் படம் பார்க்க நண்பர்கள் புயாவை அழைத்தனர். ஒருவர் பன்னிரண்டு பேர்களுக்கு அட்வான்ஸ் புக்கிங் செய்துவிட்டு, புயாவிடம் கூறினார்.

அன்று சென்னையில் இருந்து வந்திருந்த ஒரு நண்பரை டெம்பிள் ஆஃப் தவ்சண்ட் லைட்ஸ் (Temple of Thousand Lights) என்ற புத்தர் கோவிலுக்கு அழைத்துச் செல்வதாக ஏற்பாடு. ரேஸ்கோர்ஸ் சாலையில் அமைந்திருந்த அந்த பிரும்மாண்டமான புத்தர் ஆலயத்திற்குக் காலையிலேயே நண்பரை அழைத்துச் சென்றுவிட்டு பகல் காட்சிக்கு அப்படியே வந்துவிடுவதாக புயா கூறினார்.

உட்கார்ந்த நிலையில் இருந்த புத்தர் சிலை பதினைந்து மீட்டர் உயரத்துக்குக் கழுத்தை உயர்த்திப் பார்க்கும்படி கண்கவரும் வண்ணத்தில் அமைந்திருந்தது. இதைச் சுற்றி ஆயிரத்திற்கு மேற்பட்ட ஒளி விளக்குகள். புத்தர் அமர்ந்திருந்த பீடத்தில் புத்தர் ஜாதகக் கதைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன. எதிரிலேயே புத்தரின் மறுபிறப்பான போதிசத்து வருக்கும் ஒரு சன்னதி இருந்தது. சீன, ஜப்பானியக் கலைகளின் கூட்டாகக் கோவில் அமைந்திருந்தது. இந்தக் கோவிலை. சாக்கிய முனி புத்தகயா கோவில் என்றும் கூறினார்கள்.

''இந்தக் கோவிலில் வேசக் (VESAK) நாள் பண்டிகை என்பது முக்கியமான திருவிழா. இது மே மாதம் கொண்டாடப்படுகிறது. புத்தர் பிறந்து, முக்தியடைந்த நாளை இது குறிக்கும். அதிகாலையில் இருந்தே கோவில் களை 'கட்டிவிடும். வெளிநாட்டினர் தான் அதிகம். சிங்கப்பூரில் உள்ள பௌத்தர்கள் (சீன, ஜப்பானியர்) திரண்டு வருவார்கள். அன்று அசைவம் சாப்பிட மாட்டார்கள். சைவ உணவுதான். இனிப்பும், மற்ற பலகாரங்களும் செய்து ஏழைகளுக்குக் கொடுப்பார்கள். அன்று கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் பறவைகளுக்கு விடுதலை. வீட்டில் பறவை இல்லாதவர்கள் கூண்டில் அடைபட்டிருக்கும் பறவைகளை வாங்கி வந்து கோவிலின் முன்னால் திறந்துவிட்டு, விடுதலையளிப்பார்கள். ஆயிரக்கணக்கான பறவைகள் சுதந்திரமாகப் பறந்து செல்லும் காட்சி ஆயுள் முழுவதும் மறக்க முடியாத கண்கொள்ளாக் காட்சி''



என்று விவரித்தார் ஒரு பௌத்தத் துறவி.

"இந்தியாவிலும் கூட கிட்டத்தட்ட இதே நாளில் வைசாக பௌர்ணமி கொண்டாடப்படுகிறது. மத்திய அரசு அலுவலகங்களுக்குக் கூட விடுமுறை" என்றார் இந்திய நண்பர்.

"சிங்கப்பூரில் கூட அன்று அரசு விடுமுறை நாள்தான்" என்றார் துறவி.



"சிங்கப்பூர் எல்லா இனத்தவரும் மதத்தவரும் இணைந்து ஒற்றுமைக்கு இலக்கணமாக வாழும் நாடு. ஒரு மதத்தவர் இன்னொரு மதத்தவரைத் தாக்கிப் பேசுவதோ, எழுதுவதோ பெரிய குற்றமாகும். அதேநேரத்தில் எல்லா மதங்களையும் கௌரவிக்கிறார்கள்" என்று விளக்கினார் புயா.

இருவரும் ஓட்டலில் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினர்.

"ஒரு சுவரொட்டி விளம்பரத்தைக் கூடக் காணவில்லையே!" என்று வியந்தார் சென்னை நண்பர்.

"ஆமாம். சுவரொட்டி ஒட்டுவது நகரத்தின் அழகைப் பாதிக்கும். அதோடு போட்டா போட்டி வளர்ந்து நல்லிணக்கத்தையும் பாதிக்கும் என்று அரசு நினைக்கிறது. அதனால் இங்கே, எங்கேயும் சுவரொட்டிகளையே காண முடியாது. மீறி ஒட்டினால் கடுமையான தண்டனைதான்" என்றார் புயா.

"இப்படிக் கூட ஒரு நகரமா!" என்று கண்கள் விரிய வியந்தார் நண்பர்.

தியேட்டரில் நண்பர்கள் காத்திருந்தனர். சென்னை நண்பரை மற்ற நண்பர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார் புயா. எல்லோரும் திரையரங்குக்குள் சென்றனர்.

திரையரங்கு திகைப்பூட்டும் கலைச் செறிவோடு, சுமார் ஆயிரம் பேர் அமர்ந்து காணக்கூடிய அளவில் இருந்தது. ஒரு தூசு துரும்பைக் கூட எங்கும் காண முடியவில்லை!

"ஒரு சிகரெட் துண்டைக் கூடக் காண முடியவில்லையே!" என்றார் இந்திய நண்பர்.

"இங்கே நினைத்த இடத்தில் நினைத்தபடி புகைக்க முடியாது. கம்பி எண்ண வேண்டும். பன்னிரண்டு வயதிற்குக் குறைந்தவர்கள் இங்கே சிகரெட்டை வாங்கக் கூட முடியாது. அப்படி யாராவது பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு விற்றால், கடையை மூடிக் கைது பண்ணிவிடுவார்கள். அதேமாதிரி, சிகரெட் பிடிக்கும் மாணவர்களையும் கைது செய்துவிடுவார்கள். எத்தனை செல்வாக்குள்ள மனிதராக இருந்தாலும் சட்டம் இங்கே சமம்" என்று பெருமைப்பட்டுக் கொண்டார் புயா.

படம் தொடங்கியது. இடைவேளையின் போது எல்லோரும் வெளியே வந்தனர்.

"சிறுநீர் கழிக்க இருபத்தைந்து செண்ட்ஸா (ஐந்து ரூபாய்)?" என்று அதிர்ந்தார் நண்பர்.

"கட்டணம் மட்டுமில்லை. போய்விட்டு, சுத்தம் செய்யும் பட்டனைத் தட்டிவிட்டு வர வேண்டும். தவறினால் தண்டனை" என்று கவனப்படுத்தினார் புயா.

எல்லோரும் ஐஸ் கிரீம் சாப்பிட்டனர். இடைவேளைக்காக வெளியே வந்தவர்கள் திரும்ப அரங்குக்குள் போய்க் கொண்டிருந்தார்கள்.

நண்பர்களில் ஒருவர் சிரித்துக் கொண்டே புயாவிடம் வந்தார்.

"என்ன, ஏதாவது போட்டியா? முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே?" என்றார் புயா.

"ஆமாம். படம் ஆரம்பித்த பிறகுதான் நாம் உள்ளே போகப் போகிறோம். ஒரே இருட்டாக இருக்கும். எங்களை நீங்கள் தான் வழிகாட்டி அழைத்துக் கொண்டு போகப் போகிறீர்கள். யாரிடமும் இது தானே நாங்கள் உட்கார்ந்திருந்த வரிசை என்று கேட்கக் கூடாது."

"ஜெயித்தால் என்ன பரிசு?"

"திரும்பும்போது நான் இன்னொரு ஐஸ்கிரீம் எல்லோருக்கும் வாங்கித் தருவேன். தோற்றுவிட்டால் நீங்கள் வாங்கித் தரவேண்டும்."

"வாருங்கள்" என்று முன்னே நடந்தார் புயா. அரங்கில் படம் ஓடிக் கொண்டிருந்தது. இருட்டு. ஓர் அனுமானத்தில் புயா ஒரு வரிசையை அடைந்து குனிந்தார்.

"ஐயா, போகும்போது உங்கள் காலையா தெரியாம மிதிச்சிட்டேன்?"

"ஆமாம். அதனால் என்ன பரவாயில்லே. போங்க."

தோற்ற நண்பரின் செலவில் எல்லோருக்கும் இரண்டாவது ஐஸ்கிரீம் கிடைத்தது.

"அந்தப் புதிய தொண்டரைக் கொஞ்சம் கண்டித்து வையுங்கள் ஐயா..." என்றனர் ஆசிரமத்தின் மற்ற தொண்டர்கள்.

"ஏன்... அவன் என்ன தவறு செய்தான்...?" என்று வினவினார் ஆசிரமத் தலைவர்.

"என்ன தவறா...? அவன் செய்பவை எல்லாமே தவறாகத்தான் இருக்கின்றன. எதை என்று சொல்வது? அவன் நம் ஆசிரமத்தின் விதிமுறைகளைப் பின்பற்றுவதே கிடையாது. சரியான நேரத்தில் எந்தச் செயலையும் செய்வதில்லை. குறிப்பாக, மாலை கூட்டுப் பிரார்த்தனையில் சரிவரக் கலந்து கொள்வதில்லை. எங்கேயாவது போய்விடுகிறான்," என்றனர் மற்ற தொண்டர்கள்.

"எங்கேயாவது என்றால், எங்கு போகிறான்? அதை நீங்கள் கவனித்தது இல்லையா...?"

"நம் ஆசிரமத்திற்கு அருகே கிராம இளைஞர்கள் வாலிபால் ஆடுகிறார்கள். இவனும் அவர்களோடு தினமும் ஆடப்போய் விடுகிறான். பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அதனால் தான் சரியாக வருவது கிடையாது."

இன்னொருவர் "இன்று இவன் தப்புச் செய்கிறான். நாளை இவனைப் பார்த்து இன்னும் சிலபேர் அப்படியே செய்வார்கள். அதன் பிறகு, ஆசிரமத்தின் ஒழுங்கும் கட்டுப்பாடுமே குலைந்து விடும் அல்லவா...?" என்றார்.

அவர்கள் சொல்வதையெல்லாம் தலைவர் பொறுமையுடன் கேட்டுக் கொண்டார். பதில் எதுவும் கூறவில்லை. அத்துடன் அந்த இளம் தொண்டரை அழைத்துக் கண்டிக்கவும் இல்லை. எல்லாம் தொடர்ந்து எப்போதும் போல் நடந்து கொண்டிருந்தன. நாளடைவில், மற்ற தொண்டர்கள், 'தலைவரிடம் கூறி விட்டோம்; நடவடிக்கை எடுப்பதும், எடுக்காததும் அவர் விருப்பம்' என்று அமைதியடைந்து விட்டனர்.

ஒரு மாதத்துக்கு மேல் ஆகி விட்டது. ஒரு நாள் ஆசிரமத்துக்குச் சில சாமான் கள் வாங்க வேண்டியிருந்தது. வழக்க மாக அருகில் உள்ள கல்கத்தா நகருக்குத் தான் செல்வார்கள். பட்டியல் தயாரா யிற்று. வழக்கமாகச் சாமான்கள் வாங்கச் செல்லும் இரு தொண்டர்களும் கிளம்பத் தயார் ஆனார்கள்.

"நீங்கள் போய், நமது ஆசிரமத்துக்கு வந்துள்ள புதிய இளம் தொண்டரை அழைத்து வாருங்கள்" என்றார் தலைவர். அவன் வந்ததும், "தம்பி! கொஞ்சம் கொஞ்சமாக நீ இந்த ஆசிரமத்தின் விதிமுறைகளையும், செயல்களையும் பழகிக் கொண்டு வருகிறாய் அல்லவா?" என்றார்.

"ஆம் ஐயா..." என்றான் அவன்.

"இன்று உனக்குப் புதிய வேலை ஒன்று கொடுக்கப் போகிறேன். ஆசிரமத்துக்குச் சாமான்கள் வாங்க இரண்டு தொண்டர்கள் கல்கத்தா செல்கிறார்கள்... நீயும் அவர்களுக்கு உதவியாகச் சென்று வா"

"சரி ஐயா..."என்றான் அவ்விளைஞன் மகிழ்ச்சியுடன்.

சாமான்களின் பட்டியலையும், அதற்குத் தேவையான பணத்தையும் இரண்டு பழைய தொண்டர்களிடம் கொடுத்த தலைவர், புதிய தொண்டரை அழைத்து, "இந்தா...நீ இதை வைத்துக் கொள்..." என்று தனியாகக் கொஞ்சம் பணத்தைக் கொடுத்தார்.

அந்த இளைஞன், 'ஏன்.. எதற்கு?' என்று புரியாமல் விழித்தான். மற்றவர்களும் கூடத்தான்.

பிறகு தலைவர் சொன்னார், "தம்பி, இந்தப் பணத்தைக் கொண்டு, நீ உனக்கு ஒரு வாலிபாலும், 'நெட்' வலையும் வாங்கிக் கொள்..."


நீங்களும் விளையாடுங்கள்!

இளைஞனுக்கு மகிழ்ச்சி. ஆனால், அவன் மீது புகார் கூறியவர்களுக்கு அதிர்ச்சி!

''இனிமேல் வாலிபால் விளையாட நீ நம் ஆசிரமத்தை விட்டு வெளியில் செல்ல வேண்டாம். நம் எல்லைக்குள்ளேயே விளையாடலாம்''

புகார் கூறியவர்கள் தலைவரின் போக்குப் புரியாமல் குழம்பினர்.

''தம்பி! நீ மட்டும் எப்படித் தனியாக வாலிபால் விளையாட முடியும்! எனவே, இந்த விளையாட்டில் ஆர்வமுள்ள வேறு சில தொண்டர்களையும் நீ உன்னுடன் சேர்த்துக் கொள்...'' என்ற தலைவர், அவர்களுக்கு விடையளித்தார்.



அவர்கள் சென்ற பிறகு, தன்னிடம் புகார் கூறிய மற்ற தொண்டர்களை ஒன்று கூட்டிய தலைவர், ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்தினார்.

-''என்ன...? ஏன் எல்லாரும் இப்படி அதிர்ச்சி அடைந்து நிற்கிறீர்கள்...? அவ்விளைஞன் வாலிபால் விளையாட வெளியில் செல்வதால், நம் ஆசிரமத்தின் ஒழுங்கும் கட்டுப்பாடும் கெடுகிறது என்கிறீர்கள் அல்லவா? உங்கள் கருத்து முற்றிலும் சரி...இனி அவன் அவ்வாறு வெளியில் செல்ல வேண்டியிராது. நம் ஆசிரம ஒழுங்கு கட்டுப்பாடு குலைவதற்கும் இனி வாய்ப்பு இல்லை. அதே நேரத்தில், மனிதனின் மற்ற முறையான செயல்கள் எவ்விதம் அவனிடம் ஒழுக்கத்தையும் கட்டுப் பாட்டையும் வளர்க்கின்றனவோ அதே போல் விளையாட்டுகளும் அக் குணங்களை வளர்க்கும். எனவே, இனி அவன் மட்டுமல்ல... நீங்களும் கூட, அதற்குரிய நேரத்தில் வாலிபால் ஆடுவதில் ஈடுபடுங்கள். ஓடி விளையாடுங்கள் அது உங்களிடம் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் மேலும் வளர்க்கும். அத்துடன் உங்களுக்கு, மற்ற ஆசிரமப் பணிகளைப் போல் நல்ல தேகப்பயிற்சியாகவும் அமைந்து, உங்கள் உடல் ஆரோக்யத்தைப் பேணிக்காக்கும்'' என்றார் தலைவர்.

தொண்டர்களுக்கு அப்போதுதான் தலைவரின் நிதானமான அணுகுமுறை புரிந்தது. அவர் கருத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர்.

அந்தத் தலைவர் வேறுயாருமல்ல 'லோக் நாயக்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட சர்வோதயத் தலைவர் 'ஜயப் பிரகாஷ் நாராயணன் அவர்கள்தான்!

ஜானகிமணாளன்



வேனைத் தாங்கிய விந்தைச் சிறுமி!

டிசம்பர் மாதம், 19 ஆம் தேதி. ஞாயிற்றுக்கிழமை. பிற்பகல் சுமார் மூன்று மணி. சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் ஐயப்பன் கோவிலுக்கு அருகே உள்ள செட்டிநாடு பள்ளி மைதானத்தில் ஒரு சிறு கூட்டம். என்னவென்று விசாரிக்கிறோம்.

''பதினாலு வயசு சிறுமி சார், மாருதி வேனைத் தன் மார்பில் தாங்குதாம்' என்று கூறினார் ஒருவர்.

அப்பொழுதுதான் அங்கே ஒரு மாருதி வேன் இருப்பதைக் கவனிக்கிறோம். நிகழ்ச்சிக்கு சிறப்புப் பார்வையாளராக ஆயுதப்படை போலீஸ் தலைவர் எஸ். சரவணப் பெருமாள் அவர்கள் வந்திருப்பதையும் காண முடிந்தது.

நேரம் ஓடியது. வேனைத் தாங்கிக் கொள்ள இருந்த ''துறு துறு'' சிறுமி வெள்ளை யூனிபார்மில் இருந்தாள். அவளுடைய மாஸ்டர் அந்த நிகழ்ச்சியின் சிறப்பை விளக்கினார். ஆசிரியரும், சிஷ்யையும் மைதானத்தில் நின்று தியானம் செய்தனர்.

ஒரு அடி அகலமும் பதினைந்து அடி நீளமும் கொண்ட ஒரு நீண்ட பலகையைக் கொண்டு வந்தனர். புல்தரையில் மல்லாந்து, கைகளைத் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டாள் சிறுமி. பலகையை அவளது மார்பில் வைத்தார்கள். பலகை மீது ஏறிவந்த சுமார் 1500 கிலோ எடையுள்ள மாருதி வேனை, சிறுமி தாங்கினாள்! இதுவரை பார்த்தறியாத காட்சி! ஆங்கிலப் படங்களில் வருகின்ற சாதனைகளுக்கு நிகரான மெய்சிலிர்க்க வைக்கும் காட்சி! கூடியிருந்தவர்கள் கை தட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். போலீஸ் அதிகாரிகளும் மற்றவர்களும் சிறுமியின் சாதனையையும், சிறுமியை அந்த அளவுக்குத் தயார் செய்துள்ள மாஸ்டரையும் பாராட்டினார்கள். இந்தச் செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

சிறுமி நிகழ்த்தியிருக்கும் சாதனை அல்லவா? கோகுலம் வாசகர் சார்பில் அந்த சாதனைச் சிறுமியைச் சந்திக்கச் சென்றோம். சிறுமியின் பெயர் சுபாஷிணி. இந்த சாதனையைச் செய்யப் பயிற்சி அளித்தவர் மாஸ்டர் ஜாகிர்.

இத்தனை பெரிய சாதனையைச் செய்துள்ளோம் என்ற பெருமை சிறிது கூட இல்லாமல் மகிழ்ச்சியோடு வரவேற்றாள் சுபாஷிணி. பேட்டி தொடங்கியது.

''சிறுமிகள் கற்பதற்கு என்று எளிமையான கலைகள் பல இருக்க, இந்தக் கராத்தே கலையைக் கற்க வேண்டும் என்று நீ தேர்ந்தெடுத்தது புதுமையாக இருக்கிறதே! இதற்கு என்ன காரணம்?''

''எங்க தாத்தா நாராயணசாமி, விளையாட்டில் ஆர்வமுடையவர். முறையாகக் குத்துச் சண்டை, சிலம்ப ஆட்டக்கலை பயின்றவர். 'பெண் கல்வி பரவிவரும் இந்தக் காலத்தில், பெண்கள் தங்களைக் காத்துக் கொள்ளக் கூடிய அளவுக்காவது தற்காப்புக் கலைகளைக் கற்று வைத்திருப்பது அவசியம்' என்று அடிக்கடி கூறுவார். எங்கள் பள்ளியின் சார்பில் சில மாணவிகளுக்குப் பயிற்சி கொடுக்க எங்கள் மாஸ்டர் முன் வந்த போது, என்னைப் பெயர் கொடுக்கும்படி தாத்தாதான் ஊக்கப் படுத்தினார்.''



சாதனை

''இதற்கு வீட்டில் பாட்டி, அம்மா, அப்பா யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையா?''

''கடுமையான எதிர்ப்பு. 'வளர்ந்ததும் கல்யாணம் செய்து கொடுக்கப் போகும் பொண்ணுக்கு இதெல்லாம் அவசியமா?' என்று பாட்டிதான் எதிர்ப்புக் காட்டினார். எங்க தாத்தா எந்தக் காரியம் செய்தாலும் அது நல்லதாகத்தான் இருக்கும் என்பது அப்பா, அம்மா எண்ணம். அதனால், பெற்றோர்கள் அதிகம் எதிர்ப்புக் காட்டவில்லை. பாவம் பாட்டிதான் கடைசிவரை சம்மதிக்கவில்லை. ஆனால், தாத்தா எடுத்த முடிவு எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நான் பெயர் கொடுத்தேன். என்னைத் தேர்ந்தெடுத்தார்கள்.''

''உனக்கு அளிக்கப்பட்ட பயிற்சியைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகக் கூறேன்?''

''சிலம்பம், களறிப் பயிற்று, ஜூடோ போன்ற பதினைந்து கலைகளைச் சேர்த்து உருவாக்கப்பட்ட தற்காப்புக்கலைக்குப்பெயர், 'மெய்ஜின் கராத்தே டோ.' எங்க மாஸ்டர் எஸ். ஜாகிர் அவர்கள் திருவல்லிக்கேணியில் ஒரு கராத்தே பள்ளியை இதே பெயரில் நடத்தி வருகிறார். இதில்தான் எனக்குப் பயிற்சி தந்தார்கள்.''

''எத்தனை மாதப் பயிற்சி?''

''சுமார் ஐந்து மாதங்களாகத்தான் பயிற்சி பெற்று வருகிறேன்.''

''அதற்குள்ளாகவா இதைச் செய்திருக்கிறாய்!''

''எங்க மாஸ்டரைப் பொறுத்த வரை இது பெரிய சாதனையே இல்லை. இந்தப் பயிற்சியின் குறிக்கோள் மூச்சுக் கட்டுப்பாடு, மன ஒருமைப்பாடு ஆகியவற்றை முறைப்படி செய்து முன்னேறியவர்களால் உலகத்தில் எதையும் சாதிக்க முடியும் என்பதாகும். இதில் எந்த அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறோம் என்பதை



● மாஸ்டருடன் சுபாஷிணி

மற்றவர்களுக்கு உணர்த்தவும், நம்மை நாமே சோதித்துக் கொள்ளவோமே ஏற்பட்டவைதான் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம்.''

''உன்னுடன் கூட எத்தனை பேர் கற்கிறார்கள்?''

''எங்க குரூப்பில் சுமார் அறுபது பேர் இருக்கிறோம்.''

''அத்தனை பேரில் இந்தச் சாதனையைச் செய்ய மாஸ்டர் ஏன் உன்னை மட்டும் தேர்ந்தெடுத்தார்?''

''திருப்பித் திருப்பிச் சொல்றேன். இது சாதனையே இல்லை. எங்களுடைய திறமை எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதைச் சோதித்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட வாய்ப்புத்தான். எங்களுடைய மூச்சுக் கட்டுப்பாடு, மன ஒருமைப்பாடு எல்லாம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மாஸ்டர் சோதனை செய்வார். இது அடிக்கடி நடக்கும். இதில் அதிக அளவு முன்னேற்றத்தை நான் காட்டினேன் என்று மாஸ்டர் என்னைத் தேர்ந்தெடுத்தார். வீட்டிலே தாத்தாவிடம் கூறி, நான் இதைச் செய்ய முடியும் என்றும் விளக்கி அனுமதி கேட்டார். தாத்தாவைத் தவிர யாரும் இதற்குச் சம்மதிக்க வில்லை. தாத்தா அளித்த உற்சாகமும், மாஸ்டர் அளித்த பயிற்சியும்தான் என்னை இதைச் செய்ய வைத்தது.''

''இதற்கென்று சிறப்பான பயிற்சி தந்தார்களா?''

''இதற்கு என்று இல்லை. என்னை இதற்குத் தயார் படுத்துவது என்று முடிவான பிறகு டூ வீலர்ஸ் (இரண்டு சக்கர வண்டிகள்) வகைகளை ஒவ்வொன்றாக ஏற்றித் தாங்க வைத்துப் பார்த்தார்கள். புல்லெட், ஹீரோ, சுசுகி, டி.வி.எஸ். சாம்ப் என்று பல விதமான வண்டிகளையும் நாளுக்கு ஒன்றாக ஏற்றி வைத்துப் பரிசோதித்தார்கள். எல்லாவற்றையும் நான் சிறப்பாகச் செய்தேன் என்று மாஸ்டர் கூறினார். அதற்குப் பிறகு கடைசியில்தான் பொது மக்கள் முன்னிலையில் மாருதி வேனைத் தாங்கும் நிகழ்ச்சியைச் செய்தேன்.''

''அந்த நிகழ்ச்சியைக் காண அப்பா, அம்மா, பாட்டி எல்லோரும் வந்தார்களா?''

''எங்க பாட்டி வரவே மாட்டேன்னுட்டாங்க. அம்மா, அப்பா கடைசில வந்தாங்க. ஆனால், எங்க தாத்தாதான் என்னை உற்சாக மூட்டிக்கிட்டே இருந்தார். என்னுடைய தன்னம்பிக்கையை இந்த அளவுக்கு வளர்த்துப் பயிற்சி தந்திருக்கும் எங்க மாஸ்டர்தான் இந்தப் பெருமைக்கெல்லாம் காரணம்.''

''காரை ஏற்றியபோது உனக்குக் கொஞ்சம் கூட பயமாக இல்லை?''

''இல்லவே இல்லை. காரணம், நான் மூச்சுக் கட்டுப்பாடு செய்து கொண்டேன். அதை என்னால் உணரவே முடியவில்லை.''

''இது பெரிய சாதனை தானே?''

''நீங்களெல்லாம் கூறுவதால் இது சாதனை. எங்க மாஸ்டருக்கு இதெல்லாம் சர்வ சாதாரணம். வெறும் கைகளில் வளையங்களை மாட்டி எதிரெதிர் திசையில் வேகமாகப் புறப்பட்டுச் செல்லும் இரண்டு பஸ்களை, அவர் நிறுத்தியிருக்கிறார். 8070 கிலோ எடையுள்ள பஸ்ஸில் 25 பயணிகளை வைத்து, தன் தலை முடியால் இழுத்துக் காட்டியிருக்

கிறார். ஏழு பஸ்களை ஒன்றின் பின் ஒன்றாக இணைத்து (TOE) தலை முடியால் இழுக்கப் போகிறார்.''

''இதெல்லாம் செய்ய உடல் வலிமை தேவையே இல்லை. மனக் கட்டுப்பாடு, மூச்சடக்கும் திறமை இருந்தால் போதும்! தனியான உணவு வகை, பயிற்சி ஏதும் அவசியம் இல்லை. தமிழகம் முழுவதும் எங்க மாஸ்டருக்கு நூற்றுக் கணக்கான மாணவர்கள் இருக்கிறார்கள். பல இடங்களில் பயிற்சி வகுப்பு நடத்துகிறார்.''

''உன்னால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது இருக்கிறதா?''

''நான் மாருதி வேனைத் தாங்கிக் கொண்டதுதான்.''

''இந்தப் பெருமைக்கு எல்லாம் யார் காரணம் என்று நினைக்கிறாய்?''

''முதலில் எனக்குத் தன்னம்பிக்கையை வளர்த்துப் பயிற்சி தந்த மதிப்புக்கு உரிய மாஸ்டர் அவர்கள். பள்ளியில் அடிக்கடி என்னை அழைத்து என் முன்னேற்றம் குறித்து அக்கறையோடு கேட்டு உற்சாக மூட்டிவரும் எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் வாசுதேவன் அவர்கள், என் வகுப்பு ஆசிரியர்கள், எனக்குத் தளராத ஊக்கமளித்து வரும் எங்க தாத்தா நாராயண சாமி ஆகியோர் தான்,'' என்று அடக்கமாகச் சிரித்தாள் சுபாஷிணி.

14 வயதே ஆன சுபாஷிணி நங்கநல்லூரில் பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 9 ஆவது படித்து வருகிறாள். தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், ஹிந்தி தெரியும். தந்தையார் மகேந்திரன் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் பணியாற்றுகிறார். அம்மா ரமணாபாய். சுபாஷிணிக்கு சுரேந்திரன் என்று ஒரு தம்பி, சுஹாசினி என்று ஒரு தங்கை. சுபாஷிணி தாத்தாவுக்குச் செல்லம். தாத்தாவுடனேயே இருக்கிறாள். பயிற்சி இவளது படிப்புக்குத் தடையாக இல்லை.

''கோகுலம் தம்பி தங்கைகளுக்கு என்ன கூற விரும்புகிறாய்?''

''இந்தப் பயிற்சியை எல்லோரும், குறிப்பாகத் தங்கைகள் அவசியம் கற்க வேண்டும். மன ஒருமைப்பாட்டுக்கு இது பெரிதும் உதவுகிறது. இதனால் ஞாபக சக்தி கூடுகிறது. படிப்புக்கு இது பெரிதும் உதவியாக இருக்கும். தற்காப்புக்காகவாவது இந்தக் கலையைத் தங்கைகள் கண்டிப்பாகக் கற்க வேண்டும். இதைக் கற்க வயது வரம்பே கிடையாது. எந்த வயதிலும் கற்கலாம்'' என்றாள் சுபாஷிணி.

சுபாஷிணி செய்துள்ள சாதனை இந்திய அளவில் குறிப்பிடத் தக்கது. இதற்கு முன் 22 வயது இளைஞர் ஒருவர் ஒரு ஜீப்பை மார்பில் தாங்கியிருக்கிறார். சுபாஷிணியின் மாஸ்டர் ஜாகிரின் இன்னொரு மாணவியான விஜயஸ்ரீ, ஒரு அம்பாசிடர் காரைத் தன் தலை முடியால் இழுத்துக் காட்டியவர். இவர்கள் எல்லோரையும் விட வயதில் சிறியவள் சுபாஷிணி. எனவே, அகில இந்திய அளவில் இது குறிப்பிடத்தக்க சாதனை. வெகு விரைவில் கின்னஸ் சாதனையின் பட்டியலிலும் கூட இடம் பிடிக்கக் கூடிய வாய்ப்பு சுபாஷிணிக்கு இருக்கிறது. கோகுலம் வாசகர் சார்பில் நமது அட் வான்ஸ் வாழ்த்துகள்.

– ரே

அட்டை வண்ணப்படம் :
கோபிநாத்

''அம்மா! அப்பா குட்டிக் கதை சொன்னாரு...''

''அதை ஏண்டா இப்படி அழுதுகிட்டே சொல்றே?''


''பின்ன என்ன? தலையிலே 'குட்டிக் குட்டி' கதை சொன்னால் எனக்கு வலிக்காதா?''

– வி.சி. கிருஷ்ணரத்தினம்



மோப்பம்


ஆழி



மூச்சை இழுக்கும்போது காற்றானது மூக்கின் உட்புறத்தின் வழியே ஒரு குழாயை அடைந்து, அங்கிருந்து நுரையீரலுக்குச் செல்லுகிறது. மனிதனின் மூக்குத் துளையின் மேல் பகுதியில் ஒரு சிறு அளவுக்கு உள்ள பகுதியே மோப்ப சக்தியைக் கொண்டிருக்கிறது.



இந்தப் பகுதியில் கோடிக் கணக்கான மோப்ப நுண் இழைகள் இருக்கின்றன. காற்றோடு வருகின்ற ரசாயனத் துகள்கள் இந்த நுண் இழைகளைத் தொடுகின்றன. இவை மூளையுடன் தொடர்பு கொண்டு மோப்ப உணர்ச்சியை அறிகின்றன. இவற்றால் ஆயிரக்கணக்கான வாசனை வேறுபாடுகளை உணரமுடியும்!




மனித உடலில், தோலில் சுரக்கும் ‘பெரமோன்’ என்னும் பொருளால்தான், ஒருவர் உடலுக்கும் மற்றவர் உடலுக்கும் உள்ள வேறுபாட்டினை மோப்பத்தின் மூலம் அறிய முடிகிறது.

பிறந்து 40 நாட்கள் ஆன பிறகே, ஒரு குழந்தைக்கு மோப்ப உணர்வு தீவிரமடைகிறது. அப்போதுதான், குழந்தை தன் தாயையும் மற்றவர்களையும் மோப்ப சக்தியின் மூலம் பிரித்து அறிந்து கொள்ளுகிறது.



ஆண்களைவிட, பெண்களுக்கே மோப்ப சக்தி அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

50 வயதுக்குப் பிறகு அனைவருக்குமே மோப்ப சக்தி குறையத் தொடங்குகிறது.



பார்க்கும் சக்தியும் கேட்கும் சக்தியும் இல்லாத அமெரிக்கப் பெண்மணி ஹெலன் ஹெலஸ்லருக்கு மோப்ப சக்தி அதிகம். அவர் பல கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பால் வரும்போதே அங்கே என்னென்ன தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து விடுவார்! அதுமட்டுமல்ல, ஒரு தேவாலயத்திற்குப் பக்கத்தில் வரும்போது, அது கத்தோலிக்க தேவாலயமா, ப்ராட்டஸ்டன்ட் தேவாலயமா என்பதைக்கூட கண்டுபிடித்து விடுவார்!






மனிதனுக்கு உள்ள பெரமோன் சுரப்பு கொரில்லாவுக்கும் உண்டு. இந்தச் சுரப்பின் வாசனையை மோப்பம் பிடித்து, கொரில்லாக்கள் 5 கிலோமீட்டருக்கு அப்பால் உள்ள மற்ற கொரில்லாக்களைத் தேடிக் கண்டுபிடிக்கின்றன!




உலகில் உள்ள மனித இனங்களில், ஆஸ்திரேலிய ஆதிவாசிகளுக்குத்தான் மோப்ப சக்தி அதிகம்; மோப்ப சக்தியினால் கொலைகாரனைக்கூட கண்டுபிடித்துவிடுவார்கள்! சுற்றுப்புறத்தில் எந்தத் திசையில் என்ன விலங்கு இருக்கிறது என்பதை மோப்பத்தினால் கண்டுபிடித்துவிடுவார்கள். உணவே கிடைக்காத பொட்டல் வெளியில், கிடைப்பதைச் சாப்பிட்டாக வேண்டும் என்பதால், உணவைத்தேட, இயற்கையிலேயே அவர்களுக்கு மோப்ப சக்தி அதிகம்!



பொதுவாக, காட்டு விலங்குகள் 'வோமிரோநேசல்' என்னும் மோப்ப நுண் இழைகள் மூலம் பல கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தே உணர்ந்து கொள்ளுகின்றன. இந்த மோப்ப உணர்வு, ஒன்றையொன்று நாடி வருவதற்கு, அல்லது விலகி ஓடிவிடுவதற்குப் பயன் படுகின்றன.



தேவாங்கு என்னும் விலங்கின் கால் இடுக்குகளில் கசியும் ஒரு திரவத்தைத் தூரத்திலிருந்தே மோப்பம் பிடிக்கும் பயங்கர விலங்குகள் கூட நாற்றம் சகிக்க முடியாமல் ஓடி விடுகின்றன. மிக மெதுவாகச் செல்லும் தேவாங்குக்கு இது ஒரு பாதுகாப்பு!



மான் இனங்களில், ஆண் மானின் கண்களுக்கு அருகில், வாசனைச் சுரப்பி உள்ளது. இச்சுரப்பியில் இருந்து வரும் வாசனையை வெகு தூரத்திலிருந்து மோப்பம் பிடித்து, ஆண் மான் இருக்கும் இடத்தை நாடி, பெண் மான்கள் வருகின்றன!

ஓநாயின் மோப்ப சக்தி மனிதனின் மோப்ப சக்தியைப் போல 14 மடங்கு அதிகம்! அது 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள தன் இரையைக் காற்றோட்டத்தின் வழியே மோப்பம் பிடித்து அறிந்து கொள்ளும்!







ஆனால், நாய்களுக்கு மனிதனின் மோப்ப சக்தியைப்போல் 100 மடங்கு அதிகம்! அதனால்தான் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நாய்களைப் பயன்படுத்து கிறார்கள்



ரஷ்யாவில், பூமிக்கு அடியில் மறைந்து கிடக்கும் உலோக தாதுக்களைக் கண்டுபிடிக்க நாய்களைப் பயன்படுத்துகிறார் கள். தவிர, அங்கே நல்ல நோட்டு எது, கள்ள நோட்டு எது என்பதைக்கூட நாய்கள் மோப்பத்தினால் கண்டு பிடித்து விடுகின்றன!

தனக்குப் பிடித்த ஒரு தேன்கூடு இருக்கும் இடத்தைச் சுமார் 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தே ஒரு கரடி மோப்பத்தினால் கண்டுபிடித்துவிடும்!






யானை மோப்பம் பிடிப்பது துதிக் கையால் அல்ல; அதன் வாயின் மேல்பகுதியில் உள்ள நுட்ப மான நுகரும் நரம்புகளால்! ஒரு யானை முழுத் தேங்காயின் உள்ளே அழுகியிருப்பதைக் கூட கண்டுபிடித்து விடும்; தின்னாது!

மீன்களில் சுறாவுக்கு மோப்பசக்தி அதிகம். கடலில் காயம்பட்ட மனிதன் வெகு விரைவில் நீரைவிட்டு வெளியேறிவிட வேண்டும். இல்லாவிட்டால், நீரில் கரைந்திருக்கும் ஒரு துளி இரத்தத்தைக்கூட சுறாமீன் மோப்பம் பிடித்து வந்து அவனைக் கடித்துக் குதறிவிடும்!




பறவைகளின் வாலின் அடியில் சுரந்து கொண்டிருக்கும் ஒரு விதச் சுரப்பியின் வாசனையினால் தான் அவை ஒன்றை யொன்று மோப்பம் பிடித்து இனம் கண்டு கொள்ளுகின்றன. ஆனால், ஒரு பறவை தன் முட்டைகளை அடைகாத்துக் கொண்டு இருக்கும் போது, இந்தச் சுரப்பி சுரப்பதில்லை! அதனால், எதிரிகளால் இது இருக்கும் இடத்தை மோப்பம் பிடிக்க முடிவதில்லை. இது படைப்பின் அதிசயம்!






பறவைகளில், கிவி பறவைக்கு மட்டுமே மோப்ப சக்தி மாறுபாடானது. கிவி பறவை, அலகின் முனையில் உள்ள துளையின் வழியாக, தரையில் உள்ள புழு, பூச்சிகளை மோப்பத்தினால் அறிகிறது!



‘சக்கரவர்த்தி விட்டில் பூச்சிகள்’ ஒருவித வாசனையைப் பரப்புகின்றன. ஒரு விட்டில் பூச்சியை மற்ற விட்டில் பூச்சியைக் காற்றின் மூலம், தன் தலையில் உள்ள உணர் கொம்புகளின் உதவியால், சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தே அறிந்து கொண்டு விடும்!



பட்டுப் பூச்சியின் மோப்ப சக்தியும் அதிகம்தான். ஒரு பட்டுப் பூச்சி, காற்றோட்டத்தில் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தன் ஜோடியைக் கண்டுபிடித்துவிடும்!



சின்னஞ்சிறிய தேனீக்கு மோப்பம் பிடிக்க 5000 நுண்ணிய மோப்பத்துளைகள் உள்ளன. 750 மீட்டர்களுக்கு அப்பால் உள்ள ஒரு பூவின் மணத்தைக் கூட அதனால் நுகர முடியும்!



ஒரு கூட்டத்தில் உள்ள எறும்பு ஒன்று பிரிந்து போய், பல மாதங்கள் கழித்துத் திரும்பி வந்தாலும், மற்ற எறும்புகள் மோப்பத்தினால் அதைக் கண்டு கொண்டு, தங்களுடன் சேர்த்துக் கொள்ளும்!

உத்தமபுரியில் செந்தூரன் என்று ஒரு வியாபாரி இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள், ஒரு பெண். பிள்ளைகளான கமலராஜனும், பவளராஜனும் பெரியவர்கள். சுயநலமே உருவானவர்கள். பெண் நல்லம்மா, பெயருக்கேற்ப நல்லவள்.

செந்தூரனுக்கு வியாபாரத்தில் எதிர்பாராத நஷ்டம் ஏற்பட்டது. அவருடைய கூட்டாளி, அவரை ஏமாற்றி விட்டு, செல்வத்தையெல்லாம் சுருட்டிக் கொண்டு கண்காணாத நாட்டுக்கு ஓடிவிட்டான். கடன்காரர்கள் செந்தூரனை வந்து பிடித்துக் கொண்டார்கள். செந்தூரன் அவர்களை ஏமாற்ற விரும்பவில்லை. எல்லாச் சொத்துக்களையும் விற்றார். கடன் பட்டதை எல்லாம் அடைத்தார்.

மிஞ்சி நின்றவை வீடும், இரண்டு பசு மாடுகளும் மட்டுமே. கமலராஜன் வீட்டைத் தன் பெயருக்கு எழுதி வாங்கிக் கொண்டான். இரண்டாவது பிள்ளை இரண்டு பசுமாடுகளையும் எடுத்துக் கொண்டான்.



வைர இரகசியம்

சின்னபாபு

தந்தை, தாய், சிறுமி நல்லம்மா ஆகிய மூவரையும் இரண்டு பிள்ளைகளும் வீட்டை விட்டு விரட்டி விட்டனர்.

மனம் ஒடிந்து நோய் வாய்ப்பட்ட தந்தைக்கு ஆறுதல் கூறிய நல்லம்மா, பெற்றோரை அழைத்துக் கொண்டு ஒரு காட்டுக்கு வந்தாள். ஒரு எளிய குடிசை போட்டுக் கொண்டு மூவரும் வசித்தனர்.

நல்லம்மா தினமும் காட்டு மலர்களைப் பறித்து மாலை கட்டி, அருகில் உள்ள நகருக்கு நடந்து சென்று விற்று விட்டு வருவாள்.

ஒரு நாள் நகருக்குச் சென்று மாலை விற்று விட்டு வரும்போது நேரமாகிவிட்டது. அன்று அலைச்சல் வேறு அதிகமாக இருந்தது. பசிவேறு. அதனால் களைத்துப் போன நல்லம்மா, தன்னை மறந்து ஒரு பன்னீர் மரத்தின் அடியில் படுத்துத் தூங்கி விட்டாள்.

நல்லம்மா மறுபடி கண் விழித்துப் பார்த்த போது அவள் எதிரே ஓர் அதிசயக் காட்சி தெரிந்தது. உடல் முழுவதும் 'தக தக'வென்று ஒளி வீசிய வைரப் பாம்பு ஒன்று மின்னலாக நெளிந்து பக்கத்தில் உள்ள புதருக்குள் விரைந்து மறைந்தது! வைரப் பாம்பு நெளிந்து சென்ற பாதையில் இருந்து மனத்தை மயக்கும் நறுமணம் வீசியது!

நல்லம்மா மணம் வீசிய அந்த இடத்தைத் தன் கைகளால் தொட்டு முகர்ந்து பார்த்தாள். மணத்தை என்னவோ பண்ணியது. தலை சுழன்றது. அவளுக்குள் என்னவோ ஒரு மாறுதல் ஏற்பட்டது. இரண்டு விநாடிகளில் நல்லம்மா குறுகிக் குறுகி, சாண் அளவுக்குக் குறுகி விட்டாள்!


நல்லம்மா பயந்து போனாள். இந்த ஆபத்தில் இருந்து எப்படிப் பழைய உருவை அடைவது? பாம்புக்கும் தான் சாண் அளவுக்குக் குறுகிப் போனதற்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்ட நல்லம்மா, பாம்பைப் பின் தொடர முடிவு செய்தாள். வாசனையை அடையாளமாக வைத்துக் கொண்டு ஓடினாள். புதருக்குள் ஒரே கார் இருள். பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் மன உறுதியை இழக்காது, நறுமணத்தை அடையாளமாக வைத்துக் கொண்டு விரைந்தாள்.

பலமணி நேரம் சென்ற பிறகு இருள் பாதை ஒரு முடிவுக்கு வந்தது. அது ஒரு பளிங்கு மாளிகை. அழகு கொஞ்சியது. மாளிகையில் பெரிய மண்டபம். அரச சபை போல் இருந்தது. சிங்காதனத்தில் வைரப் பாம்பு படமெடுத்து அமர்ந்திருக்க, இரு பக்க ஆசனங்களிலும் பாம்புகள்! இரண்டு தலை, ஐந்து தலை, பத்துத் தலை என்று எல்லாம் இருந்தன!

பார்த்த உடனேயே அது நாக லோகம் என்பதை நல்லம்மா உணர்ந்து கொண்டாள். ஒரே ஓட்டமாக ஓடி சிங்காதனத்திற்கு அருகில் மண்டியிட்டு வணங்கினாள்.

''மானிடப் பெண், நம்ம நாக லோகத்திற்குள் வருவதாவது!''

''இவள் பெரிய மாயக்காரியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இங்கு எப்படி உயிருடன் வரமுடியும்? இவளைத் திரும்பப் போக விடக் கூடாது'' என்று சீறினர் அரசவை நாகங்கள்.



நல்லம்மா நடுங்கினாள்.

''சிறிது பொறுமையாக இருங்கள் நாம் இருக்கும் இடத்திற்கு மாயக்காரிகள்தான் வர வேண்டும் என்று இல்லை. நற்பண்புகள் நிறைந்த தெய்வ அருள் மிக்க மனிதப் பிறவிகளும் வரலாம். இந்தச் சிறுமியையே விசாரிப்போம். இவள் நம் உதவி இன்றி வெளியே போக முடியாது'' என்று தனது அதிகாரிகளை சமாதானப் படுத்திய நாகராஜன், நல்லம்மாவை நோக்கிப் புன்னகை புரிந்தார்.

நல்லம்மா நன்றி உணர்வுடன் அவரைக் கைகூப்பினாள்.

''சிறுமியே, நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று கேட்டார் நாகராஜன்.

நல்லம்மா நடந்ததைக் கூறினாள்.

''நல்லம்மா, நீ நல்ல பண்பு மிக்க மனிதப் பிறவி. சாதாரண மனிதக் கண்களுக்கு நாங்கள் தென்பட மாட்டோம். நீ குணவதி என்பதால்தான், என்னைப் பார்த்திருக்கிறாய். என்னுடைய நறுமணப் பாதையைத் தரிசித்து, முகர்ந்து, உருவம் குறுகி இங்கே வந்திருக்கிறாய். உனக்கு என்ன வேண்டும்? கேள்?'' என்றார் நாகராஜன்.



''நான் பேராசை இன்றி உழைத்துப் பிழைத்து என் பெற்றோர்களைக் கடைசி வரை காப்பாற்ற வேண்டும். மற்றவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். எனக்கு என்னுடைய பழைய உருவம் கிடைக்க வேண்டும்'' என்றாள் நல்லம்மா.

''நல்லம்மா, இங்கே இந்த அரசவையைச் சுற்றிப்பார். வைர வைடூரியங்களும், நவரத்தினங்களும் குவிந்து கிடக்கின்றன. இவைகளில் எதுவுமே உனக்கு வேண்டாமா?'' என்று திகைப்புடன் கேட்டார் நாகராஜன்.

''தேவனே! இவை கண்டிப்பாக மனிதர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுபவைதான். சந்தேகமே இல்லை. ஆனால், என் அப்பாவின் மடியில் படுத்துக் கொண்டு, சாதத்தைப் பிசைந்து என் வாயில்

கழுதைக் குட்டி!



பட்டு மேனி பளபளக்கும்
பார்த்து மகிழ அழகிருக்கும்
பட்டுக் குஞ்ச வாலிருக்கும்
பாலைக் குடித்து வளர்ந்திருக்கும்!

துள்ளி யோடிக் களித்திருக்கும்
தூய்மை யான உடலிருக்கும்
அள்ளிக் கொஞ்சும் வடிவிருக்கும்
அன்புப் பார்வை நிறைந்திருக்கும்!

குட்டி வளர்ந்து அழகிழக்கும்
குண்டுக் கழுதை பொலிவிழக்கும்
எட்டி உதைக்கப் பார்த்திருக்கும்
ஏற்றப் பொதியைக்
கொண்டிழுக்கும்!

குப்பை மேட்டில் புரண்டிருக்கும்
குட்டிச் சுவரில் நின்றிருக்கும்
தொப்பை வயிறு பெருத்திருக்கும்
தொண்டு பலவும் செய்திருக்கும்!

– பாக்கியமணாளன்

ஊட்டி அம்மா கதைகள் கூறும் போது நான் அடையும் மகிழ்ச்சியையும், பேரானந்தத்தையும் இந்த விலை மதிப்பிலாத புதையலால் தர முடியுமா? எனக்கு இவை வேண்டாம். என் பெற்றோர் தான் வேண்டும்'' என்றாள் நல்லம்மா.

''நீ குணவதி. இங்கே வந்தவர்கள் உயிருடன் திரும்பிப் போனதாக சரித்திரமே கிடையாது. உன்னை உன் சுய உருவத்துடன் வெளியே கொண்டு போய் விடும்படி செய்கிறேன். உன்னுடைய நல்ல உள்ளத்திற்குப் பரிசாக இதைத் தருகிறேன்'' என்று நவரத்தினங்கள் நிறைந்த ஒரு பையை நல்லம்மாவிடம் கொடுத்தார் நாகராஜன்.

நல்லம்மா மண்டியிட்டு வணங்கி நன்றி கூறினாள்.


''ஆனால் ஓர் எச்சரிக்கை நல்லம்மா. இந்த நாகலோகத்தில், விலை மதிப்பற்ற செல்வம் குவிந்து கிடக்கும் உண்மையையும், உனக்குப் பரிசாக அளிக்கப்பட்டுள்ள நவரத்தினங்கள் உனக்கு எங்களால் பரிசளிக்கப்பட்ட செய்தியையும் நீ வெளியிட்டால் அடுத்த கணமே பாம்பாக மாறிவிடுவாய்'' என்று எச்சரித்தார் நாகராஜன். நல்லம்மா திகைப்புடன் தலையாட்டினாள். பிறகு நாகராஜன் அவள் கண்களை மூடிக்கொள்ளும்படி கூறிவிட்டு அவளைப் பார்த்துச் சீறினார்.

உடனே பலத்த சுழல் காற்று வீசியது. புழுதி நல்லம்மாவை மறைத்தது. புழுதி அடங்கி, சுழற்காற்றும் சாந்தமடைந்த போது நல்லம்மா, பழைய உருவத்துடன் மரத்தடியில் இருந்தாள். நடந்தது கனவல்ல என்பதை அவள் கையில் இருந்த நவரத்தினப்பை உணர்த்தியது.

தந்தையிடம் ஒரு நவரத்தினக் கல்லைக் கொடுத்து விற்று வரும்படி கூறினாள்.

''இது ஏதும்மா?''

''நதியைக் கடந்து வந்த போது இவை கிடைத்தன'' என்று பொருத்தமான ஒரு பொய்யைக் கூறினாள் நல்லம்மா.



"ஐயா... சாமி! தர்மம் பண்ணுங்கய்யா!"

"உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால் என் பெயரைச் சொல்லிப் பிச்சை கேட்பே?"

– பா. நிவேதிதா

நவரத்தினக் கற்கள் செந்தூரனின் வாழ்க்கையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின. அவர் மீண்டும் வியாபாரத்தைத் தொடங்கினார். பணம் குவிந்தது.

நல்லம்மாவிடம் விலை மதிப்பு மிக்க இரத்தினக் கற்கள் இருக்கும் செய்தி மன்னருக்கு எட்டியது. அடுத்த முறை, செந்தூரன் நவரத்தினத்தை விற்க வந்தபோது அரசாங்கக் காவலர்கள் அவரைக் கைது செய்து மன்னர் முன் நிறுத்தினர். நல்லம்மா வரவழைக்கப்பட்டாள்.

''இவை எங்கிருந்து கிடைத்தன என்ற உண்மையைக் கூறாவிட்டால் ஆயுள் முழுவதும் சிறை தண்டனை தான்'' என்று மிரட்டினார் அரசர்.

நல்லம்மா கூற மறுத்தாள். நல்லம்மாவை அவள் பெற்றோருடன் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்தினார் மன்னர். நல்லம்மாவிடம் இருந்து இரகசியம் வெளிவரவில்லை. சிறையிலேயே வாடினாள்.

உத்தமபுரியில் பயங்கரமான பூகம்பம் ஏற்பட்டு, நகரமே அரண்மனை உட்பட இடிந்து புதைந்தது. இலட்சக் கணக்கான மக்கள் எல்லாவற்றையும் இழந்து கதறினர். மன்னரும் மறைந்து போனார். இத்தனை கொடுமைகளுக்கு இடையேயும் நல்லம்மா சிறை இருந்த பாதாளச், சிறை மட்டும் அதிசயமாகத் தப்பியது!

தந்தையை அழைத்தாள் நல்லம்மா.

''அப்பா, நம் நாட்டுமக்கள் எல்லாவற்றையும் இழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு தர வேண்டும். நாகலோகத்தில் புதைந்து கிடக்கும் நவரத்தினக் கற்களில் இருந்து சிறிது கிடைத்தால் கூட இவர்களுக்கு உதவி புரியலாம். நாகலோகத்திற்குச் செல்லும் வழியைக் கூறுகிறேன். இதை நான் கூறி முடித்ததும் நான் பாம்பாக மாறிவிடுவேன். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. இலட்சக்கணக்கான மக்களுக்கு இதனால் புது வாழ்வு கிடைக்கும் என்பதே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது'' என்று தொடங்கினாள் நல்லம்மா.

கூறி முடித்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்தபடி நல்லம்மா பாம்பாக மாறவில்லை. அவளுக்கு ஒரே திகைப்பு!

எதிரே ஓர் ஒளி தோன்றியது. அதில் வைரப் பாம்பு!

''என்ன திகைக்கிறாய் நல்லம்மா? இரகசியத்தை வெளியிட்டதும் பாம்பாக மாறவில்லையே என்றுதானே? நீ உன் சுயநலத்திற்காக இரகசியத்தை வெளியிடவில்லையே? அதற்காகத் தானே இத்தனை சிறைக் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டாய்? இலட்சக் கணக்கான மக்களின் கண்ணீரைத் துடைத்து அவர்கள் புதிய வாழ்வு தொடங்க வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்திற்காகத்தானே, பாம்பாகவும் மாறிவிடத் துணிந்தாய்? உன் தியாகத்திற்கு நான் மதிப்பளிக்க வேண்டாமா?'' என்று சிரித்தார் நாகராஜன்.

"அட....! பையன் அடம் பிடிக்காமல் ஸ்கூலுக்குக் கிளம்பிட்டானே...?"

"வீட்ல இருந்தா பாடம் படிக்கணும்னு சொன்னேன்; உடனே ஸ்கூலுக்கு ரெடி ஆயிட்டான்!"

– சீர்காழி வி. ரேவதி



பனிக்கட்டி

பனிக்கட்டித் துண்டுகளைப் பற்றிப் படித்திருப்பீர்கள்; கேள்விப்பட்டிருப்பீர்கள். பனி(கட்டி)மூடிய இமாலய, ஐரோப்பிய குளிர்பிரதேசங்களில் பனிக்கட்டியின் வனப்பைக் காணலாம். பனிக்கட்டி வெண்மையாக இருக்கும்; 'ஜில்'லென்றிருக்கும் என்கிறவரை நமக்குத் தெரிந்திருக்கும். பனிக்கட்டியைப் பற்றி நாம் அறிந்திராத; நம் உணர்விற்கெட்டாத பல அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தியவர் வில்ஸன் பெண்ட்லே என்ற அமெரிக்கராவர்.

சிறுவனாக இருக்கும்போதே பெண்ட்லேவுக்கு பனிக்கட்டிமேல் அளவில்லாத ஈடுபாடு. பனிக்கட்டிகளை ஒரு கரும்பலகைமீது வைத்து அவை கரைவதற்கு முன் புகைப்படம் எடுத்தார். ஆராய்ச்சி தொடங்கியது. வெடவெடக்கும் குளிரில், சூறாவளிக்காற்றில் கூட அவர் பனிப்புயலை முறைப்படி ஆராய்ந்தார். ஒன்றல்ல. இரண்டல்ல, நாற்பத்தி ஆறு ஆண்டுகள் கடுமையான பனிமழைக் காலத்தில் (Winter Season) அவருடைய ஆராய்ச்சி தொடர்ந்தது.

1931-ல் இறப்பதற்கு முன்வரை பெண்ட்லே பனிக்கட்டி தொடர்பாக சுமார் 6000 புகைப்படங்கள் எடுத்திருந்தார். அத்தனையும் பனிபற்றியதுதான்! அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், அவர் எழுதிய புத்தகமும் அறிவியலில் 'தட்பவெப்ப இயல்' (Climatology) என்ற ஒரு புதிய துறையையே தொடங்க வழி கோலியுள்ளது.

பனிச் செதில் (Snow flahe) என்பது ஒரு கட்டியாகவும் இருக்கலாம், அல்லது, பல கட்டிகளின் தொகுப்பாகவும் இருக்கலாம்.

வெப்பம் அதிகரித்தால் காற்று மண்டலத்தில் உருவாகும் பனிச் செதில் மழைத்துளியாகி விடும். குளிர் அதிகரித்தால் பனிச் செதில் வடிவம் மாறாது அப்படியே இருக்கும். மலை மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வீட்டுக் கூரைகளில் பனி அப்படித்தான் படிவமாக உறைந்து விடுகிறது.



புழுதி, எரிமலை, சாம்பல்துகள், காற்று மண்டல அசுத்தம் எல்லாம் பனிப்படிகங்களின் மையப்பகுதியை உருவாக்கும். அதனால் ஈர்க்கப்படும் நீரின் நுண்ணிய



மூலக்கூறுகள் (Molecules) அதனுடைய வெளிப்புறத்தை உறையச் செய்கிறது.

வெவ்வேறு சீதோஷ்ண நிலை களுக்கும், ஈரப்பதத் திற்கும் (Humidity) தகுந்தாற்போல் இந்தப் பனி செதிள்கள் வடிவம் பெறுகின்றன. அடித்துச் செல்லப்படுகின்றன. அந்தச் செதிள்கள் வேறு பொருட்க ளுடன் மோதும்போது, வெவ்வேறு வடிவம் பெறுகின்றன. கடைசியில் பூமியில் விழும்போது அதற்கென்று ஒரு தனி அழகே வந்துவிடுகிறது.

சர்வதேச பனி மற்றும் பனிக்கட்டி ஆராய்ச்சிக் கழகம், பனிச் செதில்களில் பலவகைகள் இருப்பதைக் கண்டுபிடித்திருக் கிறது. வெவ்வேறு நிலைகளில் அவை வெவ்வேறு விதமாக உருவாகின்றன. குறைவான ஈரக் காற்றில் உருவாகும் பனிச்செதின் முப்பரிமாணம் உள்ளனவாயும், ரொம்பவும் குளிர்வுற்ற அல்லது வறண்ட மேகங்கள் உற்பத்தி செய்யும் பனிச்செதின் ஊசிவடிவாகவும் இருக்கும்.

அரை மீட்டர் பரப்புள்ள புல்தரையில் 25 செ.மீ. பனி படிவதற்கு பத்துலட்சம் பனிச் செதிள்கள் தேவைப் படும்.

பொதுவாக பனிச் செதிள்கள் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒரே நேரம், ஒரே வெப்பநிலை, மையப் புள்ளியின் ஒரே மாதிரி அமைப்பு போன்ற சிறப் பான இயல்புகளால் மட்டுமே இரண்டு பனிச் செதிள்கள் ஒத்த வடிவைப் பெறமுடியும்.

இயற்கையின் நிலையான தன்மையை நிரூபிக்கும் அடையாளங்களில் பனிச் செதிலும் ஒன்றாகும்.

பனிச் செதிள் அழகானது. அது வானிலிருந்து விழுகிறது. காற்று மண்டலத்தில் மிதக்கிறது. மண்ணில் விழுந்து கரைகிறது. எனினும் அது அழிவதில்லை. எப்போதும், ஏதேனும் ஒரு வடிவத் திற்குத் தன்னை மாற்றிக் கொண்டே இருக் கிறது.

பனி, வானம் பூமிக்கு வழங்கிய விலைமதிப்பற்ற ஆபரணம் ஆகும்.

'வாழ்க்கையில் எல்லா மாற்றங்களுக்கும், தயாராக இரு. உனக்கு அழிவென்பதே கிடையாது' என்கிற உயர்ந்த தத்துவத்தை அல்லவா பனி நமக்குப் போதிக்கிறது!

-டி.தேவராஜ்

சுற்றுலா போகும் கூட்டம் ஒன்று காட்டில் அருவிக்குப் பக்கத்தில் வந்து இறங்கியது. ஜமுக்காளத்தை விரித்து டி.வியை வைத்தனர். பிறகு அருவியில் குளிக்கச் சென்றனர்.

அவர்கள் அசந்த நேரம் பார்த்து, குரங்குக் கூட்டம் ஒன்று 'திபுதிபு' வென்று மரத்தில் இருந்து இறங்கியது. எல்லாமாகச் சேர்ந்து டீ.வி.யைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடிப் போய்விட்டன!

குரங்குக் கூட்டத்தில் இருந்த ஒரு குரங்கு மட்டும், சில மாதங்கள் ஒரு குரங்காட்டியிடம் இருந்து படாத பாடு பட்டு, அவன் ஏமாந்த சமயத்தில் தப்பி வந்தது. அதனால் அதற்கு டீ.வியைப் பற்றி எல்லாம் தெரியும்.

அந்தக் குரங்கு, பிரும்மாண்டமான மாமரத்தின் கிளைகளுக்கு நடுவே ஒரு கனமான பரண் அமைத்து, அதில் டீ.வியை வைத்தது. 'ஜங்கிள் டீ.வி. தியேட்டர்' என்று பெயரும் வைத்தது.

கட்டு கடையை!

டீ.வி. பார்க்கக் காட்டு விலங்குகளும், பறவைகளும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன. குரங்கு, கட்டணம் வசூல் பண்ணிக் கொண்டு மிருகங்களையும் பறவைகளையும் டீ.வி. பார்க்க அனுமதித்தது.

அதுவரை டீ.வியைப் பார்க்காத காட்டு மிருகங்களும், பறவைகளும் வியப்புடன் மினி டீ.வி. தியேட்டரில் கூடின. குரங்குக்கு ஏகமாகப் பணம் புரண்டது. அதைத் தன் நண்பர்களோடு அது பகிர்ந்து கொண்டது.

விஷயம் சிங்கராஜா காதுக்குப் போனது. உடனேயே ராஜ குடும்பத்துடன் டீ.வி. பார்க்க வந்து விட்டார். அன்று காட்டு மிருகங்களைப் பற்றிய ஒரு படம் டீ.வியில் ஓடியது. அதில் சிங்க ராஜாவுக்கும் யானைக்கும் சண்டை வந்தது. சிங்கராஜா பயந்து போய், திரும்பி ஓடுவது போல் முடிவு!

சிங்கராஜாவுக்கு அந்த முடிவு தலைகுனிவாக இருந்தது. ''மினி டீ.வி தியேட்டர் குரங்காரைக் கூப்பிடுங்கள்'' என்று கர்ஜித்தார்.

குரங்கு நடுங்கிக் கொண்டே வந்தது.


''எனக்கு இதைத் தோல்வி முடிவு பிடிக்கவில்லை. வனராஜன் கஜராஜனிடம் தோற்பதாவது? முடிவை மாற்றிப் படத்தை ஓட்டச் சொல்'' என்று கட்டளையிட்டார் சிங்கராஜா.



''அவர்கள் ஒளிபரப்புவதைத்தான் இங்கே காண முடியும். நாமாக எதுவும் செய்ய முடியாது'' என்று பயத்தில் குழறினார் மினி டீ.வி. தியேட்டர் உரிமையாளர் குரங்கார்.

''என்னை பயந்தாங் கொள்ளியாகக் காட்டும் இந்த டீ.விக்கு இந்தக் காட்டில் இடம் இல்லை. கட்டு கடையை, மூடு டீ.வியை!'' என்று கர்ஜித்தார் சிங்கராஜா.

''இதை நான் எதிர்க்கிறேன். காட்டுக்கு ராஜா சிங்கராஜாதான் என்றாலும், உண்மையில் சிங்கராஜாவை விட வலிமை மிக்கவர்கள் நாங்கள்தான் என்பதை அழகாகக் காட்டுகிறது இந்தப்



படம். எங்கள் இனத்தாரின் உண்மையான பலத்தைக் காட்டுவதாகவே இந்தப் படம் உள்ளது. அதனால், மினி டீ.வி. தியேட்டருக்கு சிங்கராஜா ஏதாவது சேதத்தை ஏற்படுத்த முயன்றால், எங்கள் இனம் பதிலடி கொடுத்து, டீ.வி. தியேட்டரைக் காக்கும்'' என்று பிளிறினார் யானைத் தலைவர். மற்ற யானைகள், டீ.வி. தியேட்டர் இருந்த மரத்தைச் சுற்றி நின்று பாதுகாப்பு வளையம் அமைத்துப் பிளிறின!

கூடியிருந்த சிங்கங்களும் விடவில்லை. சிங்கராஜாவுக்குத் தங்கள் ஆதரவைத் தர கர்ஜித்தன. பதிலுக்கு யானைகள் பிளிறின. கூடியிருந்த மற்ற மிருகங்கள் தப்பி ஓடவும் வழியில்லாது இடையில் சிக்கிக் கொண்டு தவித்தன; நடுங்கின!

இந்த நெருக்கடியான நேரத்தில், டீ.வி. திரையில் வயலும் வாழ்வும் பகுதி தொடங்க, வாழைச் சாகுபடி குறித்த நிகழ்ச்சியைக் காட்டினார்கள். செழிப்பான ஒரு வாழைத் தோட்டம், அதில் பழுத்துத் தொங்கும் வாழைப் பழங்கள் எல்லாவற்றையும் காட்டினார்கள்.

பார்த்துக் கொண்டிருந்த குரங்குக் கூட்டம் தங்களை மறந்தது. அதுவும் அது கலர் டீ.வி. கேட்க வேண்டுமா? எல்லாமாகச் சேர்ந்து டீ.வியின் மேல் பாய்ந்தன. டீ.வி. பெட்டி நிலை தடுமாறியது. கீழே விழுந்தது! தன் முடிவைத் தேடிக் கொண்டது.

சிங்கராஜாவுக்கும், கஜராஜனுக்கும் இடையே நடக்க இருந்த பயங்கர மோதல் தவிர்க்கப்பட்டுத் தாங்களும் பிழைத்தோமே என்று மிருகங்களுக்கெல்லாம் நிம்மதியான மகிழ்ச்சி!


தன்னை விடச் சிங்கம் வீரமுடையது அல்ல என்பதை விளக்கும் படத்தை சிங்கராஜா மாற்ற முடியாமல் போனது குறித்து யானைகளுக்கும் மகிழ்ச்சி.

தன் இனத்தாரைக் கோழைகளாகக் காட்டும் டீ.வி. பெட்டி உடைந்து போனது பற்றி சிங்கராஜாவுக்கும் மகிழ்ச்சி!

உங்களுக்கு!

– ப.க. சுரேஷ்.

ரோஜாவின் புராணம்



ஆறுபாதி புகழேந்தி

ரோஜா மலர் மனித இனத்தை விடவும் பழமையானது. உலகில் முதல் மனிதன் தோன்றுவதற்கு முன்பே பூத்த மலர் என்ற பெருமை ரோஜாவுக்கு உண்டு.

அழகே உருவான கிரேக்கப் பெண் ரோடாந்தே என்பவள் தன்னைத் துரத்திய வர்களிடமிருந்து காத்துக் கொள்ள ஆர்டிமிஸ் என்ற தெய்வத்தின் கோயிலுக்குள் அடைக்கலம் புகுந்தாள். அந்தக் கடவுள் அவளை ஒரு அழகிய ரோஜா மலராக மாற்றியது என்று கிரேக்க புராணங்கள் கூறுகின்றன.

கிரேக்க-ரோமானிய இதிகாசங்களில் ரோஜாவையும் அழகுத் தேவதையையும் இணைத்துப் பல கதைகள் உள்ளன. உதித்து உயர்ந்து வரும் வீனஸ் என்ற விடிவெள்ளி தேவியுடன் ரோஜாவும் சமமாக ஓடியது. வழியில் வீனஸ் தேவதையின் காலில் முள் தைத்து இரத்தம் வர, அந்த இரத்தத் துளிகளில் இருந்து பிறந்தது சிவப்பு ரோஜா மலர்.

ஜஸில் என்ற எகிப்திய தேவதை விரும்பும் பூவாக ரோஜா இருந்தது. ''செருசி'' என்ற அமெரிக்க சிவப்பிந்தியரிடையே இது பற்றித் தனியான வரலாறு உண்டு.

ரோஜா ரோமானியர்களுக்குப் பிடித்த மலர். அவர்கள் திருமணம், பந்தயம், வரவேற்பு முதலியவற்றுக்கெல்லாம் இந்த மலரை உபயோகித்தார்கள்.


உலகில் ரோஜாவைப்போல் எழுத்தாளர்களைக் கவர்ந்த மலர் வேறு எதுவுமில்லை. உலக மக்கள் மிக அதிகமாகக் கொண்டாடும் மலர் இது.

ஆங்கில மொழியின் மகாகவிகள் எல்லோருமே இதன் வனப்பைப் பாடிப் புகழ்ந்திருக்கின்றார்கள். ஷேக்ஸ்பியர் அறுபது தடவைக்கு மேல் இம்மலரைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

பைபிள் இருமுறை ரோஜா மலரைக் குறிப்பிட்டுள்ளது. பாரசீகக் கவிகள் சாஅதியும், நிஸிமியும் இம்மலரைக் கொண்டாடியிருக்கின்றனர்.

இதன் மென்மையான இதழ்களைப் பரப்பி ரோஜாப் படுக்கையின் மேல் உறங்குவது ரோமானிய உயர் குலத்தினரின் வழக்கம். எகிப்திய அழகி கிளியோபாட்ரா தன் மனம் கவர்ந்த மார்க் ஆண்டனியை ரோஜாப் பூவைப் பரப்பிய அறையில்தான் வரவேற்





நான்!

நீரோ என்ற ரோமானிய சக்கரவர்த்தி அளித்த ஒரு விருந்தில், ரோஜா மலர்களுக்காக மட்டுமே சுமார் இருபதினாயிரம் பொன் செலவழிக்கப்பட்டதாம்!

ரோமானியரின் வரலாற்றில் ரோஜாப் பூ விழாவை பற்றிய குறிப்பு இருக்கிறது. தன் அன்புக்குரியவராக இருந்து- மறைந்தவர் களின் கல்லறையை, துயரமுற்ற உறவினர்கள் ரோஜா மலர்களால் அலங்கரிப்பது வழக்கம்.

கிறிஸ்துவ மதத்தின் தொடக்கத்தி லிருந்து இந்தப் பூக்களின் முக்கியத்துவம் சிறிது குறையலாயிற்று. ஆனாலும் கிறிஸ்துவின் காயங்களில், ரத்தத்தின் சின்னமாக சிவந்த ரோஜாப் பூவின் இதழ்களை சார்த்தும் பழக்கம் பரவியது.

இடைக் காலத்தில் சிற்பக் கலையிலும் கூட ரோஜா மலர் இடம் பெறத் தொடங்கியது. 12ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பிரஞ்சு நாட்டில் சர்ச்சுகளில் ரோஜாப் பூ வடிவில் ஜன்னல் அமைப்பது சகஜமாகி விட்டது. பிறகு இதை இங்கிலாந்திலும் பின் பற்றினார்கள்.

உலகப் புகழ்பெற்ற ரோஜாத் தோட்டம் 1804இல் நெப்போலியனின் காதலி ஜோசப் பைனால் அமைக்கப்பட்டது. இருநூற்றுக் கும் பேற்பட்ட ரோஜா இனங்கள் இதில் இருந்தன. இதன் வளர்ச்சிக்கென தினமும் பல மணி நேரத்தை ஜோசப்பைன் தோட்டத் திலேயே கழித்தார். இந்த ரோஜா இனங் களில் சில இன்றும் நம் தோட்டங்களை அலங்கரிக்கின்றன.

1912ஜூன் 10ஆம் தேதியை பிரிட்டிஷ் அரசி அலக்ஸாண்ட்ரா ரோஜா நாளாகக் கொண்டாடினாள்.

லண்டன் நகர வாழ்க்கையில் அது குறிப் பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாக இருந்தது. ரோஜாக்களால் அலங்கரித்த தேரில் அந்த அரசி வந்தாளாம்.

1695இல் வெளியான சில நூல்கள் உணவுப் பொருள்களில் இந்தப் பூவை சேர்க் கும் முறையை விவரிக்கின்றன. இரண்டாம் உலகப் போரில் வைட்டமின் "சி"க்காக இந்தப் பூவை உபயோகித்தார்களாம்.

பழைய வடமொழி நூல்களில், தாருணி, ஆதிமஞ்ஜூளம், ஸூமந்திகம் என்ற பல காரணப் பெயர்களால் ரோஜாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் மொகலாய மன்னர் களின் காலத்தில் இந்த மலருக்கு அந்தப் புரத்திலும், தர்பாரிலும் மவுசு இருந் தது.

மொகலாய மன்னர் அக்பருக்கு மிகவும் பிடித்தமான மலர் ரோஜா. இதற் கென காஷ்மீரில் ஒரு பள்ளத்தாக்கையே உருவாக்கிய பெருமை அக்பருக்கு உண்டு.

மணம் மிக்க அத்தரும், பன்னீரும் ரோஜாவில் இருந்தே தயாரிக்கப்படுகிறது. இதையும் தேனையும் சேர்த்து "குல்குந்து" செய்யப்படுகிறது. தன் சட்டையில் அணிந்து ரோஜாவுக்குப் பெருமையளித்த தனிச் சிறப்பு நேருஜிக்குத்தான் உண்டு. பெங்க ளூரில் உள்ள விவசாய விஞ்ஞானக் கழகம், ஒரு புதுவகை ரோஜா இனத்தைத் தோற் றுவித்துள்ளது. நோபல் பரிசு பெற்ற வரும், ரோஜாவை நேசித்தவருமான அறி வியல் அறிஞர் சர். சி. வி. இராமனுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் இதற்கு "ராமன் ரோஜா" என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.



அக்காவைத் தேடி!

டாக்டர் பூவண்ணன்

அந்தக் கடிதம் வந்ததிலிருந்து, இது வரை அப்பா அதை ஐந்தாறு முறை படித்துவிட்டார்.

''என்னங்க, கடுதாசியை நீங்களே படிக்கறீங்க? என்ன விஷயம்னு சொல்ல மாட்டேங்கிறீங்களே? கடிதம் யார் எழுதி னது?''

அம்மா கேட்டாள்.

''கோயம்புத்தூரிலிருந்து பெரிய பொண்ணு எழுதியிருக்கா.''

''பொன்னி எழுதியிருக்காளா? என்ன விஷயம்?''

''சாந்தியை உடனே அனுப்பவும். அவசரம்னு எழுதியிருக்கா. கடுதாசியை யாரோ எழுதியிருக்காங்க. ஆனால் பொன்னிதான் கையெழுத்துப் போட் டிருக்கா.''

''சாந்தியை அவசரமா எதுக் குக் கூப்பிடறா?''

''அதுதான் தெரியலே. பொன்னி புத்திசாலி. தேவை யில்லாம எதையும் செய்ய மாட்டா. நாளைக்குக் காலைலே கோவை எக்ஸ்பிரஸ்லே சாந் தியை அனுப்புவோம். அவளை ஸ்டேஷனுக்கே வந்து அழைச் சிட்டுப் போகச் சொல்லி மாப் பிள்ளைக்கு இன்னைக்கே தந்தி கொடுத்துடறேன்.''

அப்பா அப்போதே அஞ்ச லகத்துக்குப் புறப்பட்டார். மறக் காமல் பொன்னி எழுதிய கடிதத் தையும் எடுத்துக் கொண்டார். பொன்னியின் முகவரி அவருக் குத் தெரியும். ஆனால் கடிதத் தின் கீழே, ''நாங்கள் சென்ற வாரம் வீடு மாறிவிட்டோம். புதிய முகவரியைக் கீழே எழுதியுள் ளேன்'' என்று எழுதியிருந்தது.

அப்பா புதிய முகவரியைப் படித் தார்.

எண். 1, பாரதி பூங்கா 7 ஆம் குறுக்குச் சாலை,

சாயிபாபா காலனி, கோவை - 11.

எண். 1 என்பது தெளிவாக இருந்தது. 7 ஆம் குறுக்குச் சாலை என்பது குழப்ப

மாக இருந்தது. அது ஏழு போலவும் இருநதது, 1 போலவும் இருந்தது. இப்போது எந்த முகவரிக்குத் தந்தி கொடுப்பது?

அப்பா ஒரு முடிவுக்கு வந்தார்.

எண். 1, 7 ஆம் குறுக்குச் சாலைக்கு ஒரு தந்தியும் எண். 1, 1 ஆம் குறுக்குச் சாலைக்கு ஒரு தந்தியும் கொடுத்து விட்டார். செலவைப் பார்த்தால் முடியுமா? சாந்தி பத்தாம் வகுப்புப் படிக்கும் பதினான்கு வயது மாணவி. அவளைத் தனியே அனுப்பும் போது ஸ்டேஷனுக்கு யாராவது வந்து அழைத்துப் போனால் தானே நல்லது?

மறுநாள் விடியற்காலை அப்பாவே சாந்தியை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து கோவை எக்ஸ்பிரஸில் ஏற்றிவிட்டார்.

''சாந்தி தைரியமாப் போ. அத்தான் ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துப் போவார்'' என்று கூறிய அப்பா, ''இந்தா, இந்தக்கடிதமும் உன்னிடம் இருக்கட்டும்'' என்று கூறிப் பொன்னியின் கடிதத்தையும் அவளிடம் கொடுத்தார்.

சாந்தி, ''சரிப்பா. நீங்க கவலைப் படாம போங்க'' என்று கூறி விடை கொடுத்தாள்.

சாந்தி தைரியமுள்ள பெண். கரப்பான், பூரான், எலி, நாய் என்று யார் பயந்து குரல் கொடுத்தாலும் சாந்திதான் முதலில் போய் நிற்பாள். கரப்பானோ, பூரானோ எதுவாக இருந்தாலும் அதை விரட்டுவாள். அவளுக்கு ஜான்சிராணி என்று ஒரு பட்டப் பெயரும் கூட உண்டு.

சாந்திக்கு சன்னல் ஓரத்தில் இடம் கிடைத்தது. ஒரு நாவலைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

கோவை எக்ஸ்பிரஸ் சரியாக இரண்டு மணிக்குக் கோவையை அடைந்தது.



சாந்தி பெட்டியிலிருந்து இறங்கினாள்.

பிளாட்பாரத்தில் ஒரே கூட்டம். வந்த வண்டியில் ஏறிச் சென்னை செல்லக் காத்திருந்த மக்கள் கூட்டம்தான் அது. அவளைத் தள்ளிக் கொண்டு வண்டிக்குள் பாய முயன்றார்கள்.

சாந்தி அந்தக் கூட்டத்தில் சிக்காமல் விலகி, ஒரு ஓரமாக நின்று கொண்டு தன் அத்தானைத் தேடினாள்.

அத்தான் ஏறத்தாழ ஆறடி உயரம் உள்ளவர். எந்தக் கூட்டத்திலிருந்தாலும் அவரை எளிதாகக் கண்டு பிடித்து விடலாம். அதனால் சாந்தி நம்பிக்கையோடு தேடினாள்.

அத்தானைக் காணோம்.

ரயிலில் வந்தவர்கள் எல்லாம் போய்விட்டார்கள்.

அதே கோவை எக்ஸ்பிரசில் ஏறிச் சென்னை செல்ல வேண்டியவர்கள் வண்டியில் ஏறி விட்டார்கள். வழியனுப்ப வந்தவர்கள்தான் பிளாட்பாரத்தில் இருந்தார்கள்.

சாந்தி இன்னும் நம்பிக்கையோடு அத்தானைத் தேடினாள்.

மணி இரண்டு இருபது.

கோவை எக்ஸ்பிரஸ் புறப்பட்டுச் சென்றுவிட்டது. வழியனுப்ப வந்தவர்கள் சென்று விட்டார்கள். பிளாட்பாரம் ஆளரவம் அற்று அமைதியடைந்தது.

சாந்திக்கு ஏமாற்றமும் கோபமும் இணைந்து வந்தன.

''அத்தான் ஏன் வரவில்லை? வேலை அதிகம் என்றால் அக்காவையாவது அனுப்பியிருக்கலாமே? இனி என்ன செய்வது?''

சாந்திக்கு அப்பா கொடுத்த கடிதம் நினைவுக்கு வந்தது. அதை எடுத்துப் பிரித்து அக்காவின் புதிய முகவரியைப் படித்தாள். கதவு எண் ஒன்று என்பது தெளிவாக இருந்தது. ஆனால், பாரதிப் பூங்கா குறுக்குச் சாலை எண். ஒன்றா? ஏழா? புரியவில்லை. அது புரியாமல் தானே அப்பா இரண்டு முகவரிக்கும் தந்தி கொடுத்தார்.

சாந்தி முதலில் முதல் குறுக்குச் சாலைக்குப் போகத் தீர்மானித்தாள்.

தான் கொண்டு வந்த பையைத் தோளில் மாட்டிக்கொண்டு படியிறங்கி வெளியே வந்த போது பசி வயிற்றைக் கிள்ளியது.

''ஈரோட்டிலேயே ஏதாவது சாப்பிட்டிருக்கலாம். சேலத்தில் ரெண்டு சமோசாவும், காப்பியும் சாப்பிட்டதுதான். இப்போது ஒரே பசி! ஸ்டேஷனுக்கு எதிரேயே ஓட்டல் இருக்கே! ஏதாவது சாப்பிடலாமா?''

யோசித்தாள்.


''வேண்டாம். ஆட்டோ பிடித்து சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடலாம்'' என்று முடிவு செய்த சாந்தி ஆட்டோவை நெருங்கினாள், முகவரியைச் சொன்னாள்.

''முதல் கிராஸா இருந்தா இருபத்தைந்து ரூபா. ஏழாம் கிராஸா இருந்தா முப்பது ரூபா'' என்றான் ஆட்டோக்காரன்.

கோவையில் ஆட்டோவில் மீட்டர் போடுவது இல்லை. அதனால் ஆட்டோக்காரர்கள் [illegible]யமாக வாய்க்கு

''என்ன மான் அண்ணாச்சி மழையில அலட்சியமா திரியறியே ஜலதோஷம் பிடிக்காதா...?''

''அட போப்பா, நான்தான் 'ரெயின்' டீர் ஆச்சே!''



வந்த தொகையைக் கேட்டு வசூலித்து விடுவார்கள்.

சாந்தியிடம் அப்பா ஐம்பது ரூபாய் கொடுத்திருந்தார். ஆனாலும் ஆட்டோவுக்கு இருபத்தைந்து முப்பது என்று கொடுக்க அவள் விரும்பவில்லை.

அங்கிருந்து நகர்ந்து சாயிபாபா காலனி செல்லும் பேருந்து எது என்று கேட்டு, பதினொன்றாம் எண்ணில் ஏறினாள். டிக்கெட் வாங்கிக் கொண்டாள். கண்டக்டரிடம் கேட்டு பாரதிப் பூங்கா முதல் குறுக்கு சாலைக்கு, சிவசக்தி நிறுத்தத்தில் இறங்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டாள். அப்படியே இறங்கினாள்.

முதல் குறுக்குச் சாலையையும் கண்டு பிடித்து விட்டாள். அங்கே முதல் எண்ணுள்ள வீட்டில் யாரோ வட நாட்டார் இருந்தனர். "பொன்னி நஹி! சாரங்கன் நஹி!"

சாந்தி இப்போது ஏழாம் குறுக்குச் சாலையை நோக்கி நடந்தாள் அங்கேயும் ஒன்றாம் எண்ணுள்ள வீட்டில் அக்கா பொன்னியும் இல்லை; அத்தான் சாரங்கனும் இல்லை!

மணி நான்கு.

பசி! தளர்ச்சி! கோபம்! ஆத்திரம்!

இத்தனை உணர்ச்சிகளும் தாக்க, சாந்தி அது சாலை என்றும் பார்க்காமல்

"தேர்தலை ஏன் கோடையிலே வெச்சாங்க தெரியுமா?"
"ஏன்?"
"சூடு பிடிக்கத்தான்!"
- ரா. பாலாஜி



"ஜோக் எழுத்தாளரோட பேனா எப்படிடா எழுதும்...?"
"தெரியலையே.. நீ சொல்லு?"
"விட் விட்டுன்னு எழுதும்!"
- சீர்காழி வி. ரேவதி




அங்கேயே ஓரமாக தோளில் இருந்த பையைப் போட்டுவிட்டு அதன் மேல் உட்கார்ந்து தன்னை மறந்து விம்மினாள். கண்களில் கண்ணீர் கொட்டியது! கைக்குட்டையால் துடைத்தாள். வாய்விட்டு 'ஓ' வென்று குமுறிக் குமுறி அழத் தோன்றியது. கைக்குட்டையை வாயில் திணித்து அடக்கிக் கொண்டு மௌனமாக அழுதாள்!

ஏழாம் குறுக்குச் சாலையின் வட முனையில் பூச்செடிகள் விற்கும் ஒரு நர்சரி. அதன் அருகே உட்கார்ந்துதான் சாந்தி அழுது கொண்டிருந்தாள்.

அதை ஒட்டி என்.எஸ்.ஆர். நெடுஞ்சாலை. அந்தச் சாலையில் மேற்கு நோக்கிச் சென்ற ஆட்டோவில் சுமார் முப்பது வயதுள்ள பெண்மணி அமர்ந்திருந்தாள். அவள் பார்வை தற்செயலாகச் சாந்தி மீது படிந்தது. பார்த்த முகம். அறிமுகமான முகம் போல இருக்கவே, ஆட்டோவை நிறுத்தச் சொன்னாள். கொஞ்ச தூரம் சென்று நின்ற ஆட்டோவைத் திருப்பி நர்சரிக்குச் செல்லச் செய்தாள்.

ஆட்டோ, நர்சரிக்கு அருகில் சாந்திக்கு அருகில் நின்றது. பெண்மணி இறங்கி கொஞ்சம் குனிந்து சாந்தியின் முகத்தைப் பார்த்து வியந்தாள். "ஏய் சாந்தி! என்னடி இது? இங்கே உக்காந்து அழுறே?" என்று கேட்டாள்.



"ஏன் கவலையா சோகமா இருக்கிங்க? முட்டைகளை நல்லபடியா பொறிச்சிடு வேன் கவலைப்படாதிங்க.."

"அட அதைப் பற்றி யார் கவலைப் பட்டது! இவையெல்லாம் பொறிஞ்சதும் இந்தக் குஞ்சுகளை எந்த ஸ்கூலில் சேர்க் கிறது? இடம் கிடைக்குமா? ஃபீஸ் எவ் வளவு? இந்தக் கவலைதான் எனக்கு...."

சாந்தி நிமிர்ந்து பார்த்தாள்.

எதிரே அக்கா பொன்னியேதான் நின் றிருந்தாள்!

உடனே அணை உடைத்த வெள்ள மாய்க் கண்ணீர் பெருக, ''அக்கா...'' என்று அந்தச்சாலையே அதிர அழைத்த படி பாய்ந்து அக்காவை அணைத்துக் கொண்டாள். விம்மல் அடங்கவில்லை. சாலையில் போவோர் வருவோர் வேடிக்கை பார்ப்பதையும் பொருட்படுத் தாமல் அழுதாள்.

பொன்னி சாந்தியை ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு தோள்பையைத் தூக்கிப் போட்டுக் கொண்டு தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

பொன்னியின் வீட்டு எண் ஒன்று தான். ஆனால் குறுக்குச் சாலை எண். 4.

சாந்தி சாப்பிட்டு முடித்தாள். பிறகு தான் கோவைக்கு வந்த கதையைக் கூறி மற்றொரு முறை விசும்பினாள்.

பொன்னிக்கு ஒரே அதிசயம்.

''என்னது! நானா உன்னை வரச் சொன்னேன்! இல்லையே? நம்ம சித்தப்பா மகன் சாரதிக்கு வேலை வேணும்னு அத்தானிடம் அப்பா சொல்லியிருந்தார். ஒரு வேலை இருக்கு உடனே வரச் சொல்லுன்னு அத்தான் சொன்னார். அப்போ நான் ஏதோ கை வேலையா இருந்தேன். அத்தானுடைய தங்கச்சி மகன் மாதவன், கள்ளிப்பாளை யத்திலிருந்து வந்திருந் தான். அவனைத் தான் எழுதச் சொன்னேன். எழுதினான். மறுபடி படிக்கச் சொல்லிக் கேட்டு பிறகு தான் அதில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். அவனையே தபாலில் சேர்க்கச் சொல்லி விட்டேன். அவன் இப்படியா எழுதினான்? எங்கே கடிதத் தைக் கொடு.''

சாந்தி கொடுத்த கடிதத்தைப் பார்த் தாள். சாரதி என்பது சாந்தி என்று படிக் கும்படி இருந்தது. மேல்வரிசையில் அவன் வைத்த முற்றுப்புள்ளி சாரதி பெயரில் 'ர'வுக்கு மேலே இருக்கும்படி அமைந்திருந்தது. 'ர' எழுத்தும் 'ந' போலவே இருந்தது. அதோடு 4 ஆம் குறுக்குச் சாலை என்பதில் அவன் எழுதிய 4 தெளிவில்லாமல் ஒன்று, ஏழு என்று படிக்கும்படியும் இருந்தது.

மாலையில் வீட்டுக்கு வந்த அத்தான் சாரங்கன் சாந்தி அடைந்த சங்கடங் களைக் கேட்டு வருந்தினார்.

''சாந்தி, மாதவன் எழுத்து இவ் வளவு தொல்லைக்கு இடம் கொடுத் துட்டதே! இதனால்தான் பாவேந்தர் பாரதிதாசன் இளையார் ஆத்திசூடியில், 'சரியாய் எழுது' என்று கூறியிருக்கிறார். சரியாய் என்றால், எழுத்துப் பிழை, சொற்பிழை இல்லாமல் சரியாய் எழுது என்று பொருள். அத்துடன் எழுத்தும் எண்ணும் ஒன்று மற்றொன்று போலத் தோன்றும்படி தெளிவற்ற முறையில் எழுதாமல் சரியாய் எழுது என்றும் பொருள். மாதவனுக்கு சரியாய் எழுதப் பழகும்படி எழுதுகிறேன்'' என்றார் சாரங்கன்.

''அத்தான் நீங்கள் எழுதுவதையா வது சரியாய் எழுதுங்கள்'' என்று சாந்தி சிரித்தாள். பொன்னியும், சாரங்கனும் அவளோடு சேர்ந்து சிரித்தார்கள்.



அபிராமியின் அட்டிகை

11. பொன்னு சாமியின் பிடிவாதம்

பொன்னுசாமிக்குக் குழந்தைகள் வைத்தச் செல்லப் பெயர் தங்க மாமா. அந்த அளவுக்கு அவர் குழந்தைகளின் மனம் கவர்ந்தவராக இருந்தார். அப்படிப்பட்ட அன்புமயமான அவர், திடீரென்று குழந்தைகளைப் பட்டினி போட்டு வதைத்து, விடுதிக் கூரைக்குத் தீவைக்கும் அளவுக்குக் கொடுமைக் காரராக எப்படி, ஏன் மாறினார் என்பது குழந்தைகளுக்குப் புரியவில்லை. அவர்களால் அதை நம்பி ஏற்கக் கூட முடியவில்லை. குறிப்பாக அபிராமிக்கு அது பேரதிர்ச்சியாக இருந்தது. சக்கரவர்த்தி, பொன்னுசாமியின் விருப்பத்திற்கு மாறாக ஏதோ நடந்து கொண்டிருக்கிறார். அதுவே பொன்னுசாமியை வெறுப்பும் ஆத்திரமும் கொள்ள வைத்து, இந்த அளவுக்குப் பழி தீர்க்கும்படி செய்து விட்டது என்பதை மட்டும் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அதற்கு மேல் எதையும் அவளால் ஊகிக்கக் கூட முடியவில்லை.

அன்று காலை பள்ளிக்கூடம் நடந்து கொண்டு இருந்தது. விடுதி சமையற்கூடத்தில் பிள்ளைகளுக்கு மதிய உணவு தயாராகிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு கார் வந்து பள்ளிக் கூடத்தின் வாசலில் நின்றது. அதிலிருந்து பொன்னுசாமியும், மற்றும் சிலரும் வேகமாக இறங்கினர். அவர்கள் பள்ளிக்கூட நிலத்தை 'இஞ்ச்' டேப்பினால் நீளத்திலும், அகலத்திலும் அளக்கத் தொடங்கினார்கள். நிலத்தின் அளவைக் குறிக்கும் எல்லைக் கல் எங்கே உள்ளது என்று தோண்டலானார்கள்.

இதையெல்லாம் வகுப்பிறையிலிருந்து கவனித்த அபிராமிக்குத் திகைப்

கூத்தபிரான்

பாக இருந்தது. அவர்களோடு பொன்னு சாமியைப் பார்த்ததும் இன்னும் கலக்க மாகிவிட்டது. மீண்டும் என்னவோ விப ரீதம் நடக்கப் போகிறது என்பதை அவள் உணர்ந்தாள். ஆசிரியரிடம் சொல்லிக் கொண்டு நேராக சக்கர வர்த்தியிடம் ஓடினாள்.

''ஐயா! ஐயா! வெளிய வந்து பாருங்க. பொன்னுசாமி ஐயாவும் அவங்க கூட வந்த ஆட்களும் நம்ம பள்ளிக்கூட நிலத்தை அளக்கறாங்க. நிலத்தை விற்கிறதா இருந்தால்தானே இதையெல்லாம் செய்வாங்க?'' என்று கேட்டாள் அபிராமி.

''அப்படியா!'' என்று பதறிய சக்கர வர்த்தி, ''இதோ போய்ப் பார்க்கிறேன்'' என்று விரைந்தார்.

அபிராமி அவரைப் பின் தொடர்ந் தாள். அது சக்கரவர்த்திக்குப் பிடிக்க வில்லை.

பொன்னுசாமியின் மனமாற்றத் திற்கு அடிப்படைக்காரணமே ''தான் தான்'' என்ற உண்மையை அவள் உணரும்படி செய்து விடக்கூடாது என் பதில் கவனமாக இருந்தார் சக்கரவர்த்தி. அதனால், அவள் தன்னைப் பின் தொடர்ந்ததும், ''அபிராமி, இது பெரிய சமாச்சாரம்மா. இப்ப என்னோட நீ வர வேண்டாம். நான் போய் என்னன்னு கவனிக்கிறேன்'' என்று அவளைக் கழற்றி விட்டுப் புறப்பட்டார். பொன்னுசாமிக்கு அருகே சென்று, ''வணக்கம்'' என்று மிகவும் மரியாதை யுடன் சொன்னார்.



பொன்னுசாமி சக்கரவர்த்தியைக் கண்டு கொள்ளவேயில்லை. ஒன்றுமே நடக்காதவர் போல, ''இம்! இம்!... சீக் கிரமாகட்டும்'' என்று நிலத்தை அளந்த வர்களுக்கு உத்தரவு போட்டுக் கொண்டு இருந்தார்.

சக்கரவர்த்தியால் அதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை.

''எதுக்காக ஐயா இப்போ இந்த நிலத்தை அளக்கறீங்க?'' என்று கேட் டார்.

''நீங்க அவசியம் தெரிஞ்சுகிட்டே யாகணுமா?'' - கடுமையாகக் கேட்டார் பொன்னுசாமி.

''புதுசா, ஏதாவது பள்ளிக்கூடம் கட்டப் போறீங்களான்னு தெரிஞ்சுக்கத் தான்.''

''புதுசாவது! இருக்கறதையே மூட என்ன வழின்னு தேடிக்கிட்டு இருக் கேன்?''


''எதுக்காக?''

''இங்கே ஒரு சினிமா கொட்டகை கட்டணும்னு கேட்டாங்க.''

''சினிமா கொட்டகையா? இங் கேயா?''

''ஏன் கட்டக்கூடாதா?''

''அது இல்லே. சினிமாக் கொட்ட கை கட்டற அளவுக்கு இங்கே இட மில்லியேன்னுதான் யோசிக்கிறேன்.''



''நீங்க எதையும் அனாவசியமா யோசிக்கவும் வேண்டாம், உங்களுக்கு சம்பந்தமில்லாததைப் பத்திக் கேள்வி களும் கேட்க வேண்டாம். போயி உங்க வேலையைப் பாருங்க'' என்று சர்வ அலட்சியமாகச் சொன்னார் பொன்னு சாமி.

இருந்தாலும் சக்கரவர்த்தி விட வில்லை.

''ஐயா! ஏன் இப்படிப் பேசறீங்க? உள்ளே வாங்க'' என்று பணிவுடன் வேண்டினார்.

''எனக்கு இதுவரை நீங்க கொடுத்த மரியாதையே போதும். ஆளை விடுங்க.''

''உங்களுக்கு நாங்க மரியாதை கொடுக்கல்லேன்னு எதை வச்சுச் சொல் றீங்க?''

''என் பேச்சுக்கு இங்கே மதிப்பு இல்லேன்னு ஆன பிறகு, இந்த இடத் திலே நான் என்ன வேணும்னாலும் செய்வேன். இங்கே ஒரு சினிமா கொட்டகை கட்ட, நல்ல விலைக்கு இந்த நிலத்தை வித்துடப் போறேன்! இது என் நிலம்.''

''ஐயா! அப்படி மட்டும் செய்திடா தீங்க. அப்புறம் இந்தப் பள்ளிக்கூடம், இதன் விடுதி, இவற்றை நம்பியுள்ள குழந்தைகள் அனாதரவா, நிற்க நிழல் இல்லாம தவிக்கும். அந்தப் பாவத்தைச் செய்யாதீங்க ஐயா'' என்று விம்மினார் சக்கரவர்த்தி.

''அதைப் பத்தி எனக்கு என்ன கவலை? எனக்கு உரிமையான நிலம். என் இஷ்டப்படி அதை என்ன வேணும் னாலும் செய்வேன்.''

''நான் மறுக்கலேங்க. ஆனால், ஒரு நியாயம் வேண்டாமா?''

''எது நியாயம்? ஒரு சின்ன விருப் பம், ஒரு வேண்டுகோள். அதைக் கூடச் செய்ய முடியாதுன்னு பிடிவாதமா நீங்க என்னைக் கேவலப்படுத்தின பிறகு, என் இடத்திலே இந்தப் பள்ளிக்கூடமும் விடுதியும் இருந்தா என்ன, எக்கேடு கெட்டுப் போனா எனக்கு என்ன? இப்ப வும் ஒண்ணும் கெட்டுப் போயிடலே. என் விருப்பம் என்னன்னு உங்களுக்குத் தெரியும். நான் சொன்னதைச் செய்யுங்க. ஒரு பிள்ளைக்காக இத்தனை பிள்ளை களையும் நிர்க்கதியாக நிற்க வைக்கும் உங்க பிடிவாதத்தை விடுங்க. எல்லாத் தையும் சரி பண்ணறேன்.''

''எதுவாயிருந்தாலும் தயவு செய்து உள்ளே வாங்க. அமைதியாப் பேசு வோம்''

சக்கரவர்த்தி வேண்டியதும், ''நீங்க உங்க வேலையைப் பாருங்க, இவர் கிட்டே கொஞ்சம் பேசிட்டு வரேன்'' என்று, தன் கூட வந்தவர்களிடம் சொல்லிக் கொண்டே பொன்னுசாமி முன்னே சென்றார். சக்கரவர்த்தி பின் தொடர பள்ளி அலுவலக அறைக்குள் இருவரும் நுழைந்தனர்.

பொன்னுசாமி அமர்ந்து கொண்டு, "என்ன நிதானமா பேசணும்? சொல்லுங்க?" என்று கடுமை மாறாது கேட்டார்.

"எவ்வளவோ நல்லதெல்லாம் செய்து வந்த உங்க மனதிலே இப்படி ஈவு இரக்கமில்லாம பேசும்படி, நடக்கும் படி எப்படித் தோன்றியது? இத்தனை பிள்ளைகளின் பசிக் கொடுமையைப் போக்கிக் கல்விக் கண்களைத் திறக்க இத்தனை காலமும் பாடுபட்டு வந்த நீங்க, இப்படிப்பட்ட முடிவுக்கு வரும்படி என்ன ஆயிற்று? அதை மட்டும் சொல்லுங்க. உங்க பகைவன் எனக்கும் இந்தக் குழந்தைகளுக்கும் கூடப் பகைவனே. பெற்றோர் முகம் பார்த்தறியாத இவர்களுக்கு நீங்கள்தானே எல்லாம்? ஆத்திரத்திலே, யோசிக்காம முடிவு செய்யற எந்தக் காரியமும் நல்ல பலனைத் தராதும்பாங்க" என்று கசிந்தார் சக்கரவர்த்தி.

"எனக்குப் பழைய பல்லவியையே பாடி, புத்தி சொல்லத்தான் உள்ளே வாங்க, பேசவோம்னீங்களா?" என்று வெகுண்டார் பொன்னுசாமி.




இந்தச் சமயத்தில் தபால்காரர் வந்து கடிதங்களைத் தரவே, அவற்றை எடுத்துக் கொண்டு அபிராமி அலுவலக அறையின் ஜன்னல் பக்கமாகத் தயங்கியபடி நின்றாள்.

அதைக் கவனிக்காத பொன்னுசாமி, "இதோ பாருங்க சக்கரவர்த்தி, உறுதியா சொல்றேன். அந்த ஆண்டவனே வந்தாலும் நான் சொன்னது சொன்னதுதான். அந்த டில்லிச் சிறுமியை உடனே விரட்டுங்க. அதுக்கப்புறம் நீங்க என்ன சொன்னாலும் நான் கட்டுப்பட்டு நடக்கறேன். வேண்டியது எல்லாத்தையும் இரட்டிப்பா செய்து தரேன். பேசிப் பேசி என் ஆத்திரத்தைக் கிளப்பாதீங்க" என்று கூறியபடி எழுந்தார்.

சக்கரவர்த்தியின் முகத்திலும் உறுதி கூடியது. "நாங்க எல்லோரும் நடுத் தெருவில் நிற்கும் கதி வந்தாலும் சரி, தஞ்சம் என்று வந்த சிறுமியை நான் விரட்டியடிக்க மாட்டேன். மற்றக் குழந்தைகளும் அதை விரும்பமாட்டாங்க. அபிராமியை இழக்க நாங்க தயாராக இல்லை" என்றார்.

"அப்படியா, ரொம்ப சரி. உங்களையெல்லாம் விரட்டி விட்டு இந்த இடத்தை இடிக்கத் தரைமட்டமாக்கும் போதுதான் உங்களுக்குப் புத்தி வரும்" என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியே வந்தார் பொன்னுசாமி.

அங்கு அபிராமி கண்களில் நீர் ததும்ப நின்று கொண்டிருந்தாள். அவளை அவர் எதிர் பார்க்காததால் சிறிது திகைத்துப் போனார்.



''ஐயா, இங்கே உருவான பிரச்னைகளுக்குக்கெல்லாம் காரணமான டில்லிச் சிறுமி அபிராமி நான்தான். உங்க கிட்டே கொஞ்சம் பேசணுமே?'' என்றாள் அபிராமி பணிவுடன்.

அவள் கூறியதைக் காதில் வாங்காதவரைப் போலப் புறப்பட்டார் பொன்னுசாமி. அபிராமி திடீர் என்று கீழே விழுந்து அவர் கால்களைத் தன் கைகளால் இறுகப் பிடித்துக் கொண்டாள்.

''ஐயா! உங்களுக்கும் சக்கரவர்த்தி ஐயாவுக்கும் ஏற்பட்ட ஏதோ கருத்து வேற்றுமையால் எங்களை உதறி விரட்டி விட முயல்கிறீர்கள் என்பது வரைதான் என்னால் உணர முடிந்ததே தவிர, இதற்குக் காரணமே நான்தான் என்பதை நான் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. பலருடைய நன்மைக்காக ஒரு வரைப் பலி கொடுப்பது ஏற்கக் கூடிய நியாயமே. அதில் தவறு இல்லை. ஆனால் பெற்றோர், சொத்து, சுற்றம் எல்லாவற்றையும் இழந்து ஆதரவு தேடி வந்துள்ள இந்த அனாதைச் சிறுமி, தர்மவானான நீங்கள் வெறுத்து ஒதுக் கும்படி என்ன செய்து விட்டேன் என்பதை அறிந்தால் மன அமைதியோடு நானே போய் விடுவேன். என் ஒருத்திக்காக இத்தனை பிள்ளைகளும் அல்லல்படுவதை என்

னால் தாங்கிக் கொள்ள முடியாது. என்னை வெறுக்கும் காரணத்தை நீங்கள் சொன்னாலும் சரி, சொல்லா விட்டாலும் சரி, நான் வெளியேறப் போவது உறுதி. தேச பக்திக்காக, பகை வர்களால் உயர்ப் பலி வாங்கப்பட்ட உன்னதமான குடும்பம் எங்களுடை யது. அதனால், இருந்தால் மற்றவர் களுக்கு உதவியாக நான் இருப்பேனே தவிர, இடைஞ்சலாக இருக்கவே மாட் டேன். அதனால் பிறர் துன்பம் கண்டு இறங்கி உதவும் உத்தமரான தாங்கள் இந்த அனாதைச் சிறுமியை வெறுக்கும் காரணத்தைக் கூறுங்கள். ஒருவேளை, நீங்கள் கூறிய பிறகு நான் இங்கேயே தங்க முயல்வேனோ என்று பயப்பட வேண்டாம். கண்டிப்பாக நான் போகப் போவது உறுதி. சொல்லுங்கள் ஐயா?''

அபிராமி விட்ட கண்ணீர் பொன்னு சாமியின் கால்களில் விழுந்தது. ஆனால் அவர் முகத்தில் கருணை தோன்ற வில்லை. இன்னும் அதிகமாக இறு கியது. சட்டென்று கால்களை உதறிக் கொண்டார். காரில் ஏறி விரைந்தார்.

சக்கரவர்த்தி, அபிராமியைத் தூக்கி விட்டு கண்களைத் துடைத்து, ''ஏம்மா அழறே? இப்போ என்ன நடந்துட் டுது?'' என்று கேட்டார்.

''இன்னும் என்ன நடக்கணும் ஐயா? எனக்காக எவ்வளவு வாதாடி னீங்க? அவமானப்பட்டீங்க! என் ஒருத் திக்காக இத்தனை குழந்தைகளின் நலனும் பாதிக்கப்படணுமா? இதுக்கப் புறமும் நான் இங்க இருக்கணுமா? சொல்லுங்க?'' என்று அழுதாள்.

சக்கரவர்த்தி ஆதரவாக அவள் தலையைத் தடவினார்.

''ஐயா! அன்னிக்கு பொன்னு சாமியோட ஆளு கொண்டு வந்து கொடுத்த கடிதத்தில் என்ன இருந்தது என்பது, எனக்கு இப்பத் தெரிஞ்சு போச்சு. நான் வருத்தப்படுவேனோ என்று பிடிவாதமா சொல்லாமே இருந் தீங்க. நான் புதிதாக வந்தவள். என் பொருட்டு இந்தக் குழந்தைகளைக் கஷ்டப்பட வைப்பது நியாயமே இல்லை. பொன்னுசாமி ஐயாவின் நட வடிக்கைகள் தீவிரமாகு முன் நான் கிளம்பி விட வேண்டும். எனக்கு விடை கொடுங்கள்'' என்று உறுதியாகக் கூறி னாள் அபிராமி.

''அக்கா, நாங்கள் உங்களைப் போக அனுமதிக்க மாட்டோம். உங்கள் நல்ல மனதைப் பாராட்டறோம்; ஆனா உங்க கருத்தை நாங்க ஆதரிக்க மாட்டோம். பொன்னுசாமி ஐயா என்ன நடவடிக்கை எடுக்கறாரோ எடுக்கட்டும். எல் லோருமா வரும் துன்பத்தை அனுபவிப் போம். நீங்க கூடவே இருந்தால் எது வந் தாலும் எங்களுக்கப் பயம் இல்லே'' என்று கையைப் பிடித்துக் கொண்டான் சின்னப் பையன் சாமிநாதன்.

''ஆமாம் ஆமாம்'' என்று எல் லோரும் சூழ்ந்து கொண்டனர்.

''பார்த்தியாம்மா? இவங்களுடைய அன்பையெல்லாம் உதறிவிட்டா போகப் போறே?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

அபிராமியின் கண்கள் கலங்கின.

மதிய உணவு நேரத்தைக் குறிக்கும் மணியோசை கேட்டது. கலகலவென்று பேசி எல்லோரையும் வலுக்கட்டாய மாக இழுத்து வைத்துப் பேசும் அபி ராமி, அமைதியாகவும், சோகமாகவும் காணப்பட்டாள்.

அடுத்த நாள் வெள்ளிக் கிழமை. மாலை பிரார்த்தனைக் கூட்டம். பல

“உன் மகன் ஏன் கோவமாக இருக்கான்?''

“அவன் படமெடுக்கும் போது பூனை குறுக்கே போயிட்டுதாம்!''

- எஸ். சண்முகம்



'கங்கைக்கு போய் வந்தநா சொன்னீங்களே பாட்டி? கங்கை தீர்த்தம் எடுத்து வந்திங்களா?''
''நான் போயிட்டு வந்தது சிவ கங்கையாச்சே பேரா!''

- இரா. சுவாமிநாதன்



மொழிகளில் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. அபிராமியும் மிகவும் உற்சாகத்துடன் பாடினாள். பரவசத்தால் கண்களை மூடிய வண்ணம் அன்று அதிகமாகவே பாடல்களைப் பக்கவாத்தியங்களுடன் பாடினாள். எல்லாக் குழந்தைகளுடனும் வலிய வந்து பேசினாள். கைகுலுக்கினாள்.

அன்று இரவு பத்து மணியிருக்கும். குழந்தைகளில் பலர் தூங்கப் போய் விட்டார்கள். விடுதியின் விளக்குகள் ஒவ்வொன்றாக அணையத் தொடங்கின.

அபிராமி மெதுவாகத் தன் பெட்டியை எடுத்து வந்தாள். தன் துணிமணிகளை மடித்து வைத்துக் கொண்டாள். பெட்டி மூடும் சத்தத்தைக் கேட்டு பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த குயில் கண் திறந்தாள்.

''இன்னும் தூங்கலியா?'' என்று கேட்டவள், பெட்டியைப் பார்த்து திடுக் கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். அவளுக்கு நொடியில் எல்லாம் புரிந்து விட்டது.

''அபிராமி. உன் முடிவை மாத்திக்கிட்டேன்னு எவ்வளவு நிம்மதியா இருந்தோம்! எங்களையெல்லாம் விட்டு விட்டுப் போக உனக்கு எப்படி மனது வந்தது?'' என்று கையை பிடித்துக் கொண்டு அழுதாள்.

''உணர்ச்சி வசப்பட்டு அழுவது ஒரு பயனையும் தராது குயில். நீ, பிரச்னைகளை நடைமுறைக் கண்ணோட்டத்தில் பார். பொன்னுசாமி நல்ல மனிதர். எல்லோரும் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் மட்டும் நினைக்கும் இந்தத் தன்னலம் மிக்க மனிதர்களிடையே, திக்கற்ற பிள்ளைகளைப் பற்றி எண்ணி, கசிந்து அவர்களுக்கு உதவி வரும் நல்ல மனம் படைத்த வித்தியாசமான மனிதர். ஆனால் என்ன காரணமோ, அவர் நான் இங்கு தங்கி இருப்பதை விரும்பவில்லை. அந்தக் காரணம் எனக்கும் புரியவில்லை. சக்கரவர்த்தி ஐயாவிடம் பலமுறை கேட்டும் அவரும் அதை வெளியிட மறுக்கிறார். இதற்கு மேலும் நான் இங்கே இருந்தால் இத்தனை பேரும் நடுத்தெருவில்தான்நின்று அவதிப்படணும். நான் துணிச்சல் மிக்கவள். எப்படியும் ஆதரவு தேடிக் கொண்டு முன்னேறி விடுவேன். எனக்காக, நல்லவரான பொன்னுசாமி ஐயாவின் பகையை வளர்த்துக் கொண்டு உங்களை அழித்துக் கொள்வது புத்திசாலித்தனம் இல்லை. நான் போவதாக முடிவு செய்து விட்டேன். அசட்டுத்தனமாக அழுது புரண்டு கலாட்டா பண்ணாதே'' என்றாள் அபிராமி.

''நானும் உன்னோட வரேன்'' என்றாள் குயில்.

இவள் விடமாட்டாள். இவளை ஏமாற்றிவிட்டே, இவளுக்குத் தெரியாமல்தான் கிளம்பியாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்த அபிராமி, ''சரி, போகும் போது உன்னையும் கூட்டிக் கொண்டு போறேன். நாளைக்கே நீ உன் துணிமணிகளை எடுத்துத் தயாராக வைத்துக் கொள்'' என்றாள்.


குயில், அபிராமியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு நம்பிக்கையாகத் தூங்கத் தொடங்கினாள். அபிராமி எதிர்பார்த்துக் கொண்டிருந்தது அந்த வாய்ப்பைத்தானே?


(தொடரும்)


குருவாயூரப்பன் சோதித்த குரு பக்தி!


கதை: ஆனந்தி


படம்:





மாதவனோதிரிடம் மகன் நாராயணனை அழைத்துப் போனார் பட்டதிரி...
நீ வேத சாஸ்திர விற்பன்னன். என் மகனுக்குக் கற்றுக் கொடு...
நாராயணன் வேதங்களைக் கற்றுத் தேர்ந்தான்...
எனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லித் தந்துவிட்டேன்...
பட்டதிரியிடம்...
உன் மகன் ருத்ரம் சொன்னா, அந்த ருத்ரனே நேரில் வந்து சொல்ற மாதிரி இருக்கு!
எல்லாம் உங்க அருள்...
சில காலம் சென்று...
அப்பா, எனக்கு வியாகரணம் படிக்கணும்...
வியாகரணமா? ரொம்பக் கஷ்டமாச்சே!
பண்டிதர் அச்சுத பிஷாரடியின் அனுக்கிரஹம் கிடைச்சா, நீ படிச்சு தேறிடலாம்!



நாராயணன், பிஷாரடியைத் தேடிச் சென்று...
உன்னைச் சீடனாக ஏற்கணும்...
எனக்கு வியாகரணம் படிக்க ஆசை...
நாராயணா! நீ பெரிய வீட்டுப் பிள்ளை. உடம்பு வணங்-காது! நானோ பொல்லாதவன்!
நீங்க என்ன சொன்னாலும் செய்யறேன். ஒரு வேலைக்காரனா இருக்க அனுமதி கொடுங்க, போதும்!
குருவின் துணிகளைத் துவைத்தான் நாராயணன்...
வெளேர்னு இருக்-கணும்!
கால் பிடித்து விட்டான்...
அப்பாடா! இன்னும் கொஞ்சம் அழுத்திப் பிடி!


சில வாரங்கள் சென்று...
அப்பா, அம்மாவைப் பார்த்துட்டு வர்றேன். அனுமதி வேணும்...
வந்து இரண்டு வருஷம் ஆகலை. அதுக்குள்ளே வீட்டு ஞாபகமா?
போயிட்டு வரட்டுமே...
குருபத்தினி...
நாராயணா! உனக்கு அதிர்ஷ்டம் தான்! மேலிடத்து சிபாரிசு... போயிட்டு வா!
பெற்றோரிடம் வந்தான், நாராயணன்...
நீயா வந்துட்டியா என்ன? அவர் அனுப்பியிருக்க மாட்டாரே!...
ரெண்டு நாளில் திரும்பிடறதா சொல்லியிருக்கேன்!
சரியாப் பாடம் படிக்கிறியா?
நான் நன்றாக சிசுருஷை பண்றேன். ஆனாலும் பாடம் தொடங்கவே மாட்டேங்கறார்...
அது அவர் சுபாவம். சீக்கிரத்துல ஆரம்பிக்க மாட்டார். ஆரம்பிச்சாச்சுன்னா மழையாப் பொழிஞ்சு தள்ளுவார்!


இரு தினங்களில் குரு வீடு திரும்பினான் நாராயணன். குருபத்தினி...
வாப்பா! நீ இல்லாம அவர் தவிச்சுப் போயிட்டார்...
நிஜமாவா? நான் பாக்கிய சாலிதான்!
அச்சுத பிஷாரடி பாடம் சொல்ல ஆரம்பித்தார்...
வேதத்தைக் காதால் கேட்டுக் கேட்டே ஒப்பிக்கலாம். ஆனா, வியாகரணத்தைப் புரிஞ்சுண்டு படிக்கணும்...
சில தினங்கள் சென்றன. நாராயணனின் தம்பி மாத்ருதத்தன் வந்து...
அப்பாவுக்கு உடம்பு அவ்வளவா சரியில்லை; நாராயணனை அழைச்சுண்டு வரச் சொன்னார்...
அவ்வளவுதானா, வேற ஏதும் செய்தி உண்டா?
ஆம்... வந்து... நாராயணனுக்குக் கல்யாணம் செய்ய ஆசைப்படறார்.
அழகுதான்; சம்சாரியானா படிப்பு எப்படி ஏறும்? சரி, சரி, நாராயணா! உன் அப்பா கூப்பிடறார், போயிட்டு வா...



நாராயணனுக்குக் கல்யாணம்...
அப்பா, நமஸ்-காரம் பண்றேன்...
எனக்கு வயசாயிண்டிருக்கேன்னு கல்யாணம் பண்ணி வெச்சேன். படிப்பை விட்டு-டாதே...
நீளா நதிக்கரையில்...
ரொம்ப நன்னா பாடறியே... எங்கே, இன்னொரு பாட்டு...
படிப்பைச் சிலகாலம் மறந்திருந்த நாராயணன் மீண்டும் அச்சுத பிஷா-ரடியிடம் சென்றான்...
ஏன் இவ்வளவு தாமதம்? ஏகப்பட்ட பாடம் நடந்து போச்சே!
மன்னிக்கணும். ஞானப் படகைக் கொடுத்து உதவி, அஞ்ஞானக் கடலிலிருந்து என்னைக் கரை-யேற்றணும்...
சின்ன வயசு. கொஞ்சம் அலட்சியமா இருந்துட்டே. போகட்டும், இனிமேலாவது கவனமாய் இரு. பாணினியின் வியாகரணம் முழுக்க உனக்குப் பாடம் சொல்றேன்...


நாராயணன் நன்கு படித்துத் தேர்ந்தான்...
நம்முடைய ஞானமெல்லாம் பக்திக்குச் சமமாகாது... அதை மறக்காதே! குருவாயூரப்பனைத் தரிசித்து வரலாம்!
குருவுடன் சேர்ந்து குருவாயூரப்பனைத் தரிசித்தான் நாராயணன்...
சதா உன் நினைவாகவே இருக்க அருள் புரிவாய்...
நாராயண பட்டதிரிக்குப் பக்தி மேலிட...
இரவி-சாக்கியாரே! உமது கூத்துக்கு பாகவதக் கதைகள் எழுதித் தருகிறேன்...
ஆஹா! இரவி எத்தனை அழகாக ஹாஸ்ய ரசத்தோடு கதை சொல்கிறார்!
சில காலம் சென்று, குரு அச்சுத பிஷாரடியைக் காணச் சென்றார் நாராயண பட்டதிரி...
என்ன பாவம் செய்தேனோ, இப்படி வாதநோய் வந்து அவதிப் படுகிறேன்...

தொடர்ச்சி பக். 51

சம்மர் ஷவர் !!

பிரெக் ஃபாஸ்ட் டயமோ!
லஞ்ச் டயமோ!



இல்லமானாலும் சரி,
பள்ளியானாலும் சரி,

லிவ்பெட்
வாட்டர் பாட்டில்

காரணம், **லிவ்பெட்**
வாட்டர் பாட்டில்கள்

* உடையாதவை
* சுகாதாரமானவை
* உணவுத்தரம் கொண்டவை
* பல அழகிய வடிவங்களில், கொள்ளை கொள்ளும் நிறங்களில் வருகின்றன.



இப்பொழுது, நீங்கள் வாங்கும் ஒவ்வொரு **லிவ்பெட்பாட்டிலுடனும்** ஒரு மீரா ஹெர்பல் சீயக்காய் பவுடர் சாஷே இலவசமாக கிடைக்கிறது.

லிவ்பெட் பாட்டில் உங்கள் பெட் பாட்டில்
லிவ்பெட் இருக்கும்போது வேறென்ன வேண்டும்.

லிவியா பாலிமெர் பாட்டில்ஸ் பி.லிட்.,
மண்டையூர் சாலை, மண்டையூர், புதுக்கோட்டை மாவட்டம்,
தமிழ்நாடு - 622515 ☎ 04339 - 418/472.

14.8.1994 வரை இந்த சலுகை தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் கேரளாவில் கிடைக்கும்.
முந்துங்கள், இந்த அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

லிவ்பெட் பாட்டில்கள் இச்சலுகை இல்லாமலும் கிடைக்கின்றன.





கோடை விடுமுறைப் போட்டி 1

சின்னங்களைச் சேருங்கள்

நமக்கு நன்கு பழக்கமாகிவிட்ட சில தலைவர்கள், சில பறவை இனங்கள், விலங்கு களைப் பார்த்தவுடன் இவர்/இவை ஒரு குறிப் பிட்ட (குணத்தின்) சின்னத்தின் அடையாளம் என்பது உடனே நமக்குத் தோன்றுகிறது. பட்டாசைப் பார்த்ததும் தீபாவளி நினைப்பு, புல்லாங்குழலைப் பார்த்ததும் கண்ண பிரான் நினைப்பு வருவதில்லையா? அதே போல் தான். இங்கே 12 படங்கள் இருக்கின்றன. இவை எதை அல்லது யாரைக் குறிக்கின்றன அல்லது நினைவூட்டுகின்றன என்பதும் தனியாகத் தரப் பட்டுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் இவற்றைக் கத்தரித்து உரிய கட்டங் களில் ஒட்டி அனுப்ப வேண்டியது தான். பரிசு கண்டிப்பாக உண்டு. கூப்பன் இன்றி வருபவை ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அயல்நாட்டு வாசகர்கள் (நண்பர் அல்லது உறவினர்) முகவரியைத் தர வேண்டும்.

1) அன்பின் சின்னம்
2) தொண்டின் சின்னம்
3) வீரத்தின் சின்னம்
4) தியாகத்தின் சின்னம்
5) சேமிப்பின் சின்னம்
6) அமைதியின் சின்னம்
7) சத்தியத்தின் சின்னம்
8) சுதந்திரத்தின் சின்னம்
9) மது ஒழிப்பின் சின்னம்
10) பொறுமையின் சின்னம்
11) ஒற்றுமையின் சின்னம்
12) விடா முயற்சியின் சின்னம்
13) கருணையின் சின்னம்
14) பக்தியின் சின்னம்
15) சம நீதியின் சின்னம்
16) தந்திரத்தின் சின்னம்
17) நல்வாழ்வின் சின்னம்
18) புரட்சியின் சின்னம்
19) கொடையின் சின்னம்
20) அடக்கத்தின் சின்னம்
21) நன்றியின் சின்னம்
22) உழைப்பின் சின்னம்
23) எளிமையின் சின்னம்
24) அடிமை ஒழிப்பின் சின்னம்

கோடை விடுமுறைப் போட்டி-1

பெயர்...

வயது...

முகவரி...

....

பின்கோடு.................................

முடிவு தேதி 31.5.1994



"உப்பில்லாப் பண்டம் குப்பை யிலே... அப்ப உப்புள்ள பண்டம்...?"

"தொப்பையிலே!"

- ப. கணேஷ்ராகவன்

உங்க பையனைக் காணுமே, எங்கே சார்?"

"முட்டை வாங்கப் போயிருக் கான்."

"நீங்கதான் முட்டை சாப்பிட மாட்டீங்களே...?"

"கணக்குப் பரீட்சைக்குப் போயிருக்கான்னு சொன்னேன் சார்!"

- சீர்காழி வி. ரேவதி





"யாரைக் கூப்பிடறார் அந்த பயில்வான்?"


"தன் பெட்டியைத் தூக்கப் போர்ட்டரைக் கூப்பிடறார்!"


- ஆர்.ஆர். பூபதி


"அப்பாயின்ட்மென்ட்க்கு எதிர்ப் பதம் என்ன?"


"அம்மாயின்ட்மென்ட் ஸார்!"

- சீர்காழி இரா. சுவாமிநாதன்





நாராயண பட்டதிரி இரவும் பகலும் குருவைக் கவனித்துக் கொண்டார்...
இந்த மருந்தைச் சாப்பிடுங் -கள்...
ஜோதிட நண்பர் பார்க்க வந்தபோது...
இந்த நோய்தீர வழியே இல்லையா?
இருக்கிறதே!
குருவாயூரப்பனை பிரார்த்தித்துக் கொண்டு இந்த வாத ரோகத்தை வேறு யாராவது வாங்கிக் கொண்டால் இவருக்குக் குணமாகி விடும்...
குருவே! உங்களுக்கு உதவச் சம்மதம் கொடுங்கள். நான் இளைஞன், நோயைத் தாங்கிக் கொள்வேன்!
ஐயோ, வேண்டாம்!
கல்வியைத் தந்தது போல் வாதத்தையும் தர வேண்டும். மறுக்காதீர்கள்!


குருவுக்குத் துணையாகி விட...
நாராயணன் என்னை நடமாடச் செய்தான். அவனுக்கு எப்படி நன்றி சொல்வேன்...
குருவாயூரப்பனைப் பிரார்த்திப்பது ஒன்றுதான் நாம் செய்யக் கூடியது...
நாராயண பட்டதிரியின் அண்ணன் தாமோதரன்...
நாராயணா! இப்படி நடமாட்டம் இல்லாம போயிட்டியே! எழுத்தச்சன் பெரிய மகான். அவரிடம் யோசனை கேட்போம்...
இருவருக்கும் தம்பியான மாத்ரு-தத்தன் குருவாயூர் வந்து சேர்ந்து...
என் அண்ணன் நாராயண பட்டதிரி வாதத்தால் ரொம்பக் கஷ்டப் படறார்.
மீன் தொட்டுக் கூட்டச் சொல்லு!
தம்பி திரும்பி வர...
என்ன சொன்னார், எழுத்தச்சன்?
மீன் தொட்டுக் கூட்டணுமாம்... நாம் என்ன மீன் சாப்பிடு-கிறவர்களா?
அவர் பெரிய மகான். சொன்னதில் உட்பொருள் ஏதும் இருக்கும்...
எனக்குப் புரிகிறது...
என்ன?



பகவான் அவதாரங்-களை பாடச் சொல்-கிறார். மீன் அவதாரத்தில் தொடங்கி ஒவ்வொரு அவதாரமாகக் கூட்டி பாகவதம் முழுவதையும் பாடச் சொல்கிறார்...
ரொம்பக் கஷ்டப்பட்டு நாராயண பட்டதிரியை குருவாயூர் அழைத்து வந்தனர்...
தினம் பத்து சுலோகங்கள் இயற்றி பகவானைத் துதிப்பேன். நூறு நாட்களில் பாகவதம் பாடி முடிப்-பேன்!
சதா பகவான் சிந்தனையாக...
கால்களுக்குச் சக்தி தந்தால் உன்னை வலம் வருவேன்; கைகளுக்குச் சக்தி தந்தால் உன்னை பூஜிப்பேன்; கண்களுக்குச் சக்தி தந்தால் உன்னைத் தரிசிப்பேன்...
தொண்ணூற்றுஒன்பதாவது நாள்...
கிருஷ்ணா! என் நோய் தீர்ந்தது. இதோ எழுந்து நடந்து வரேன்...
பட்டதிரி நடமாட...
ஆகா, அற்-புதம்!
பகவான் அருள் பெற்ற நாராயண பட்டதிரியின் பாகவதம் அமுத இலக்கியமாக விளங்குகிறது.

யாருக்கு யார் சகோதரி?





செந்நாய் இரையை எப்படிப் பிடிக்கும்?

மரத்தின் மேல் அமைக்கப்பட்டிருந்த பரணில் பூபதி தன் மகன் நம்பியுடன் அமர்ந்திருந்தார். இருவர் கையிலும் துப்பாக்கி. பக்கத்தில் பிளாஸ்கில் டீயும், பிஸ்கட் டப்பாவும் இருந்தன. கம்பி இல்லாத் தந்தித் தொடர்பும் வைக்கப்பட்டிருந்தது.

கம்பி இல்லாத் தந்தி மெல்லிய ஒலி எழுப்பியது. நம்பி நகர்ந்து எடுத்துப் பேசினான்.

''கேம்ப் 'பி'யிலிருந்து அருண் பேசறேன்.''

''காம்ப் 'எ'வில் இருந்து நம்பி பேசறேன் அங்கிள். இங்கே எல்லாம் ரெடியா இருக்கு. இருட்டின பிறகுதானே புலி வரும்?''

''இப்பத்தான் 'சி' கேம்ப்போடு பேசினான். அங்கேயும் சுநீத் எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டு ரெடியா இருக்கான்.''

''அங்கிள், சூரியன் மறையும் காட்சி இங்கே உயரத்தில் ரெம்ப நல்லாத் தெரியுது. அப்படியே மிகப் பெரிய ஒரு

ரேவதி

செப்பு கால் பந்து மாதிரி எத்தனை அழகா இருக்கு தெரியுமா?''

''இங்கேயும் தெரியுது. அந்த நதிக்கு அப்பால் தகதகன்னு என்னமா ஜொலிக்குது தெரியுமா? நகரத்தில் பார்க்க முடியாத கண் கொள்ளாக் காட்சி! அட! என்னது.....?''

''என்ன அங்கிள்? ஏன் நிறுத்திட்டீங்க?'' என்று ஆவலுடன் கேட்டான் நம்பி.

''எதிரே நதிக்கரையில், புதர் நிறைந்த பகுதியில் புலி மாதிரி... இரு இரு... பைனாகுலரால் பார்த்துச் சொல்றேன். ஆமாம் ஆமாம்... புலியாரேதான் தண்ணி குடிக்கிறார்! நல்லாத் தெரியுது!''

''இப்படி மூன்று இடத்தில் நாம்ப இந்தப் புலியாரைப் பிடிக்க பரண் போட்டுக் காத்துக் கிட்டிருக்கோம். ராத்திரிதான் வருவார்னு நினைச்சிக்கிட்டிருக்கோம்! அவர் என்னடான்னா இப்படி இத்தனை வெளிச்சத்தில் தண்ணி குடிக்க வந்துட்டாரே! அங்கிள் நான் அந்த கேம்ப்புக்கு வராம போயிட்டேனே?'' என்று வருத்தப்பட்டுக் கொண்டான் நம்பி.

''வருத்தப்படாதே நம்பி. இங்கே மாலி டீ.வி. கேமெராவில் இது அத்தனையையும் படம் புடிச்சுத் தள்ளிக்கிட்டே இருக்கான். ஊருக்குப் போனதும் ஒய்வா போட்டுப் பார்க்கலாம். அடாடா...!''

''அருண் அங்கிள்! என்ன ஆச்சு?'' என்று பதறினான் நம்பி.





''ஒன்றும் ஆகலை நம்பி. புலியார் தண்ணியைக் குடிச்சிட்டு புதரில் ஹாய்யாயப் படுத்துக்கிட்டார். திடீர்னு சிலிர்க்குனு எழுந்து, எதையோ கண்டு பயந்த மாதிரி நதி ஓரமாவே ஓடிப் போறார். புலியாரையே பயப்படுத்தி மருள வைத்தது எதுன்னு தெரியலே! அட இதென்னது! போன சுருக்குலேயே திரும்பி வந்து வலது பக்கம் தலை தெறிக்க ஓடறாரே! என்னமோ நரி மாதிரி மூணுங்க ஓடிவருது! உடல் நீண்டிருக்கு. மெலிஞ்சிருக்கு. காலும் மூஞ்சியும் குட்டை. காது நுனி கிட்டத்தட்ட வட்டமாயும், வால் கத்தையாவும் இருக்கு.''

''அங்கிள், அது செந்நாயா இருக்கும் அங்கிள். விலங்குகள் கலைக்களஞ்சியத்தில் நான் படிச்சிருக்கேன். நாய் மாதிரியும் இருக்கும். நரி மாதிரியும் இருக்கும். பகல்லதான் இரை தேடும். இதைப் பார்த்தா எல்லா விலங்குகளுக்கும் சிம்ம சொப்பனம்தான். பீதி பிடிச்சு உயிரைக் காப்பாத்திக்க ஓடும்'' என்றான் நம்பி.

''ஆமாம், புலியார் பீதி புடிச்சுத்தான் ஓடறார். அட! எதிர்ப் பக்கம் இன்னும் மூன்று செந்நாய்ங்க! அந்தப் பக்கம் இன்னும் ரெண்டு! புலியார் கன வேகமா, தலை தெறிக்க பயங்கரமா பாய்ஞ்சு ஓடறார்! செந்நாய்களும் கூடவே ஓடுதுங்க... என் பார்வையிலிருந்து எல்லாம் மறைஞ்சு போச்சு...!''

''அப்ப, 'சி' கேம்ப்ல சுதீத்தோடு பேசிப் பார்க்கலாம். அங்கதான் போயிருக்கும்'', என்ற நம்பி, 'சி' கேம்ப்பை அழைத்தான்.

சுதீத்தின் குரல் கேட்டது.

''சுதீத், 'ஏ' கேம்ப்பில் இருந்து நம்பி பேசறேன். 'பி' கேம்ப்க்கு எதிரே ஒரு புலியை செந்நாயுங்க விரட்டுது. புலி மருண்டு ஓடி உங்க கேம்ப் பக்கமா வந்திட்டிருக்கு. கொஞ்சம் கவனமா இருந்து, காமிராவில் படம் புடி. முதல்ல, பைனாகுலர்ல பாரு. பார்த்து சொல்லு.''

சில நிமிடங்களில் சுதீத்தின் குரல் கேட்டது.

''நம்பி, நீ சொல்வது உண்மைதான். ஒரு புலியை செந்நாய்க் கூட்டம்

அறிவியல் உண்மைகள்!

★ செந்நாய் (Wild Dog) எனும் குவான் ஆல்பைன்ஸ் (Cuon Alpinus), கேனிடே (Canidae) குடும்பத்தைச் சேர்ந்தது.

★ இவைகளின் குறிப்பிடத்தக்க குணம், ஒற்றுமையாக வேட்டையாடிப் பகிர்ந்து கொள்வது. இதனால் இவை எந்தப் பெரிய விலங்குகளையும் வீழ்த்தி இரையாக்கிக் கொள்கின்றன. எந்த விலங்கும் இதற்கு விலக்கு அல்ல.

★ இவை பகலில்தான் வேட்டையாடுகின்றன.

★ இவைகளின் குடும்ப வாழ்க்கை ஓநாய்களின் வாழ்க்கையைப் போன்றது. ஒரே ஈட்டில் 4 – 6 குட்டிகள் போடும். பல குட்டிகளை ஒரே பெண் செந்நாய், தனது சொந்தக் குட்டிகளாகவே குழந்தைகள் காப்பகம் போல் கவனித்து வளர்க்கும்!

★ சங்க இலக்கியமான 'அகநானூறில்' பல பாடல்களில் செந்நாய் பாலை நில விலங்காகவே சித்திரிக்கப்பட்டுள்ளது.

★ செந்நாய்கள் இருக்கும் காடுகளில் மற்ற விலங்குகள் உயிர் வாழ்வது பெரும் சவாலாக இருப்பதால் செந்நாய்களை மட்டும் தனிமைப்படுத்தும், பல திட்டங்களைப் பரிசீலித்துப் பார்த்து வருகின்றனர்.

★ செந்நாய்க்கு மிகவும் பிடித்த இரை மான்கள். செந்நாய்களுக்கு அஞ்சி மான்கள் நாடோடி (காடோடி)களாக இடம் பெயர்வதால், மேய்சலால் நிலங்கள் பாழாகாது தடுக்கப்படுகின்றன.

★ எந்த ஒரு செந்நாயாவது இறந்தால், மற்ற செந்நாய்கள் அதை இரையாக்கிக் கொண்டு விடும். கேட்பதற்கு பயங்கரமாகத் தோன்றினாலும் இது இயற்கையின் நன்கொடை...

★ செந்நாயின் தோல்கள் நகைகளுக்கு மெருகேற்றப் (பாலீஷ்) பயன் படுகின்றன.

துரத்துது. புலி பயந்து போன மாதிரி ஓடுது!''

''அது பயந்து போன மாதிரி இல்லே. உண்மையான பயம்தான்!''

''புலி, யானைக்குக் கூட பயப்படாதும்பாங்க! இப்படி சுண்டைக்காய் செந்நாய்க்கு பயந்து ஓடுதே!''

''ஏன்னா, உண்மை நிலை அப்படி! செந்நாயுங்க கண்ணிலே எந்த விலங்கு பட்டாலும், அதன் ஆயுள் முடிஞ்சு போச்சுன்னு பொருள்.''

''அப்படியா! அந்த அளவுக்கு செந்நாய்கள் வலிமை மிக்கவையா?''

''வலிமைன்னு மட்டும் சொல்ல முடியாது. அவைகளிடம் உள்ள ஒற்றுமை உணர்வு பயங்கரமானது. எல்லாமாக ஒன்று சேர்ந்து தான் வேட்டை ஆடும். இது பகல் நேரத்தில்தான் நடக்கும். இரண்டிரண்டாகவோ, மூன்று மூன்றாகவோதான் இரையைத் துரத்தும். கால் சோர்ந்து களைப்படைந்ததும், இன்னொரு குழு பொறுப்பேற்று தொடரும். இப்படியே சிக்கிக் கொண்ட விலங்கு களைப்படையும் வரை மாற்றி மாற்றித் துரத்தும்.''

''ஆமாம், இதபார். இன்னும் ரெண்டு செந்நாய்ங்க புதுசா வந்து சேர்ந் திருக்கு! இப்போ அவைகள் துரத்து கின்றன. புலி வந்த வழியாவே, திரும்பி ஓடுது. எதிரே இன்னும் ஒரு குழு வருது. புலி இப்போ எதிர்ப்பக்கம் பாய்ந்து ஓடுது. இந்த செந்நாய்களும் விடாம துரத்துது. அட, இங்கே பாரேன்! ஒரு சிறுத்தை இதுங்களைப் பார்த்துட்டு மரத்துமேல ஏறி ஒளிந்து கொள்கிறது! இத்தனை பயங்கரமான வையா இந்த செந்நாய்கள்! அசப்புல நம்ம அல்சேஷன் மாதிரி, ஆனா மெலிஞ்சு, சிவப்பும் கறுப்புமா இருக்கு! இப்போ புலி என் பார்வையில் இருந்து மறைஞ்சே போச்சு!''

''அப்ப, எங்க கேம்ப பக்கம்தான் இனிமே ஓடிவரும். நான் பார்த்து உனக்கு சொல்றேன்'' என்றான் நம்பி.

அடுத்த சில நிமிடங்களில் அந்த அதிசயக் காட்சி நம்பியின் கண்களுக்குத்

தெரிந்தது. பைனாகுலர் இன்னும் தெளிவாகக் காட்டியது.

புலி இரைக்க இரைக்க ஓடிவர, பின்னாலேயே நான்கு செந்நாய்கள் துரத்தி வந்தன! இப்பொழுது எல்லாப் பக்கங்களிலும் இருந்தும் செந்நாய்களின் குழுக்கள் ஓடி வந்து புலியை வளைத்தன. புலி சோர்ந்து காணப்பட்டது. செந்நாய்களின் வளையம் சுருங்கி, நெருங்கியது. அவ்வளவுதான் அத்தனை செந்நாய்களும் ஒன்றாகப் புலியின் மேல் தாவின! புலி தீனமாக உறுமியது. தொடர்ந்து உறுமியது. அதன் உறுமல் சத்தம் சிறிது சிறிதாக அடங்கியது!

''சுநீல், இனிமேல் இந்தக் கொடுமையான காட்சிகளை என்னால் விவரிக்க முடியாது. செந்நாயைக் கண்டால் ஏன் எல்லா விலங்குகளும் உயிருக்குப் பயந்து ஓடுகின்றன என்பதன் உண்மையான காரணம் என் கண் முன்பாக நடந்து கொண்டிருக்கிறது. காட்டெருமை, மான்கள், சிங்கம், சிறுத்தை, காட்டுப் பன்றி, கரடிகள் என்று எல்லாவற்றிற்கும் செந்நாய்கள் சிம்ம சொப்பனம். மனிதரைக் கண்டால் மட்டுமே இவை அஞ்சுகின்றன.''

''நல்ல வேடிக்கை போ! நாம் எந்தப் புலியைப் பிடிக்க மூன்று கேம்ப் போட்டு முயன்று இத்தனை பாடுபட்டோமா, அதே புலியை இந்த செந்நாய்க் கூட்டம் இப்படிப் பலகாரம் பண்ணி விட்டதே! இனிமே வீணாக எதற்கு கேம்ப்? நாம்ப கிளம்ப வேண்டியது தானே?'' என்று கேட்டான் சுநில்.

''வேற வேலை என்ன இருக்கு? கொண்டு வந்த டீயைக் குடிச்சுட்டு நானும் அப்பாவும் கூடக் கிளம்ப வேண்டியதுதான்'' என்றான் நம்பி.

''இனிமேல் யாரையாவது பயப்படுத்த வேண்டும் என்றால் உன்னைப் புலியிடம் போட்டு விடுவேன்னு சொல்லக் கூடாது. செந்நாய்க் கூட்டத்தில் போட்டு விடுவேன்னு சொல்ல வேண்டியதுதான்'' என்று சிரித்தான் சுநில்.



கோடைக்காலம்

கோடைக் காலம் ஆனதால்
கொல்லும் வெயிலும் வந்ததாம்
கோடைக் காலச் சூட்டினைக்
குறைக்க வழியும் உள்ளதாம்.

தாகம் தீர்க்க அடிக்கடி
தண்ணீர் தேடிக் குடிக்கலாம்.
வேகம் வேகம் வந்திடும்
விக்கல் நிற்கக் குடிக்கலாம்.

நீண்டு நிற்கும் தென்னைகள்
நீரை உண்டு குலையிலே
வேண்டும் போது குடித்திட
விருப்ப மோடு தந்திடும்.

தண்ணீர் இல்லா மேட்டிலும்
தலைஉ யர்த்தும் பனைமரம்
உண்ப தற்கு நுங்குகள்
உலகம் மகிழத் தந்திடும்.

மிளகும் உப்பும் சேர்த்திட
மேன்மை யாகும் மோருடன்
தளரும் உள்ளம் என்றுமே
தாளம் போட்டுச் சிரித்திடும்.

தாகம் தீர்க்க வெள்ளரி
நகரத எக்கும் கடையிலே,
பாகம் செய்து ஆயிரம்
பழமும் வந்து விற்றிடும்.

- அழகனார்





விளையாட்டு!

விளையாட்டப்பா விளையாட்டு
வீரம் சேர்க்கும் விளையாட்டு
நீளம் தாண்டும் விளையாட்டு
நன்மை பயக்கும் விளையாட்டு

வட்டு எறியும் விளையாட்டு
வலிமை கூட்டும் விளையாட்டு
ஓட்டம் ஓடும் விளையாட்டு
உயர்வு அளிக்கும் விளையாட்டு

சடுகுடு ஆடும் விளையாட்டு
சலிப்பை விரட்டும் விளையாட்டு
தடைகள் எல்லாம் தகர்த்திடவே
துணிவைத் தந்திடும் விளையாட்டு!

-எஸ்.சரவணன், திருச்சி



கண்ணன் சொன்னது!

காலைப் பொழுதில் என்னைப் பார்த்துக்
கண்ணன் சிரிக்கிறான்!
கையில் உள்ள குழலைக் கொண்டு
கானம் பொழிகிறான்!

உருண்டை வடிவ அழகு வாயைத்
உயர்த்திக் காட்டுறான்!
உருளும் உலகை அந்த வாயில்
உருட்டிக் காட்டுறான்!

பகவத் கீதை எடுத்து வந்து
படிக்கக் கொடுக்கிறான்
வகையாய் புரிந்து நடப்பின் உலகம்.
வாழும் என்கிறான்.

கண்ணன் சொன்ன சொல் இதனைக்
கூறிவிட்டேன் நான்
கேட்டு இதைக் கடைப் பிடித்தல்
கடமை அறிவீரே!

- எஸ்.கண்ணகி, குடும்பட்டி





ஐஸ்கிரீம்

அப்பா உடனே வாருங்கள்
அழகு ஐஸ்கிரீம் வாங்குங்கள்
சப்பி நன்கு சுவைத்திடலாம்
சீக்கிரம் வந்து வாங்குங்கள்!

பாலில் செய்த அமுதமிது
பாதம் பருப்பும் சேர்ந்தது!
மேலும் மேலும் இதன்பெருமை
முழுதும் விளக்க முடியாது!

காலம் சிறிது தாழ்த்திடில்
கரைந்து போகும் பண்டமிது!
காலம் பொன்னென சொன்னதுபோல்
கவனம் உடனே வாங்குங்கள்!

-மலை மா.ஆறுமுகம்,
மணிமங்கலம்




பார்!பார்!

வானில் மேகம் ஓடுதுபார்
வாடைக் காற்றில் கூடுது பார்
வானில் ஒளி மறையுதுபார்
வண்ணத் துளி இறங்குதுபார்!

வான வில்லும் எழுந்ததுபார்
வண்ண ஜாலம் இறைக்குதுபார்
கானக் குயில் நடுங்குதுபார்
களிப்பில் மயில் ஆடுதுபார்!

துள்ளிவரும் தவளைபார்
தூரல் பட்டுப் பாடுது பார்
தெள்ளு புழுதிப் பாதையைப்பார்
தூறல் பட்டு மணக்குதுபார்!

-கு.காளிமுத்து, வல்லம்



கொக்கு




நீந்தும் மீனைப் படிக்கவே
நீரில் கொக்கு நிற்குமாம்!
விந்தை அலகு நீளமாம்
வந்தால் இதனைக் காணலாம்


ஓடும் மீன்கள் ஓட்டத்தை
ஓரக் கண்ணால் பார்க்குமாம்
குட்டி மீனைக் கவ்வியே
குஞ்சைத் தேடிப் பறக்குமாம்!

பாலின் வண்ணம் போலவே
பார்த்து வியக்க வைக்குமாம்!
காலில் ஒன்றை மடக்கியே
கடிய தவம் புரியுமாம்!

நாடு மொழி வேற்றுமை
நோக்கா நல்ல கொக்கிது
பாடி இதன் பெருமையை
போற்றி மகிழ வாருங்கள்!

-ராதாவிவகுவநாதன், பம்பாய்







மிட்டாய்


மிட்டாய் இனிப்பு மிட்டாய்
மினா கடை மிட்டாய்
மீண்டும் வாங்கித் தின்ன
மயக்கித் தூண்டும் மிட்டாய்!

பேரக் குழந்தை அழுதால்
பாட்டிக் குதவும் மிட்டாய்!
முறுக்கு வடை நடுவே
முதலில் மயக்கும் மிட்டாய்!

மிட்டாய் என்று சொன்னால்
முகத்தைச் சுளிப்பார் உண்டோ?
தட்டு நிறையத் தந்தால்
தருவன் உனக்கு ஒன்று!

த.கை. புனிதா,, நா.தட்டக்கல்






கே.சீனுவாசன், பரங்கிப் பேட்டை.

? E.C.G. என்றால் என்ன டாக்டர்?

● Electro Cardio gram. இதன் சுருக்கம் தான் E.C.G. தமிழில் இதற்கு 'இதய மின் அலைக் கருவி' என்று பெயர். 1906-ஆம் ஆண்டில் ஹாலந்து நாட்டைச் சேர்ந்த எய்ன்தோவன் (EINTHOVEN) என்ற விஞ்ஞானி இந்த கருவியைக் கண்டு பிடித்தார். இதயத்தில் ஓடிக் கொண்டிருக்கும் மிகச் சிறிய அளவிலான மின்னோட்டத்தை ஒரு வரை படத்தில் அலைகளாகப் பதித்து, அதன் மூலம் இதயத்தின் செயல் பாடு, வேகம், இருப்பிடம், வீக்கம், இதயத் துடிப்பு, மாரடைப்பு, வாயுக் கோளாறுகள், இதயச் செயல் இழப்பு, இதயச் சுவரில் நீர்த் தேக்கம், தைராய்டு பற்றாக்குறை, கால்சியம் குறைவு, பொட்டாசியம் பற்றாக் குறை போன்ற பல நோய் நிலைகளை எளிதிலும், விரைவாகவும், குறைந்த செலவிலும் கண்டறிய உதவும் மகத்தான கருவி இது.



எலும்புக்கூடு ஆணா பெண்ணா அறிய முடியுமா?



கே.எஸ்.கணேஷ், மச்சுவாடி.

? லூக்கிமீயா என்றால் என்ன? அந்த நோய் எதனால் வருகிறது? உடம்பில் எந்த பாகத்தைத் தாக்குகிறது?

● ரத்தப் புற்றுநோயை மருத்துவர்கள் 'லூக்கிமீயா' (LEUKAEMIA) என்கிறார்கள். இந்த நோய்க்கான உண்மையான காரணத்தை இன்னும் முழுமையாகக் கண்டு பிடிக்க வில்லை. வைரஸ் கிருமிகள் மற்றும் அணுக்கதிர் வீச்சு மூலம் ரத்தப்

புற்றுநோய் வருவதை நிரூபித்திருக்கிறார்கள். இந்த நோய், ரத்த அணுக்களைப் பெரிதும் பாதிக்கிறது. இதன் விளைவாக ரத்த அணுக்கள் முழுவளர்ச்சி அடையாமல் அரைகுறை வளர்ச்சியுடன் ரத்தத்தில் பணி செய்கிறது. அப்போது ரத்த சோகை, ரத்தம் இழப்பு, நீடித்த காய்ச்சல் போன்ற தொந்தரவுகள் தொடர்ந்து தொல்லை கொடுக்கும். நோயின் இறுதிக் கட்டத்தில் மரணம் ஆட்கொள்ளும்.

ப.கணேஷ், ஜோதி நகர்.

? ஒருவர் உபயோகிக்கின்ற சோப்பை அடுத்தவர் உபயோகித்தால் தோல் வியாதிகள் வரும் என்கிறார்களே, உண்மையா டாக்டர்?

● உண்மைதான், கணேஷ். பெரும்பாலான தோல் வியாதிகள் தொட்டால் ஒட்டிக் கொள்ளக் கூடியவை. பல தோல் வியாதிகள் வெளியே தெரியாது. ஆனால் நோய் இருக்கும். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் தோல் வியாதி உள்ளவர்கள் உபயோகித்த சோப்பை அடுத்தவர்கள் உபயோகித்தால் வியாதி அவருக்கும் பரவி விடும். சொறி, சிரங்கு, சிழ்க் கொப்புளம், அம்மை, காளான்படை, பால்மரு, தேமல், பித்த வெடிப்பு, நகச் சொத்தை, குஷ்டம் போன்றவை சோப்பு மூலம் பரவக் கூடிய சில தோல் வியாதிகள்.

எஸ்.கே. அரங்கநாதன், ஜலகண்டபுரம்.

? எலும்புக் கூட்டை வைத்து ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்க முடியுமா, டாக்டர்?

● முடியும். பொதுவாகவே ஆண்களின் எலும்பு பெரிதாக இருக்கும்; கனம், எடை அதிகமாக இருக்கும். பெண்களின் எலும்பு சின்னவை; எடை குறைவாக இருக்கும். ஒரே வயதுள்ள ஆணின் மண்டை அகலமாகவும், பெரிதாகவும் இருக்கும். பெண்ணின் மண்டை சின்னது. அகலத்தில் பத்து சதவீதம் குறைவாக இருக்கும். ஆண்களின் இடுப்பு எலும்பு (PELVIS) ஒடுக்கமாக இருக்கும். ஆழம் அதிகமிருக்கும். கனம் கூடியது. பெண்களின் இடுப்பு எலும்பு அகலமாக இருக்கும். ஆழம் குறைவாக இருக்கும். கனம் குறைந்திருக்கும். பெரும்பாலும் இடுப்பு எலும்பை வைத்துத்தான் அது ஆணா, பெண்ணா என்பதைத் திட்டவட்டமாக மருத்துவர்கள் கூறுவார்கள்.



ஜெ.ராஜேஷ், விழுப்புரம்.

? காதில் உள்ள அழுக்கை சுத்தம் செய்யும் முறை என்ன?

● ஒரு மரக்குச்சியின் நுனியில் சிறிது பஞ்சைச் சுற்றிக் கொண்டு அதனால் காதைச் சுத்தம் செய்யலாம். கடைகளில் விற்கப்படும் 'பட்ஸ்' (BUDS) உதவியுடனும் காதை சுத்தப்படுத்தலாம். அதே



சமயம் தேவையில்லாமல் காதைக் குடைந்து கொண்டிருக்கக் கூடாது. பேனா, பென்சில், பலப்பம், ஊக்கு, கம்பி, ஹேர்-பின் போன்றவற்றால் காதை சுத்தப்படுத்தக் கூடாது. காதில் அழுக்கு சேர்ந்து வலி மற்றும் அரிப்பு போன்றவை ஏற்பட்டால் நீங்களாகவே காதை சுத்தப்படுத்த முயற்சிக்காதீர்கள். 'காது-மூக்கு-தொண்டை' மருத்துவரை ஆலோசியுங்கள். நன்றாக சுத்தம் செய்ய வேண்டும் என்கிற ஆசையில் உள்காது வரைக்கும் பஞ்சுக் குச்சியை நுழைத்து விடாதீர்கள். செவிப்பறை கிழிந்துவிடும். ஆபத்து அதில் இருக்கிறது. கவனம்! கவனம்!

– டாக்டர் கு. கணேசன்

திட்டமா போடுகிறீர்கள்?

தண்ணீர் வறட்சி எல்லா இடத்தையும் போலவே தங்க வேலரின் தோட்டத்தையும் பாதித்தது.

தென்னங்கன்றுகள், கொய்யாக் கன்றுகள், மாஞ்செடிகள், மாதுளைக் கன்றுகள், என்று பலவகைகளில் உயர் ரகமாக வாங்கி வந்து அந்தத் தோட்டத்தில் நட்டிருந்தார் அவர்.

தங்கவேலர் பணியாட்களை அழைத்தார். ''நீங்கள் எப்பாடு பட்டாவது இந்தக் கன்றுகளைக் காப்பாற்றி விட வேண்டும். இவை பூத்துக் காய்த்துக் குலுங்குவதை நான் பார்க்க வேண்டும். என் வருவாய்க்காக மட்டும் இவற்றை நடவில்லை. அவை செழித்து வளர்வது நம் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்கும். இந்தச் செடிகள் மரமாகிப் பலன் தரும்போது, அதில் உங்களுக்கும் பங்கு உண்டு. காய்களையும், பழங்களையும் உங்களுக்கும் மகிழ்ச்சியோடு தருவேன்'' என்றார்.

பணம் பணம் என்று அலையும் உலகில் தங்கவேலர் வித்தியாசமான மனிதர். தேவைக்கு மேல் இருக்கும் பணத்தை நல்ல பணிகளுக்குச் செலவிட வேண்டும் என்று எண்ணுபவர். அதற்கு முன்னோடியாக இருப்பவர். பிறர் உழைப்பைச் சுரண்டி வாழும் மனிதர் நிறைந்த உலகில் பிறர் உழைப்பை மதித்துப் போற்றத் தெரிந்தவர் அவர். அதனால் , அவர் சொன்னதைச் செய்வார் என்ற நம்பிக்கை பணியாளர்களுக்கு ஏற்பட்டது.

''ஐயா, உங்கள் அன்புக்கு நன்றி. ஆனாலும், நம் கிணற்றில் கிடைக்கிற சொற்ப நீரை இத்தனை செடிகளுக்கும் எப்படி ஐயா பயன்படுத்துவது?'' என்றான் முருகையன்.

''ஏற்கனவே நட்ட செடிகள் ஓரளவு வளர்ந்துள்ளன. அந்தச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வாய்க்கால் வெட்டினோம். ஆனால், வாய்க்கால் வழியாகப் போகிற நீரைத் தரை உறிஞ்சிக் கொண்டது. செடிகளுக்குப் போய்ச் சேர்ந்த நீர் மிகக் குறைவு. பழைய செடிகள், புதிய செடிகள் இரண்டையும் எப்படியாவது காப்பாற்றவேண்டும். அதற்கேற்ப ஏதாவது வழி காண வேண்டும்'' என்றான் தங்கமணி.

முருகையன் சொன்னான்: ''சிமெண்ட் வாய்க்கால் கட்டுங்கள். தண்ணீர் எவ்வளவோ மிச்சமாகும்.''

''கட்டலாம். நல்ல யோசனை. ஆனால், இன்றைய நிலையில் எனக்கு இதைக் கட்டக் கூடிய வசதி இல்லை. வேறு ஏதாவது வழி சொல்லுங்கள்.

''உங்களுக்கு மிகுந்த செலவு என்பது உண்மைதான். ஆனால், சிமெண்ட் வாய்க்கால் கட்டினால் எங்கள் வேலை மிச்சமாகும். தற்போதுள்ள நீர் நெருக்கடியைத் தவிர்க்க வேறு ஒரு வழி கூட இருக்கிறது.''

தங்கமணி சொல்லப்போகும் திட்டத்தை அறியத் தங்கவேலர் ஆர்வமாக இருந்தார்.

பூதலூர் முத்து

''ஒவ்வொரு செடிக்கு அருகிலும் துளை பானைகளைப் புதைப்போம். எங்களுக்கு உதவ நான்கு சிறுவர் சிறுமியரை அமர்த்துங்கள். அந்தப் பானைகளில் நீரை நிரப்பி விடலாம். பானையின் துளை வழியாக நீர் கொஞ்சம் கொஞ்சமாகச் செடிகளுக்குப் போகும். இதனால் நீர் எவ்வளவோ மிச்சமாகும்.''

''தங்கமணி, உங்கள் தங்கமான யோசனை என் தவிப்பைப் போக்கி விட்டது. தேவையான பானைகளை நாளைக்கே வாங்கி விடுங்கள். நம் ஊரில் மண்பாண்டம் செய்யும் மகாலிங்கத்திடமே வாங்குங்கள். அவருக்கும் உதவியாக இருக்கும்; மகிழ்ச்சியாக இருக்கும்...''

அடுத்த நாளே ஏராளமான பானைகள் வந்து சேர்ந்தன. மகாலிங்கத்திற்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி. அவர் வீட்டு முற்றத்தில் மாதக் கணக்கில் குவிந்து கிடந்த அவற்றைக் காக்க அவர் படாதபாடு பட்டார். இப்பொழுது அவை எல்லாம் விலை போய்விட்டன.


தங்கவேலரது தோட்டத்தில் பணிகள் சுறுசுறுப்பாக நடந்தன.

தங்கமணி தங்கவேலரிடம் வந்தார்.

''ஐயா, இந்த மூன்று நாட்களில் எல்லாப் பானைகளையும் உரிய இடங்களில் புதைத்துவிட்டோம். எங்களுக்கு உதவியாக உள்ள புகழேந்தியும் வள்ளியும் சிட்டாக வேலை செய்கிறார்கள். எங்கள் பொறுப்பில் எல்லாப் பானைகளும் உள்ளன. அவற்றில் பத்துப் பானைகளைப் புகழேந்திக்கும், பத்துப் பானைகளை வள்ளிக்கும் ஒதுக்கியிருக்கிறோம். அவர்களுக்கு ஆர்வமும் பயிற்சியும் ஏற்படவே இந்த ஏற்பாடு.''

தங்கவேலர் உடனே புகழேந்தியையும் வள்ளியையும் அழைத்தார்.

''புகழேந்தி, வள்ளி, என்னுடைய தோட்டத்தில் வேலை செய்வதால் உங்கள் படிப்புக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பள்ளி முடிந்தபிறகு இங்கே வந்து வேலை செய்தால் போதும். இதற்கு உரிய ஊதியமும் உண்டு. நீங்கள் காட்டுகிற



ஆர்வத்தைப் பொறுத்து ஊதியம் உயரும். படிப்பில் நீங்கள் காட்டும் அக்கறைக்கும் கூட தனியே பரிசு உண்டு.''

-அவருடைய அன்பும் பரிவும் அவர்களுக்குத் தேனாய் இனித்தன.

இருபது நாள்கள் சென்றன. தங்கவேலர் தோட்டத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று செடிகளின் வளர்ச்சியைக் கவனித்தார்.

புகழேந்திக்கும் வள்ளிக்கும் ஒதுக்கப்பட்ட பகுதிக்கு வந்ததும் அவர் மிகுந்த வியப்புக்கு உள்ளானார்.

அந்த நேரத்தில் தங்கமணியோ, முருகையனோ இல்லை. சற்றுத் தூரத்தில் புகழேந்தியும் வள்ளியும் செம்பருத்தி, கனகாம்பரம், மல்லிகைப் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்க வேலரின் வியப்புக்கு என்ன காரணம்? மற்ற ஊழியர்கள் பொறுப்பில் விடப்பட்ட கன்றுகளை விட புகழேந்தி, வள்ளி ஆகியோர் பொறுப்பிலிருந்த கன்றுகள் செழித்து வளர்ந்திருந்தன!

அதன் காரணம் தங்கவேலருக்குப் புரியவில்லை. அவர்கள் இருவரையும் அழைத்தார்.

''இந்த வறட்சியான காலத்தில்கூட உங்கள் செடிகள் மட்டும் எப்படி இவ்வளவு செழிப்பாக வளர்ந்தன?''

வள்ளி சொன்னாள், ''ஐயா, நாங்கள் செய்த ஒரு புதிய முயற்சிதான் இதற்குக் காரணம்''



சில நாட்களுக்கு முன்பு நடந்தது அது. இருபது நாள்களுக்கு முன்னால் அந்தச் செடிகள் இருந்த நிலை என்ன என்பது தங்கவேலருக்குத் தெரியும். பானைகளைப் புதைத்துச் சில நாள் ஆகியிருந்தன. அவற்றில் சரியாக நீர் ஊற்றுகிறார்களா என்பதை அறிய முனைந்தார் தங்க வேலர்.

ஒவ்வொரு பானையாகப் பார்த்துக் கொண்டு வந்தார். தண்ணீர் ஊற்றிய சுவடே தெரியவில்லை. முருகையனை அழைத்தார்.

''முருகையன், நீ கேட்டபடி உதவிக்கு ஆட்களைப் போட்டுவிட்டோம். எல்லாரும் சரியாக வேலை செய்கிறார்களா? முறையாகத் தண்ணீர் ஊற்றுகிறார்களா?''

''ஊற்றுகிறார்கள் ஐயா...''

''பானைகளில் நீர் இல்லையே!''

''துளைகள் வழியாக செடிகளுக்குப் போய்விட்டன.''

''ஊற்றிய நீர் அவ்வளவு விரைவாகப் போகிறதா...?''

''ஆமாம் ஐயா...''

''சரி...இன்னும் ஒரு ஆளை அமர்த்துகிறேன். உங்க உறவுப் பையன் அண்ணாமலையையே வைக்கலாமே? அவனுக்கும் உதவின மாதிரி இருக்கும்''

தங்கவேலர் சென்று விட்டார்.

புகழேந்தியும் வள்ளியும் அவர்களுக்கு உரிய பகுதிக்கு வந்தார்கள்.

''வள்ளி நாம் மறுபடி இந்தப் பானைகளில் தண்ணீர் ஊற்றலாமா?'' என்றான் புகழேந்தி.

''ஒவ்வொரு பானைக்கும் இரண்டு குடத்துக்குமேல் ஊற்றக் கூடாதுன்னு ஐயா சொல்லியிருக்காங்க. நல்ல பேர் வாங்கத் திட்டம் போடறீங்களா?'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர் வள்ளியும், புகழேந்தியும். அவர்களோடு வேலைக்கு அமர்த்தப்பட்ட அண்ணாமலைதான்; எதையாவது பண்ணி அவர்கள் மட்டும் நல்ல பெயர் எடுத்துவிடக் கூடாது என்கிற கவலை அவனுக்கு!

அவன் கேள்வி கேட்ட விதம் இருவருக்கும் ஒரு மாதிரி இருந்தது. பேசவில்லை. புகழேந்தியும் வள்ளியும் வீட்டுக்குத் திரும்பினார்கள். வரும் வழியிலும் செடிகள்,பானை பற்றிய சிந்தனையிலேயே இருந்தார்கள்.

வள்ளி சொன்னாள், ''புகழேந்தி...இது வெயில்காலம். நீர் நிலைகளில் உள்ள தண்ணீர், வெப்பத்தால் ஆவியாகும் என்று நாம் படித்தோம்... அதே நிலைதான் திறந்த வெளியில் இருக்கும் இந்தப் பானைகளுக்கும் ஏற்பட்டிருக்கு''

''ஆமாம்.. பானையின் வாய் திறந்தே இருப்பதால் நீர் ஆவியாகிப் போகிறது. செடிக்குப் போகும் நீர் குறைகிறது. இதைத் தடுத்துவிட்டால் இன்னொரு முறை பானையில் நீர் விட அவசியமே இல்லை''

இருவருமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். தங்கவேலரிடம் சென்றார்கள்.

புகழேந்தியும், வள்ளியும் தங்கவேலரை அழைத்துச் சென்று அவர்களுடைய பானைகளைக் காட்டினார்கள். இப்போது அவற்றில் நீர் இருப்பதைப் பார்த்தார்.

மூடிகள் வாங்கி வந்து அந்தப் பானைகளை மூடி வைத்ததால், வாய் வழியே நீர் ஆவியாகி வீணாவதில்லை என்பதைத் தெரிவித்தார்கள்.

தங்கவேலர் மகிழ்ச்சியில் அவர்களுடைய முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''தண்ணீரை மிச்சப்படுத்தும் அருமையான இந்த முறையை மற்றவர்களும் பின்பற்றலாமே...''

''சோதித்துப் பார்த்து விட்டோம். இருபது நாளில் நல்ல மாற்றம் தெரிகிறது. இனி மற்றவர்களும் இதைப் பின்பற்றலாம்.''

தங்கவேலர் ஆர்வத்தோடு எல்லாப் பணியாளர்களையும் அழைத்தார். திட்டத்தை விளக்கினார். புகழேந்திக்கும் வள்ளிக்கும் ஊதிய உயர்வை அறிவித்தார்.



''என்ன கழுகாரே!
ஃபேன் (Fan) வாங்கிப்
போறீங்க?''

''அடிக்கடி மூக்கில்
வியர்த்துக் கொட்டுது!''

- கே. சோமசேகர்


தபால் பெட்டி

தெருவில் உள்ள பெட்டியாம்
தினமும் பார்க்கும் பெட்டியாம்
அருமை நண்பன் போலவே
அனைவர்க் குதவும் பெட்டியாம்!

இரும்பில் செய்த பெட்டியாம்
என்றும் உழைக்கும் பெட்டியாம்
திருடர் தூக்காப் பெட்டியாம்
சிவப்பு வண்ணப் பெட்டியாம்

அந்தப் பெட்டி யாதென்று
அறிந்து கொள்ள வேண்டுமா?
இந்தத் தெருவின் கோடியில்
இருக்கும் தபால் பெட்டியாம்!

-தேனி முருகேசன், தேனி



அறிவாய் பாப்பா!

பள்ளி செல்லும் பாப்பா
பாடம் நன்கு பயில்வாய்
கல்வி கூடத் தொழிலும்
கற்று வைத்தல் நன்மை.

பிறந்த நாட்டின் உயர்வை
போற்றி அறிதல் கடமை.
மறந்தால் உனக்கு என்றும்
மன்னிப் பில்லை அறிவாய்!

உன்னைப் போன்ற பிள்ளை
உயர்ந்தால் நாடும் உயரும்.
என்றும் உழைப்பை மறக்கா
உறுதி உனக்கு வேண்டும்.

பழைய பெருமை மட்டும்
பாடின் யாரும் மதியார்
உழைப்பு ஒன்றே உன்னை
உலகோர் வியக்க வைக்கும்.

-வி.ஜி.சந்தோஷம்., சென்னை 15



கடல் கன்னிகள் உண்மையா?




கடலில் 'கடல் கன்னிகள்' என்னும் தெய்வப் பெண்கள் வாழ்வதாகவும், 'கடல் மனிதர்கள்' வாழ்வதாகவும் நீண்ட காலமாகவே கதைகள் உண்டு. இந்தக் கதைகளை நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அல்லது ஏதாவது புத்தகத்தில் படித்து ரசித்திருப்பீர்கள்! குறிப்பாக, கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களிடையேயும், மாலுமிகளிடையேயும் இதுபோன்ற சுவையான கதைகள் நிறைய உள்ளன.


கடலில் வாழும் கடல் கன்னி எப்படியிருப்பாள்? இடுப்பிற்கு மேலே பாதி உடல் பெண்ணைப் போலவும், இடுப்பிற்குக் கீழே உள்ள பகுதி மீனைப் போலவும் இருப்பாளாம்! இவள் உருவத்தை இப்படித்தான் கதை சொன்னவர்கள் இதுவரை சித்தரித்திருக்கிறார்கள். இந்தக் கன்னிகளுக்கு மனிதர்களைக் கண்டால் பிடிக்காதாம்! அவர்களுக்குக் கெடுதல் விளைவிக்கக் முயலுவார்களாம்! இப்படியெல்லாம் பழங்காலக் கதைகள் கூறுகின்றன.

நம் இதிகாசமான ராமாயணத்தில் கூட அனுமன் இலங்கைக்குச் சென்றபோது, கடல் அரக்கி ஒருத்தி அனுமனைத் தடுத்து நிறுத்தியதைப் படித்திருப்பீர்கள்!

ஆனால், உண்மையில் கடல் கன்னியும், கடல் மனிதனும் வாழ்வதாக இதுவரை உயிரியலார் ஒப்புக் கொண்டதில்லை. கடலில் வாழும் கடற்பசுக்கள் அல்லது பெரிய ஆமைகளைப் பார்த்து மீனவர்களும், மாலுமிகளும் இப்படிக் கதை கட்டியிருக்கலாம் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

கனடாவைச் சேர்ந்த டாக்டர் லேன். டாக்டர் ஷ்ரோடர். இவர்கள் இருவரும் கடல் கன்னி குறித்து ஆராய்ச்சி செய்தனர். இவர்களது ஆராய்ச்சி அறிக்கை





கடல் கன்னி குறித்த கதைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியே வைத்துவிட்டது என்றும் கூறலாம்.

கடல் கன்னி என்பது வெறும் மாயத் தோற்றம்தான் என்று இந்த இரு ஆராய்ச்சியாளர்களும் கூறுகிறார்கள். குளிர்ந்த கடல் பகுதியும், வெப்பமான நிலப்பகுதியும் உள்ள இடங்களில் இரண்டு விதக் காற்றும் கலந்து ஒரு விநோதமான சூழ்நிலையை உருவாக்குகிறது என்றும், அப்பொழுது அங்குள்ள காற்று 'லென்ஸ்' போல செயல்படுவதால், சாதாரணமான வால்ரஸ், கடல் ஆமைபோன்ற பிராணிகள் கூட விநோதமாகத் தோன்றுகிறது என்று இவர்கள் கூறுகின்றனர். வின்னிபெக் ஏரியில் இப்படி வானிலை ஏற்பட்ட போது தோன்றிய உருவத்தையும் இவர்கள் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஒரு முறை பபுவா நியூகினி தீவுக்கு அருகில் கடல் கன்னி இருப்பதாகக் கூறப்பட்டது. உடனே அமெரிக்கா, நியூஸிலாந்து நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அங்கே விரைந்து ஆராய்ச்சி செய்தனர். இறுதியில் அது கடல் பசுதான் என்று தெரிய வந்தது.

கடல் பசுவும் கூட மிகவும் அபூர்வமான தோற்றம் கொண்ட கடல் பிராணியாகும். பக்கவாட்டில் உள்ள இதனுடைய இரண்டு துடுப்புகளும் மனிதனின் இரண்டு கைகளைப் போலவே இருக்கும். உடல் பகுதி 'கடல் கன்னி' படத்தில் காட்டப்பட்டுள்ளது போல் இருக்கும்.

கடற்கரை மணலில் அடையாளம் தெரியாத, இனம் தெரியாத காலடிச் சுவடுகள் காணப்பட்டபோது, அவைகளை ஆராய்ந்ததில் அவை பெரிய கடல் ஆமைகளுக்குச் சொந்தமானவை அல்லது விலாங்கு மீனுடையவை என்றும் தெரிய வந்துள்ளது.

எத்தனையோ ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டபோதிலும் கடலில் கடல் கன்னிகள் வாழ்வதாகத்தான் மக்கள் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எது எப்படியோ, புராண காலத்திலிருந்து இன்றுவரை கடல் கன்னியைப் பற்றிய கதைகள் ஆங்காங்கே வெளியாகிக் கொண்டுதான் இருக்கின்றன. கடலோரமாக வாழக் கூடிய மக்களிடம் இதுபோன்ற கதைகள் கர்ண பரம் பரையாகக் கூறப்பட்டு வருகின்றன.

நவீன ஆராய்ச்சிகள் ''இவை எல்லாமே பொய்தான்''என்று கூறிவிடக் கூடாதே என்றுகூடப் பலர்கவலைப்படுகிறார்கள். காரணம் இவை குறித்து எழும் சுவையான கதைகள்!

– கிருஷ்ணா.முத்துராமலிங்கம்



டீ.வி. ஆன்டனாவை வெள்ளியல் செய்தால் என்னவாகும்?

★ டீ.வி. ஆன்டெனாவை வெள்ளியில் செய்து வைத்தால் என்னவாகும்? - மொ. ஆனந்தராஜ், காளஹஸ்தி.


எந்தவித பாதிப்பும் இருக்காது. அலுமினிய ஆண்டெனாவைப் போலவே வெள்ளியும் ஓர் எளிதான மின் கடத்தியே. அதனால் டீ.வியில் நன்றாகப் படம் பார்க்கலாம். ஆனால், வெள்ளி ஆன்டெனா என்றால் திருட்டுப் போய் விடும்! அலுமினியம் மலிவானது; இலேசானது என்பதாலேயே அதைப் பயன் படுத்துகிறார்கள்.

★ சிறுவர்களுக்காக வன விலங்குகளைப் பற்றி ஏதாவது பத்திரி வருகிறதா? - மு. இலட்சுமணன், திருச்சி - 4.

வருகிறதே. இதன் பெயர் 'CUB'. இது ஆங்கிலத்தில் பம்பாயில் இருந்து வெளி வருகிறது. சிறுவர்களுக்காகன வன விலங்குகளைப் பற்றிய அருமையான பத்திரிகை இது.

★ தமிழ் இலக்கிய வரலாற்றை முதன் முதலாக எழுதியவர்கள் ஆங்கிலேயர்களா, தமிழர்களா?- கு. முத்துராக்கு, திருப்பூர் - 2.

தமிழ் இலக்கிய வரலாற்றை முறையாக முதலில் எழுதி வைத்த பெருமைக்கு உரியவர் சிகன் பால்க் என்பவர். இவரது முழுப் பெயர் Barthalumaeus Ziegen Balg என்பது. இவர் எழுதிய புத்தகத்தின் பெயர் Bibliotica Malbarica. இது எழுதப்பட்ட ஆண்டு 1708. இவர் ஆங்கிலேயர் அல்ல. ஜெர்மனிக்காரர். இந்த நூலின் ஒரு பிரதி பிரிட்டிஷ் அருகாட்சி யகத்தில் உள்ளது.



★ உலகத்தின் மிக நீளமான ரயில் பாதை எங்கே இருக்கிறது? - மு. அடைக்கலம், நாகர்கோயில்.

மாஸ்கோவில் இருந்து கிளம்பும் டிரான்ஸ் சைபீரியன் ரயில்வேதான் உலகத்தின் மிக நீளமான ரயில் பாதை. இது மாஸ்கோவில் இருந்து 8 நாள் பயணம் செய்து, 97 ஸ்டேஷன்களில் நின்று நகோட்கா (Nakhodka) வுக்கு வந்து சேருகிறது.

★ அதிக அளவுக்குக் குழந்தைகளைப் பாதித்த விபத்து எது? - வெ. கன்னையன், கோவில்பட்டி.

சமீபத்தில் மகாராஷ்டிராவில் ஏற்பட்ட பூகம்பத்தில் நூற்றுக் கணக்கான குழந்தைகள் பலியானார்கள். இதைவிட பயங்கரம், போபாலில் நடந்த வாயுக் கசிவு விபத்து. ஆனால், இவை எல்லாவற்றையும் விட அதிக அளவில் குழந்தைகள் மடிந்த நிகழ்ச்சி, ஜெருசலத்.





மீட்க நடைபெற்ற சிலுவைப் போர்களில் (11-13 நூற்றாண்டு) சிறுவர் ஈடுபடுத்தப் பட்ட வரலாற்று நிகழ்ச்சி. இதில் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் பங்கு கொண்டனர். ஆனால், உயிருடன் திரும்பியவர்கள் ஆயிரத்து சொச்சமே. இவர்களும் கூட வழியில் சிறைப் பிடிக்கப்பட்டு அடிமைகளாக வெளிநாடுகளில் விற்கப்பட்டனர்!

★ **நீங்கள் எதற்காகவாவது அதிர்ச்சியடைந்தது உண்டா? - வ. விருத்தகிரி, விருத்தாசலம்.**

நிறைய. சமீபத்தில் ஜோசியத்தின் மகிமை பற்றிய ஒரு புத்தகம். அதில் உலகத்தையே கலக்கிய சர்வாதிகாரி ஹிட்லர், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், சோவியத் சர்வாதிகாரி ஸ்டாலின், பிறகு வந்த புல்கானின் ஆகியோர் தங்களுக்கு ஆலோசனை கூறி வழி நடத்த தனித்தனி ஜோதிடர்களை அமர்த்தியிருந்ததை விளக்கியிருந்தது!

★ **'மன்னன்' என்ற பெயருக்கு என்ன பெண்பால் பெயர்? 'மன்னி' என்று எனது நண்பன் கூறுகிறான். சரிதானா? - கு. வைத்தியநாதன், சீர்காழி.**

எனது அறிவுக்கு எட்டியவரை தமிழ் இலக்கியங்களில் இது ஆளப்படவில்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மட்டுமே இதை ஒரே ஓர் இடத்தில் பயன்படுத்தியிருக்கிறார், என்று அமரர் கி.வா. ஜகந்நாதன் கூறியிருக்கிறார்.

★ **'நல்ல மரத்தில் ஒரு புல்லுருவி' என்கிறார்களே, இந்தப் புல்லுருவி எப்படி இருக்கும்? - சோம. கற்பகம், நேமத்தான் பட்டி.**

இவை மற்ற மரம் செடி கொடிகளில் தங்கள் வேரைச் செலுத்தி, அவற்றின் தாது உப்பு எனும் உயிர்ச்சத்துக்களை உறிஞ்சிக் கொண்டு வளரும். இதனால், தாய் மரத்தின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். இவை தரையிலும் வளரும். மரங்களின் கிளைகள், பயிர்களின் அருகிலேயும் வளரும். நாமே பார்க்கலாம். நல்லவர்களை அண்டிக் கொண்டு அவர்களது செல்வாக்கால் வளர்ந்து அவர்

சேரநம்பி



களையே கெடுக்க வந்தவர்களைப் புல் லுருவுக்கு ஒப்பிடுவார்கள்.

★ **ஜீரோ எனப்படும், பூஜ்யம் என்பது தமிழ்ச் சொல்லா இல்லை வடசொல்லா? - து. நாதமுனி, காஞ்சி.**

பூஜ்யம் என்பது சம்ஸ்கிரதம். தமிழில் பூஜ்யத்திற்கு உரிய சொல் 'பாழ்' என்பதாகும். 'பரிபாடலில்' இது வருகிறது.

★ **நாகப்பாம்பு இரத்தினத்தைத் தன் வாயில் வைத்துக் கொண்டிருக்கும் என்பது உண்மையா? - ப. பெரிய நாயகி, திருவண்ணாமலை.**

இப்படி ஒரு நம்பிக்கை நாட்டில் பழங்காலமாகவே இருக்கிறது. ஆனால், இதற்கு அறிவியல் நோக்கில் ஆதாரம் இல்லை. இரத்தினம் என்பது ஒரு கல். வைரத்தைப் போலவே பூமியில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டு, பட்டை தீட்டப்படுகிறது. எந்தப் பாம்புக்கும் இதைத் தலையில் வைத்துக் கொள்ள இடம் இல்லை!

★ **கார்ட்ரோ கிரேபி (Cartography) என்பது என்ன? - வி.க. பார்த்தசாரதி, மன்னார்குடி.**

பல நாடுகளின் வரைபடங்களை (Maps) வரையும் கலை(இயல்)க்குதான் கார்ட்ரோ கிரேபி என்பது பெயர்.

★ **ராமதாஸ் இயற்றிய கீர்த்தனைகள் என்று பாடுகிறார்களே. இந்த ராமதாஸூம் திரைப்படப் பாடலாசிரியர் ராமதாசும் ஒருவர்தானா? - க. பட்டாபிராமன், திண்டுக்கல்.**

நான் கூட இந்த மாதிரி அறிவிப்புகளைக் கேட்டிருக்கிறேன். திரைப்படப் பாடலாசிரியர் அமரர் ராமதாஸ் தஞ்சையைச் சேர்ந்தவர். தஞ்சை ராமதாஸ் என அழைக்கப்படுபவர். கர்நாடக இசைக் கச்சேரிகளில் பாடப்படும் பாடல்களை இயற்றியவர்களில் இரண்டு ராமதாஸ் இருக்கிறார்கள். ஒருவர் சத்ரபதி சிவாஜிக்குக் குருவாக இருந்த சமர்த்த ராமதாஸ். இவர் சம்ஸ்கிருதத்திலும், மராட்டியிலும் கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறார். இன்னொருவர் பத்ராசலத்தில் ராமர் கோவில் கட்டியவர். இவரும் தெலுங்கிலும் சம்ஸ்கிருதத்திலும் கீர்த்தனைகளை இயற்றியவர். ஊரையும் சேர்த்துக் கூறினால் குழப்பம் வராது.

★ **முன்பு ஒரு கேள்வி பதிலில் நெருப்புக் கோழிகள் இந்தியாவிலும் இருந்தன என்று கூறியிருந்தது. இதற்கு என்ன ஆதாரம்? - மு. அகமத் பஷீர், அருப்புக் கோட்டை.**


தீக்கோழியின் புதைபடிவங்கள் (Fossils) சிவாலிக், இமாலய மலைப் பகுதிகளில் (Siwalik & Himalayan Range!) கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவைகளைக் கண்டு பிடித்த பெருமைக்கு உரியவர் Lydekker என்ற ஆராய்ச்சியாளர்.



"நடத்துனர்களே சுத்த மோசம்."
"ஏன் என்ன நடந்தது?"
"குழந்தைக்கு டிக்கட் வாங்க வேண்டாம்னு சொன்னாரு. இப்ப டிக்கட் வாங்கியே ஆகணும்னு சொல்றாரு!"
"நீங்க மட்டும்தானே இருக்கீங்க? குழந்தை எங்கே?"
"என் பேரு குழந்தைங்க!"
- தேனி முருகேசன்


★ **பறவைகளின் உடல் வெப்ப நிலை எவ்வளவு? - த. வெண்ணிலா, காங்கேயம்.**


38° என்றாலும் இது இன்னமும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப் படவில்லை.



பாம்பு துரை
கருத்து: கைலாஸ்
அமைப்பு: 'ரே'
சித்திரம்: ரஜினி..
துரை ஹாஸ்டல் வாசி படு அரட்டை.
பாடம் போரடிச்சாலும் சப்பாத்தி ஜோர்...
மற்றவரை மிரள வைப்பதில் துரைக்குத் தனி ஆசை. ஒரு நாள் தன் அறை நண்பனிடம்-
பாம்பு பார்த்திருக்கியா?
நண்பன் நடுங்கினான்..
ஆமா, இல்லை... ஏன் கேட்கறே..?
1


சுருட்டிய கைக்குட்டையை நண்பன் மீது வீசினான் சுரா-
இதோ பார்...!
நடுங்கினான் நண்பன்-
ஐயோ...!
உடனே கைக்குட்டையைத்தூக்கிக் காட்டி கேலி செய்தான் சுரா-
ஏண்டா பயப்படறே? கைக்குட்டை தானே..!
கைக்குட்டையா...? ஏன் சுரா பயப்படுத்துறே?
ஹாஸ்டல்ல இருக்க தைரியம் வேணும்..
எல்லாம் துணிச்சலுக்குப் பயிற்சி தான்..
2



அன்று இரவு– நண்பன் படுக்கையில் ஒரு பாம்பைக் கண்டு அலறினான்.
ஐயோ... பாம்பு...! பாம்பு...!
ஏண்டா கத்தறே. அது ரப்பர் பாம்பு!
நான் தான் வைச்சேன்!
ஏன் குறை இப்படிப் பயப்படுத்தறே.
உன் நன்மைக்குத் தான். ஹாஸ்டலில் இருக்க தைரியம் வேண்டுமே?
ஏன்றபயறீ. பாம்பு குறைதான்! இப்படி அடிக்கடி பண்ணுவேன்.
3


வெறுப்புடன் வெளியேறினான் நண்பன்.
எனக்கு இந்த அறை வேண்டாம்! மாத்திக்கறேன்!
வெற்றிக் களிப்புடன் குமார-
அப்பாடா.. இத்தோட 25வது ஆள்! வெள்ளி விழா கொண்டாட வேண்டியது தான்!
அறையும் யாராவது... எவன் வந்தாலும் இதே கதிதான்.
ஹாஸ்டல் வார்டன் வேதனையுடன்-
குமாருக்கு பாடம் புகட்ட எந்த மாணவன் கிடைப்பானோ?
அப்போது - பரமன் வந்து-
வணக்கம் சார்! 6 வது படிக்கிறேன்! ஹாஸ்டல்ல இடம் கிடைக்குமா?
4


இருக்கு! ஆனா... பிரச்சனை!
துரையைப் பற்றி கூறியதும்-
பயப்பட மாட்டேன் சார்! அந்த அறையே கொடுங்க!
துரையின் அறையில் பரமன்-
இருபத்தி ஆறாவது ஆளா! பாவம்!
வழக்கமான தன் குறும்புத் தனத்தைப் பரமனிடம் காட்டினான்-
பாம்பு பார்த்திருக்கிறாயா? இதோ பார்!
துணிச்சலுடன் பரமன்- தனது பெட்டியைத் திறந்து--
என்னிடமே பொய் ஆட்டமா? இதோ பார், நிஜப்பாம்பு..
நிஜ பாம்பைக் கண்ட துரை அலறி ஓடினான்.
ஐயோ.. பாம்பு.. பாம்பு..!


வீசிய பாம்பை பரமன் தன் கழுத்தில் போட்டுக் கொண்டான்.
ஐயோ வேண்டாம்! வேண்டாம்!
என் பெயரே பாம்பு பரமன்!. பரம்பரையா பாம்பு பிடிக்கற பிழைப்பு!
உங்களுக்கு பாம்புன்னா புடிக்குமாமே? அதனால் தானே உன் அறைக்கே வந்தேன்.
அப்பா அடிக்கடி என்னைப் பார்க்க வருவாரு.. அதுசரா புடிச்ச பாம்பைக் காட்டுவாரு!
இதைக் கேட்ட துரை அறையை விட்டு ஓடினான்.
எங்கே ஓடறீங்க..?
வார்டனிடம் துரை—
அறையை மாற்ற முடியாது உன்னை யாரும் வைச்சுக்க மாட்டாங்க. இடமும் இல்லை உனக்கு
வருந்தினான் துரை-
இருபத் தாறாவது ஆள், நான் தானா!
வா துரை! நீ திருந்திட்டா நான் பயப்படுத்த மாட்டேன்-
இனிமே நான் பாம்பு துரை இல்லே. பரம! சாது துரை..

கைகளில் இருப்பவை என்ன? – போட்டி முடிவு



இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டி விட்டது! இருந்தும் எல்லாம் சரியாக எழுதியவர்கள் ஐவர் மட்டுமே. மற்றவர்கள் ஒரு தவறு செய்தவர்கள். இவர்களது காலை வாரி விட்ட தவறு வேலைக்காரி பற்றியது. எனவே, இரண்டாவது பரிசாக ஒரு தவறு செய்தவர்களில் ஐந்து பேரைக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தோம்.

முதல் பரிசு ரூபாய் இருபது பெறுவோர் :

1. ரம்யா சங்கரன் பத்ராவதி, கர்நாடகா.
2. என். ஸ்ரீநிவாசன், ஸ்ரீமுஷ்ணம்.
3. வி. பி. காயத்ரி, இராமநாதபுரம்.
4. வி. திகிலேந்திரன், ரெட்டிபட்டி.
5. ஈ. பாகீரதி, பரமக்குடி.

ஆறுதல் பரிசாக ரூபாய் பத்து பெறுவோர் :

1. K.R. கணேஷ், சென்னை-38
2. ஆர்.கஜலட்சுமி, இராஜபாளையம்
3. H. ஈஸ்வரகாந்த், பொள்ளாச்சி,
4. ஜி.பாரதி, நெல்லிக்குப்பம்.
5. மு.முபாரக்கான், அரும்பாவூர்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி. இதற்கான விடை மேலே காட்டப் பட்டுள்ளது.

யாருக்கு எது? - போட்டி



இங்கே உள்ளவர்களைப் பாருங்கள். இவர்கள் எல்லோருமே இங்கே உள்ள ஏதாவது ஒரு விலங்கு அல்லது பறவையோடு தொடர்புடையவர்கள். யாரிடம் எது இருக்கு வேண்டும் என்பதைக் கண்டு பிடித்து ஒட்டி அனுப்புங்கள். கூப்பன் இல்லாது வருபவற்றை ஏற்க முடியாது. அயல் நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் நண்பர் அல்லது உறவுக்காரர் முகவரியைத் தரவேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

யாருக்கு எது? - போட்டி

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

பின் கோடு : ....

முடிவு தேதி : 31.5.94

சார் தபால்

பெயரைப் போடவில்லையே?

★ திருக்கண்ணங்குடி கமலின் ''பொன் தட்டு'' ஆலயம் சென்றால்தான் இறைவனின் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையைப் போக்கடித்து விட்டது. நல்ல செயல்களும் கடமை தவறாத பணிகளும்கூட இறைவனின் அருளைத் தானாகப் பெற்றுத்தரக் கூடியவை என்பதை நன்கு பதிய வைத்தது! -கடலூர் வெ.மோகனரங்கன், புஞ்சை புளியம்பட்டி பி.எல்.கிரிஜா, திருக்கண்ணங்குடி பா.சரவணன், முத்தியாலுபேட்டை புவனாபுத்திரன் மற்றும் பலர்.

★ ஆழியின் 'டால்பின்' சினிமாப் படம் பார்த்தது போன்ற பிரமை ஏற்படுத்தியது- கடப்பை துலுக்காணம், கம்பங்குடி து.கக்கூர், பொள்ளாச்சி சின்ன பாப்பா, திலக்கோட்டை விஜயசாரதி, தெங்கனூர்.முத்துராசாக் கண்ணு மற்றும் பலர்.

★ என்னுடைய கதை ''குழந்தை யைத்தா''வை அழகாக வெளியிட்டதற்கு நன்றி! ஆனால் என் பெயரைப் போடவில்லையே?- திருமங்கலம் ஜெ.லட்சுமி. (உண்மையாகவே வருந்துகிறேன்! ஆர்)

★ கபில்தேவின் சாதனை எத்தனை அரியது என்பதை சிறுவர் சிறுமியர் நடத்திய உரையாடல் புட்டுப் புட்டு வைத்தது! வரிக்கு வரி ரசித்தோம். இனிமேல் விளையாட்டுப் பகுதியை இப்படியே போடலாமே?- கூட்டுனார்புரம் து.பூபதி, புளியம்பட்டி பொன்னுத்தாய், எலவனாசூர் கோட்டை ம.வேல்முருகன், திருக்கண்ணங்குடி அ.கமல், திருப்புன்னைவாசல் பி.ராஜசேகர், சங்கராபுரம், ஆ.முருகன், அரக்கோணம் எல்.கோபாலகிருஷ்ணன் நண்பர்கள்.


★ 'வீட்டுலதான் இருக்கும்' கதை இன்றைய சிறுவரின் அலட்சியப் போக்கை நன்கு படம் பிடித்துக் காட்டி திருந்தச் சொல்கிறது! -நல்ல மாங்குடி எல்.சம்பத், பாணாம்பட்டு கு.நாராயணன், ஈச்சங் காடு. ஜோ. ஜோசப், சிவந்தான் பாக்கம் எல்லம்மா, கச்சிராம்பாளையம் க.ராஜவேல், சர்க்கார் கொல்லப்பட்டி பெரு. இளங்கம்பன், கச்சினம்பாளையம் ஆர். திருமலை மற்றம் பலர்.

★ ரஜேஷாவின் திறமைகள் வியக்க வைக்கின்றன! மற்றவர்களுக்கு ஒரு தூண்டுகோல்!- கல்பாக்கம் வெ. பாக்கியராஜ், பள்ளிவாசல் மு.லோகநாதன், முல்லைக்காடு செ.வரதன், சாத்தூர் நா.நாகமணி, விசலூர் ஜி.ஜி.கிருஷ்ணன் மற்றும் பலர்.

★ 'கணேச சரணம்!' படமும் கதையும் சூப்பர். இனிமேல் பிள்ளை யாரைப் பார்த்தா வேண்டிக்காம நகரமாட்டேன்! -தோப்பூர் வெ. பாஸ்கர், திருமங்கலம் பொ.ரமேஷ், வைத்தீஸ்வரன் கோயில் ஏ.ஜெய்சிங், பட்டீஸ்வரம். ஆர்.பத்மநாபன் மற்றும் பலர்.

★ 'நன்னை காப்பாடு!' தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் அருமையான கதை!- அண்ணாமலை நகர் க.மாரியப்பன், கருத்தாழங்குடி வெ.பொன்னைப்பபிள்ளை, வாழைப்பட்டி தே.தென்னரசன், பொன்னூ இயூர் லே.திருமகன், வள்ளிமலை பெ.பெரிநாயகி மற்றும்.பலர்.

★ போட்டிகளை எல்லாம் தொகுத்துத் தனியான புத்தகமாகப் போடலாமே? ஒவ்வொரு போட்டியும் வித்தியாசமாக ஒவ்வொரு மாதிரி இருக்கே! -மயிலாடுதுறை சி.பெத்தநாயகன், சிதம்பரம் க.சிவராமன் மற்றும் பலர்.



கண்டங்கள் நகருமா? விந்தையாக இருக்கிறதே என்று எண்ண வேண்டாம். நகரும். ஆண்டுக்கு ஓர் அங்குலம் வீதம் கண்டங்கள் விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. நம் இந்தியா ஒரு காலத்தில் நாற்புறமும் கடலால் சூழப்பட்ட பெரிய தீவாகத்தான் இருந்தது! இமய மலை கடலுக்கடியில்தான் இருந்தது! ஆனால், இன்றுள்ள இந்தியா, இமய மலை பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே! இதற்குக் காரணம் கண்டங்கள் நகர்வதுதான்.

இன்று உலகில் ஏழு கண்டங்கள் உள்ளன. ஆனால், இருபது கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இப்படி ஏழு கண்டங்கள் எல்லாம் கிடையாது. அவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக இருந்தது. பின்னர் சிறிது

கண்டங்கள் நகருமா?

சிறிதாக நகர்ந்து, 40,000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பொழுது இருந்த நிலையை அடைந்தது. ஒரே நிலப்பரப்பாகி இருந்த போது அதன் பெயர் 'பாங்கேயா' (Pangaea) என்பதாகும். பின்பு இப்பெருங்கண்டம் (Super continent) 'லாரேஷியா' என்றும், 'கோண்ட்வானா லாண்ட்' (Gondwanaland) என்றும் இரு கண்டங்களாகப் பிரிந்தது. இவ்விரு கண்டங்களும் ஒன்றை விட்டு ஒன்று நகரத் தொடங்கின. லாரேஷியாவிலிருந்து இன்றைய வட அமெரிக்காவும், கோண்ட்வானாலாண்டிலிருந்து தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்க்டிக் கண்டங்களும் தோன்றின.



கண்டங்கள் நகர்வது பற்றிய கொள்கையை முதன் முதலில் வெளியிட்டவர். ஜெர்மானிய அறிஞர் ஆல்ஃப்ரெட் வெகனர் (Alfred Wegener) என்பவராவார்.

உலகின் பல இடங்களில் தோண்டிப் பார்த்ததில் பழங்கால விலங்குகள்,

தாவரங்கள், ஆகியவற்றின் படிம அச்சுக்கள் (Fossil) கிடைத்தன. ஒரே மாதிரியான விலங்குகள், தாவரங்களின் தடயங்கள் மிகவும் தொலைவிலுள்ள வேறு இடங்களிலும் (கண்டங்கள்) கூடக் காணப்படுகின்றன என்பதுதான் வியப்பான விஷயம்.

உலகப் படத்தைப் பார்த்ததில் ஒரு உண்மை வெளியானது. தென் அமெரிக்காவின் உருவத்தை வெட்டிக் கத்தரித்து மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியுடன் ஒட்ட வைத்தால் சரியாகப் பொருந்தும். இதே போல் ஆப்பிரிக்காவை ஒட்டிய செங்கடலை வெட்டி விட்டு ஆப்பிரிக்காவையும், அராபிய தீபகற்பத்தையும் ஒட்டினால் மிகச் சரியாகப் பொருந்தும்.

மேற்கு ஆப்பிரிக்காவிலும், பிரேசில் நாட்டிலுமுள்ள பாறைகளின் அமைப்பு மற்றும் வயது ஒரே மாதிரியாக உள்ளன. புதை படிவங்களின் ஆராய்ச்சியில் இருந்து இன்று தென் துருவத்தின் அருகே இருக்கும் அண்டார்டிகா முன்பு இன்னும் மேலே இருந்திருக்க வேண்டும் என்றும், அப்போது அது வெப்ப மண்டலப் பகுதியாகவே இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது - இவையெல்லாம் கண்டங்கள் நகர்ந்துள்ளன; இன்னும் நகர்கின்றன என்பதற்குச் சான்றுகளாகும்.

இவ்வாறு கண்டங்கள் ஒன்றை விட்டு ஒன்று தொடர்ந்து விலகிக் கொண்டே செல்லுமானால் இன்னும் 5 கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் மத்திய தரைக் கடலே இருக்காது! தென் - வட அமெரிக்கக் கண்டங்களுக்கு இடையில் கரீபியன் கடலில் புதியதொரு நிலப் பரப்புத் தோன்றும்! ஆஸ்திரேலியா கண்டம் நகர்ந்து மலேசியாவுக்கப் பக்கத்தில் வந்து விடும்! அமெரிக்காவிலிருந்து கலிபோர்னியா பிரிந்து சென்று விடும்! அட்லாண்டிக் பெருங்கடல் விரிவடையும்; பசிபிக் பெருங்கடல் சுருங்கும்.

தொகுப்பு :
கிருஷ்ணா. முத்துராமலிங்கம்.



என்னைப் புகைப் படம் எடுத்தார்கள்!



* வி.ஜே.ராம்குமார்

எடுத்துத் தொலை!

எனக்குப் புகைப் படம் எடுப்பது என்றால் மிகவும் பிடிக்கும். எங்கள் வீட்டில் 'காமிரா' கூட இருக்கிறது. அப்பா அதில் போட்டோ எடுப்பார். எனக்கும் போட்டோ எடுக்க ஆசையா இருக்கும். ''ஒரே ஒரு படம் எடுக்கறேம்பா'' என்று கெஞ்சுவேன். ''போடா எல்லாம் விலை உயர்ந்தது, கெடுத்துடுவே'' என்று தடுத்து விடுவார். எனக்கு ரொம்ப ஏமாற்றமா இருக்கும். ஒரு முறை ஊரில் இருந்து சித்தப்பா வந்திருந்தார். சித்தப் பாவை போட்டோ எடுப்பது என்று முடிவு பண்ணி, அப்பா பிலிம் ரோல் வாங்கிக் கொண்டு வந்தார். எங்களையெல்லாம் வைத்து அப்பா, தானே போட்டோ எடுத்துத் தள்ளி னார். எனக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. கெஞ்சினேன். அப்பா மசியவில்லை. எனக்கு அழுகை கூட வந்துவிட்டது. சித் தப்பாதான், ''பாவம், அவனை ஒரு போட்டோதான் எடுக்க விடேன்'' என்று சிபாரிசு பண்ணினார். அப்பாவால் தட்ட முடியவில்லை. ''சரி, ஒரு பிலிம் இருக்கு. நீயே எடுத்துத் தொலை'' என்று ஆசீர்வாதம் பண்ணிக் கொடுத்தார் எரிச்சலோடு.

அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, சித் தப்பா ஆகிய எல்லோரையும் உட்கார வைத்து நான் போட்டோ எடுத்தேன். இரண்டு நாள் கழித்து, பிலிம் பிரிண்ட் போட்டு வந்தது. பார்த்தால் அப்பா எடுத்த படங்கள் அத்தனையையும் விட, நான் எடுத்ததுதான் சூப்பரா வந்தி ருந்தது! அப்பாவுக்கு ஒரே மகிழ்ச்சி. அதே சமயம் அதிர்ச்சியும்கூட!

''தில்லுடா, நானே உன்னைத் தனி போட்டோ எடுக்கறேன்'' என்று என்னைத் தனியாக நிற்கவைத்துப் போட்டோ எடுத் தார். அப்பாவின் பாராட்டைப் பெற்ற அடையாளமான போட்டோ ஆச்சே!

– வி.ஜே.ராம்குமார், மதுரை-14.

* பி.கோவிந்தராஜன்



* ஏ. ஆர். கதிர்வேலன்



பரிசாக வந்த போட்டோ!

எங்கள் ஊரில் ''மகாத்மா காந்தி வானொலிச் சிறுவர் சங்கம்'' என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அதில் நானும் உறுப்பி னன். ஒரு முறை எங்கள் சங்கத்தின் சார்பில் ''வினாடி வினா'' நடத்தி னார்கள். ''நீ முதல்ல வந்தால் நீ கேக்கிறதைத் தரேன்'' என்று என்னை உசுப்பினார் அப்பா. நான் முதலாவதாக வந்தேன்!

எனக்கே பெருமை பிடிபடவில்லை. வீட்டுக்கு வந்தேன். அப்பா இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனார். பிறகு சமாளித்துக் கொண்டு, ''என்ன வேண்டும் உனக்கு?'' என்று கேட்டார். ''என்னைப் புகைப்படம் எடுக்கணும்'' என்றேன். பாவம் அப்பா. யாரிடமோ கேட்டு கேமிராவை வாங்கிக் கொண்டு வந்து என்னைப் போட்டோ எடுத்தார். அது இன்னமும் பத்திரமாக என்னிடம் இருக்கிறது.

– எம். முபரக்கான், பாரதிபுரம்.



★ எம். முபரக்கான்

தோழிகள் எடுத்த புகைப்படம்!

என் தந்தையார் தான் பள்ளி மாணவனாக இருந்த போது பெற்ற பரிசுகள், பரிசுச் சான்றிதழ்களை என்னிடம் காண்பித்தார். கல்லூரியில் கம்ப்யூட்டர் படிக்கும் என் அக்கா பாரதியோ, தேர்வுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு, தொண்ணூற்றைந்து என்று மதிப்பெண்களை வாரிக் குவித்துக் கொண்டிருந்தாள். அப்பா, அக்காவைப் போலவே நாமும் பரிசுகளைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் வந்தது எனக்கு. முயன்று படித்தேன். பள்ளியில் முதல் இரண்டு 'ராங்க்'களில் வர ஆரம்பித்தேன். 1992ல் பள்ளி இறுதித் தேர்வில் கணிதத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்ணும் மொத்தத்தில் ஐநூறுக்கு 441ம் பெற்றேன். தோழிகளின் கரகோஷத்துக்கிடையே என்னைப் புகைப்படம் எடுத்த போது நான் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

–ஏ.ஆர்.கவிதா, மன்னார்குடி.


★ ஏ.ஆர்.கவிதா


★ கப.சிவராஜா

நாரதராக போட்டோ!

பிப்ரவரி மாதம். நான் 5-ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பிரேயரில் தலைமை ஆசிரியர் மார்ச் 1-ஆம் தேதி ஆண்டு விழா நடப்பதாகக் கூறினார். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எப்படியும் ஒரு நாடகத்தில் சேர்ந்து நடித்து விட வேண்டும் என்று நினைத்தேன்.

தமிழ் வகுப்பில் தமிழாசிரியர் நவீன திருவிளையாடல் என்ற நாடகம் நடத்த இருப்பதாகவும், நடிக்க விரும்புவர்கள் பெயர் கொடுக்கலாம் என்றும் கூறினார். நானும் என் பெயரைக் கொடுத்தேன். எனக்கு நிச்சயம் சிவன் வேஷம் (Main Act) கிடைக்கும் என்று நம்பினேன். ஆனால், நாரதர் வேஷம்தான் கொடுத்தார்கள். ஒரே ஏமாற்றமாக இருந்தது. இருந்தாலும் நடிக்கச் சம்மதித்தேன். ஒத்திகை நடந்தது.

மார்ச் 1ஆம் தேதியும் வந்தது. ஆண்டுவிழாவில் நாடகத்தில் நாரதராகவே நான் சிறப்பாக நடித்தேன். மெய்ன் ஆக்ட் கிடைக்கவில்லையே என்று ஏக்கம் இருந்தாலும் எல்லாரும் என் நாரதர் நடிப்பைப் பாராட்டினார்கள்.

விழாவின் இறுதியில் எதிர்பாராதவிதமாக நாடகத்தில் நன்றாக நடித்தவர்களுக்குப் பரிசும் வழங்கினார்கள். எங்கள் நாடகத்தில் எனக்கு முதல் பரிசு! இதை அறிவித்ததும் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. நாரதர் வேஷத்துடனேயே சென்று விழாத் தலைவரிடம் பரிசை வாங்கினேன். அப்படியே என்னை ஒரு போட்டோவும் எடுத்து, எனக்கு ஒரு காப்பியும் கொடுத்தார்கள்.

– கப.சிவராஜா, புதுகை.


★ ப.ரேகா


★ கே.முருகன்

என் படம் இல்லை!

நான் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் போது அவ்வாண்டிற்கான 'ப்ரொஃபிஷியன்சி' (Proficiency) அவார்டு கிடைத்தது. எல்.கே.ஜி.யிலிருந்து தொடர்ந்து பரிசு வாங்கிய எனக்கு அந்த ஆண்டும் பரிசு வாங்கியது குறித்து அளவில்லா மகிழ்ச்சி. ஒவ்வொரு ஆண்டும் பள்ளியிலேயே போட்டோ எடுத்து எங்களுக்கு ஒரு 'காப்பி' கொடுப்பார்கள். அவற்றையெல்லாம் நான் என் 'ஆல்பத்தில்' பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன். அவ்வாண்டும் பள்ளியில் புகைப்படம் எடுத்தார்கள். ஆனால் எடுத்த புகைப் படங்களில் என் புகைப்படம் மட்டும்தான் வரவில்லை! எனக்கு அழுகை அழுகையாக வந்தது. அம்மா என்னைத் தேற்றிப் புகைப்படக் காரரிடம் சென்று விசாரித்தார். சிறிய எதிர்பாராத காரணத்தால் இப்படி நிகழ்ந்து விட்டது என்று அவர் கூறினார். ஆயினும் என் மனத்திருப்திக்காக அவரே என்னைத் தனியே பரிசுடன் ஒரு புகைப்படமெடுத்து அதைச் சிறப்பு விருந்தாளி பரிசு கொடுப்பதைப் போல் உள்ள இன்னொரு புகைப்படத்துடன் இணைத்து ஒரு படம் கொடுத்தார். அந்தப் புகைப் படத்தையும் 'ஆல்பத்தில்' பத்திரப்படுத்தியிருக்கிறேன்.

– ப.ரேகா, சென்னை-28.

உதவிக்கு நன்றி கூறிய படம்!

சேலம் மாவட்டம் ஏற்காட்டிலுள்ள முருகன் நகரில் தான் நான் இருக்கிறேன். ஏற்காட்டில் 'லேடிசீட்' என்ற இடம் உள்ளது. அந்த இடத்தைப் பார்க்க அடிக்கடி வெளியூர்களிலிருந்து சுற்றுலா பயணிகள் வருவார்கள். ஒருநாள் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். வெளியூர் பயணிகள் சிலர் சுற்றிப்பார்ப்பதற்காக எதிரே வந்தார்கள். அவர்கள் என்னிடம் வந்து ''தம்பி! லேடி சீட்டுக்கு எப்படிப் போக வேண்டும்?'' என்று கேட்டார்கள். நானும் 'லேடி சீட்' போகும் வழியைக் காட்டினேன். அவர்கள் கையில் கேமிரா கொண்டு வந்திருந்தார்கள். லேடிசீட் வழியைக் காட்டியதும் அவர்கள் என்னை ஒரு போட்டோ எடுத்தார்கள். ''ரொம்ப நன்றி'' என்று கூறிவிட்டு என்னுடைய விலாசத்தைக் கேட்டு எழுதிக் கொண்டார்கள். பிறகு தபாலில் எனக்கு அந்தப் போட்டோவை அனுப்பியிருந்தார்கள். ரொம்ப மகிழ்ச்சி அடைந்தேன்.

-கே.முருகன், ஏற்காடு.

ஆங்கிலேயர் எடுத்த புகைப்படம்

அன்று ஞாயிற்றுக் கிழமை. நான் வீட்டில் பந்து விளையாடிக் கொண்டிருந்தேன். எங்கள் தெரு வழியாகச் சென்ற பேருந்து ஒன்று ப்ரேக்-டவுன் ஆகிவிட்டது. பேருந்தில் அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் கீழே இறங்கி நின்று கொண்டிருந்தனர். பேருந்தை சரிசெய்ய ஒரு மணி நேரம் ஆகுமென்று நடத்துனர் கூறிவிட்டார். அந்தப் பேருந்தில் வேளாங்கண்ணி செல்ல ஒரு ஆங்கிலேயக் குடும்பத்தினர் பயணம் செய்தனர். அந்த ஆங்கிலேயர் பந்து விளையாடிக் கொண்டிருந்த என்னை அழைத்து, ஒரு மணி நேரத்திற்குள் தனக்கு எங்கள் கிராமத்தின் முக்கிய பகுதிகளைக் காட்ட முடியுமா என்றும் அவைகளைப் புகைப்படம் எடுக்கத் தான் ஆசைப்படுவதாகவும் கேட்டார். பொழுது போக்காக எங்கள் டியூஷன்



''டிபனுக்குக் கொண்டு வந்திருக்கிற இட்லி, பஞ்சான தயாரிப்புன்னு சொல்றியே, பூப்போல இருக்குமா?''

''இல்லே! எங்க அப்பா பெயர் பஞ்சு. அவர் பண்ணினதுன்னு சொன்னேன்!''

– சீர்காழி சாமா

சாரிடம் கற்றுக் கொண்டிருந்த Spoken English சமயத்தில் கை கொடுத்தது. அவரை அழைத்துக் கொண்டு கோவில் மற்றும் வயல் பகுதிகளைச் சுற்றிக் காண்பித்தேன். அது நடவு காலமாதலால் பெண்கள் நடவு செய்யும் முறைகளையும், மற்றும் கிராமங்களின் சிறப்பையும் என்னால் முடிந்த அளவு விளக்கிக் கூறினேன். அவர் அந்த நடவுப் பாடல்களைப் பதிவு செய்து கொண்டதோடு அர்த்தத்தையும் கேட்டு எழுதிக் கொண்டார். அதற்குள் எங்கள் தந்தை தென்னந்தோப்பிலிருந்து இளநீர் வெட்டித் தரவே அதையும் குடித்துவிட்டு, கிராம மக்களின் விருந்தோம்பல் பண்பை மிகவும் பாராட்டினார். அதற்குள் பேருந்து சரியாகிவிட்டதை அறிவிக்கும் வகையில் டிரைவர் சைகை தரவே எங்கள் குடும்பத்தினருடன் வயலின் பசுமையைப் பின்னணியாக வைத்து படமெடுத்துக் கொண்டு எங்கள் முகவரியையும் குறித்துக் கொண்டார். இன்றும் அவரிடமிருந்து இந்தியக் கிராமங்களின் தன்மையைப் பாராட்டிக் கடிதம் வந்து கொண்டிருக்கிறது.

- பி.கோவிந்தராஜன், கொக்கலாடி.

நண்பர்கள் எடுத்த புகைப்படம்

தமிழக அரசு ஊரகப் பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு திட்டத்தில் எட்டாம் வகுப்பு மாணவர்களில் திறமை மிக்கவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் +2 முடிக்கும் வரை அரசே ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகையைப் பரிசாக அளிக்கிறது. ஏற்கனவே பள்ளியில் முதல் இரண்டு மூன்று 'ராங்க்'களில் மதிப்பெண் பெற்று வந்தவன் என்பதால் நானும் விண்ணப்பித்தேன். திறனாய்வுத் தேர்வுக்கு திருமயம் வருமாறு அழைப்பு வந்தது. 31.5.92ல் தேர்வினை எழுதிவிட்டு வந்த நான் பிறகு அதை மறந்தே போனேன். நான் 9ஆம் வகுப்பு படித்துத் தேறி, பத்தாம் வகுப்புக்கும் வந்து விட்டேன். திடீரென்று ஒருநாள் தலைமை ஆசிரியர் என்னை அழைத்தார். ''எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான தமிழகத் திறமைத் தேர்வில் வெற்றிபெற்றதற்காக உனக்கு மெரிட் ஸ்காலர்ஷிப் ஆயிரம் ரூபாய் வந்துள்ளது'' என்று கூறினார். என்னால் நம்பவே முடியவில்லை. ஆச்சரியம் ஒரு பக்கம், சந்தோஷம் ஒரு பக்கம். ஏனென்றால் போட்டித் தேர்வு எழுதி ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதே! எனது வெற்றியைக் கொண்டாடிய நண்பர்கள் என்னைப் புகைப்படம் எடுத்தபோது என்னையே மறந்தேன். அது இன்னமும் என்னிடம் உள்ளது.

- ஏ.ஆர்.கதிர்வேலன், கோனாப்பட்டு.

அதிசயம்

உலகின் தலைசிறந்த நூலகங்களும், விவரங்களும் - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக்கம் 204. ரூ. 28/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தலைசிறந்த நூலகங்கள், அவை தோன்றிய வரலாறு, அமைந்துள்ள இடம், எப்படி அடைவது, பணி நேரம், விடுமுறை நாட்கள், வைக்கப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை, அவற்றின் சிறப்பான செய்திகள் எல்லாம் இதில் தரப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு இதோ இரண்டு. பேராசிரியர் அமரர் வையாபுரிப் பிள்ளையின் தனிச் சேகரிப்பான ஓலைச் சுவடிகள் எங்கு இருக்கின்றன என்பது தெரியுமா? (கல்கத்தாவில் உள்ள தேசிய நூலகத்தில்.) புளியங்கொட்டையால் எழுதப்பட்ட 200 வயதான ஓலைச் சுவடி எங்கே இருக்கிறது தெரியுமா? எந்த நூலகத்தில் காலணிகளை வெளியே கழற்றி விட்டுப் போக வேண்டும் தெரியுமா? இரண்டுக்குமே சென்னை அடையாறு நூலகம்தான் விடை. இப்படி எத்தனையோ சுவையான செய்திகள். அரிய உழைப்பை நூலெங்கிலும் காண முடிகிறது. படிக்கத் தெரிந்த எல்லோருமே படிக்க வேண்டிய அரிய தொகுப்பு நூல்.

கெட்டிக்கார வேலன், பேராசிரியர் ஜோதி, பக்கம் : 96, ரூ. 15/- நன்மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச்சேரி.

சிறுவர் இலக்கியத்தில் "Stories Retold" என்ற மீண்டும் கூறப்படும் கதை முறைக்குச் சிறப்பன இடம் உண்டு. பஞ்ச தந்திரக் கதைகள், தெனாலிராமன், மரியாதை ராமன், பீர்பல் கதைகள் எல்லாம் இப்படிப்பட்டவையே. நவீன காலக் கதைகளை மீண்டும் கூறுவதில் ஒரு தனியான பாணியை வகுத்துக் கொண்டு புகழடைந்தவர் இந்த ஆசிரியர். இவர் முழுக்க முழுக்கத் தனது கற்பனைக் கதை என்று இந்தப் புத்தகத்தைப் படைத்திருக்கிறார். ஆடு மேய்க்கும் சிறுவன் வேலன் தன் அறிவாலும் அடக்கத்தாலும் மன்னரின் கவனத்தைக் கவர்ந்து மதியமைச்சராகிறான். அவனுக்கு எதிராக வேலை செய்து அவனைக் கவிழ்க்க ஒரு கயவன் போடும் திட்டங்கள் எப்படி நிறைவேறாது போய், இறுதியில் வேலனின் பெருமைகளை நிலைக்க வைக்கின்றன என்பதுதான் கதை. கதை விறுவிறுப்பாக ஓடுகிறது. ஆசிரியருக்கு இது வெற்றியே.

உண்மை நட்பு, வேணு சீனுவாசன், பக். 112, ரூ. 15/-. வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.

சிறுவர் இலக்கியத்தில் சிறப்பான ஓர் இடத்தைத் தேடிக் கொள்ள முயன்று வரும் ஆசிரியரின் 14 சிறு கதைகள் இதில் உள்ளன. கதைகள் எல்லாமே நன்றாகத்தான் உள்ளன.

திருப்பதி செல்கிறவர்களுக்கான தெளிவான வழிகாட்டி, மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, பக். 84, ரூ. 12/-. மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017.

திருப்பதிக்குப் போய்விட்டு வந்திருக்கிறீர்களா? அப்படியானால் இந்தக் கேள்விகளுக்கு உங்களால் விடைதர முடியுமா? திருப்பதி மலையில் எத்தனை படிக்கட்டுகள் ஏறிச் செல்ல உள்ளன? பஸ்ஸில் போய்வரவே ரிடர்ன் டிக்கெட் கிடைப்பது தெரியுமா? தொலைவில் உள்ள காட்டேஜில் இடம் கிடைத்தாலும் அங்கு போய்வர இலவசமாகப் பேருந்து வசதி

ஏதுமில்லை!

உண்டு என்பது தெரியுமா? முன்பே சீட்டு வாங்கினால்தான் லட்டை விலைக்கு வாங்கலாம் என்பது தெரியுமா? ஏழு மலையானுக்குத் தினமும் சாத்தும் ஏராளமான பூமாலைகளை என்ன செய்கிறார்கள் என்பது தெரியுமா? ஏழு மலையானின் நெற்றியில் துலங்கும் திருநாமம் பச்சைக் கற்பூரத்தால் ஆனது என்பது தெரியுமா? அருகில் உள்ள திருத்தலங்களைக் காண திருமலையில் இருந்தே அரசு போக்குவரத்து பஸ் உள்ளது தெரியுமா? இப்படிப்பட்ட அரிய; அறியாத செய்தி கள் பல வற்றை இந்த அரிய புத்தகம் கூறுகிறது. எல்லோருக்கும் நன்கு பயன்படும் படைப்பு.

தேன்மலர், மு. வைத்தியலிங்கம், பக் 100, ரூ. 14/-. அருண்மொழிப் பதிப்பகம், 5-123, அங்கம்மாள் நகர், சேலம் - 636 009.

யாப்பு அறிந்தவர்கள் அனைவருமே கவிஞராகி விடுவதில்லை. அதிலும் சிறுவர்க்கான பாடல்களை எழுதக் கற்பனைச் செறிவும் சொல்வளமும் தேவை. குழந்தைகளுடன் பழகும் பேறு பெற்ற ஆசிரியப் பெருமக்களுக்குக் குழந்தைப் பாடல்களை தேன் பலாவைப் போல் சுவையானதாகப் படைக்க நல்ல வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்பைத் திறமையாகப் பயன்படுத்தி சிறப்பிடம் பெற்றுள்ள ஆசிரியரின் மணியான பாடல் தொகுதி இது. சிறுவர்களின் மனத்தை ஈர்க்கும் பல பொருள்களில் பாடல்கள் உள்ளன.

வண்ணப் புத்தகம் பாரம்மா! - அது
வழங்கும் அழகைக் காணம்மா! - அது
எண்ணில் பத்துத் தேறும்மா - இவை
எடுத்துப் படிக்கத் தேனம்மா!
நேரம் பார்க்க மணிப்பொறி - அடி
நெஞ்சில் இனிக்க வானொலி
சேரம் ஆடக் கருவிகள் - மாமா
கொண்டு வந்தார் பாரடி!

(பக் - 7 - மாமா என்ன தந்தார்?)

கம்மா படிக்கும்போதே தானாகவே தாளம் போட வைக்கிறது! ஆசிரியரின் தமிழுணர்வு எல்லாப் பாடல்களிலும் பேசுகிறது. இதில் உள்ள 'பொதுப் பகுதி' இளைஞர்களுக்கானது.

ஒரு கல் வைரமாகிறது, த. ஜானகி, பக். 134, ரூ. 18/-. வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை -600 017.

கண் தெரியாத ஒரு பெரியவரிடம் பேரனாக நடித்து, அவரை ஏமாற்றி வைர இரகசியத்தை அறிய முயலும் சுயநலக் கூட்டத்தில் சிக்கிக் கொள்ளும் சந்தியா, எப்படி அந்த வைரங்களை உரிய பேரனுக்கே கிடைக்கும்படி செய்கிறான் என்பதை மிக விறுவிறுப்பான முறையில் கொண்டு போகிறார் ஆசிரியை. குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்தி வரும் எல்லப்பா ரங்கம்மாள் பரிசுப் போட்டியில் இது முதல் பரிசை வென்றுள்ளதில் அதிசயம் ஏதுமில்லை. நாவலுக்கான இலக்கணங்கள் முற்றும் நிரம்பிய அருமையான படைப்பு. உள்ளே படங்கள் இல்லாததே ஒரு குறை.

உங்கள் நூலகம் பகுதிக்குப் புத்தகம் அனுப்ப விரும்புவோர் இரண்டு பிரதிகளை ஆசிரியர் - கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை. சிறுவர் நூல்களும் பொது அறிவு நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும்.

சாக்லேட் வேண்டாம்!



அன்று வெள்ளிக் கிழமை சுரேஷ் வகுப்புக்குள் நுழைந்தான்.

பாபு வந்து ''சுரேஷ் சாக்லேட் எடுத்துக்கோடா. எனக்கு இன்னைக்குப் பிறந்த நாள்'' என்று சாக்லேட் டப்பாவை நீட்டினான்.

''ஹேப்பி பர்த்டேடா'' என்று வேண்டா வெறுப்பாகச் சொல்லிவிட்டு ''சாக்லேட் வேண்டாண்டா. எனக்கு ஜுரண்டா பாபு. சாக்லேட் எல்லாம் சாப்பிடக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார்'' என்று பொய்யைச் சொல்லிவிட்டுத் தன் இடத்தில் அமர்ந்தான் சுரேஷ்.

''பாபு, ஷர்ட் சூப்பரா இருக்குடா. எங்கடா வாங்கினே? என்ன விலை ஆச்சு?'' என்று மற்ற நண்பர்களின் விசாரிக்கும் குரல் கேட்டு அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காது நகர்ந்தான் சுரேஷ்.

சுரேஷுக்கு பாபுவைக் கண்டாலே ஆகாது. எல்லாவற்றிலும் பாபு அவனுக்குப் போட்டியாக இருப்பதே காரணம். போனமாதம் நடந்த தேர்வில் கூட அவனை விட பாபு ஒரு மார்க் கூடுதலாக வாங்கி முதல் ரேங்கைத் தட்டிச் சென்றதில் அவன் மீது இருந்த ஆத்திரம் இப்பொழுது இரட்டிப்பாகி இருந்தது.

வகுப்புகள் ஆரம்பித்தன. தமிழ் ஆசிரியர் தணிகாசலம் வந்தார். அவருடைய மகன்தான் சுரேஷ். ஆனால், அதனால் அவனுக்கு எந்தச் சலுகையும் கிடையாது. அவர் மிகவும் கண்டிப்பானவர். அதே சமயம் சலிப்புத் தட்டாமல் சுவையாகப் பாடம் நடத்துவார். நேற்று நடத்திய பாடத்தின் தொடர்ச்சியை விளக்கிக் கொண்டிருந்தார் அவர்.

சுரேஷின் மனம் ஏனோ பாடத்தில் லயிக்கவில்லை. எப்படியாவது பாபுவைப் பழி தீர்க்க வேண்டும் என்ற எண்ணமே அவன் மனத்தில் மேலோங்கி இருந்தது.

ஆசிரியர் பாடத்தை முடித்து எல்லோரையும் கட்டுரை நோட்டும் பேனாவும் எடுக்கச் சொல்லிக் கட்டுரை எழுதும்படி கூறினார்.

பாபு, சுரேஷுக்கு முன் பெஞ்சில் அமர்ந்து மும்முரமாகக் கட்டுரை எழுதிக் கொண்டிருந்தான். அவன் மட்டும் என்ன, வகுப்பில் எல்லோருமே கட்டுரை எழுதுவதில் மூழ்கியிருந்தனர். சுரேஷின் பெஞ்சியில் அவனைத் தவிர இன்னும் ஒரு மாணவன்தான். அவனும், ஏதோ சந்தேகம் கேட்க ஆசிரியரிடம் போயிருந்தான்.

இதுதான் தக்க சமயம் என்று சுரேஷ் தன் பேனாவை பாபுவின் சட்டை முதுகில் உதறினான். பாபு சலனமில்லாமல் இருந்தது அவனுக்கு சந்தோஷமாக இருந்தது. மிகவும் சிரத்தையுடன் கட்டுரையை எழுதுவது போல் பாவனை செய்தான்.

மத்தியம் உணவு இடைவேளை. சுரேஷ் வலியச் சென்று ''என்ன பாபு, உன் புது சட்டையில இங்க் மாதிரி இருக்கே?'' என்றான். அப்போதுதான் அதைக் கவனித்த பாபு மிகவும் வருந்தினான்.

''புதுச் சட்டை இப்படி ஆயிடுச்சே? யாரோ தெரியாம உதறி இருக்காங்க'' என்று கூறிச் சென்றுவிட்டான்.

மாலை பள்ளி விட்டதும் வீட்டிற்கு வந்த சுரேஷுக்கு இன்ப அதிர்ச்சி. டெல்லியில் இருக்கும் அவனது மாமா நான்கு புதுச்சட்டைகளை பார்சலில் அனுப்பியிருந்தார்!



✱ வெற்றிவேலன் பதக்கம் பெறுகிறார்.

பாராட்டுகிறோம்!

ஆண்டுதோறும் குழந்தை எழுத்தாளர் சங்கம் இலக்கியப் பரிசுகளை அளித்து சிறுவர் இலக்கியத்திற்குப் பெரிதும் தொண்டாற்றி வருகிறது. அண்மையில் வீரவசந்தன், ஓர்த்து சங்கீதராஜ், அ.வெற்றிவேலன், ஆண்டாள் பிரியதர்சினி ஆகியோர் ஏவிஎம். பதக்கங்களையும், அரிமதிதென்னகன், பி.அமுதா ஆகியோர் செல்லப்பன் நினைவுப் பரிசையும், புவனைகலைச்செழியன், கொ.ம.கோதண்டம் ஆகியோர் எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளைப் பரிசையும் தங்களது கையெழுத்துப் பிரதிகளுக்காகப் பெற்றனர். பரிசு பெற்றவர்களைப் பாராட்டுவதோடு, சிறுவர் இலக்கியம் செழிக்க ஆக்கபூர்வமாகப் பாடுபட்டு வரும் சங்கத்தையும் பாராட்டுகிறோம்.

''சுரேஷ் கடைக்குப் போய்த் தேங்கா வாங்கி வாடா'' என்று பையையும் காசையும் நீட்டிக் கெஞ்சினாள் அம்மா. ''இரும்மா இதோ போறேன்'' என்ற சுரேஷ், முகம், கை அலம்பி ஒரு புதுச்சட்டையைப் போட்டுக் கொண்டு மகிழ்ச்சியாகக் கடைக்குச் சென்றான். போன சுருக்கிலேயே சோகமே உருவாகத் திரும்பி வந்த சுரேஷைக் கண்டதும் அம்மாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''என்னடா இது!புதுச் சட்டையெல்லாம் ஒரே சேர்?'' என்று கேட்டாள்.

தேங்காய் வாங்கக் கடையில் நின்று கொண்டிருந்தபோது தெருவில் சென்ற ஒரு லாரி சேற்றை வாரி இறைத்ததாகச் சொல்லி சுரேஷ் அழுதான். இதையெல்லாம் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த தணிகாசலம் ''தன்வினை தன்னைச் சுடும் என்பது உன் விஷயத்தில் ரொம்ப சரியாப்போச்சு இல்லையா சுரேஷ்?'' என்று கேட்டார்.

வியப்புடன் தந்தையை நோக்கினான் சுரேஷ். திருடனுக்குத் தேள் கொட்டினதுபோல் இருந்தது அவனுக்கு.

''பாபுவின் சட்டையில் பேனாவை உதறி இங்க் கறையாக்கினாயே, அதற்கு உடனே தண்டனை கிடைச்சுட்டுது பாத்தியா? நான் எல்லாவற்றையும் கவனித்தேன் சுரேஷ். உடனேயே கண்டிக்க நினைச்சேன். வகுப்பு முடியட்டும்னு இருந்தேன். அதற்குள் நீ போயிட்டே. படிப்புல போட்டி இருக்கலாம், தப்பில்லை. ஆனா, அது பொறாமையா மாறவே கூடாது. பொறாமை ஒரு பெரிய நோய். அதற்கு நாம் அடிமை ஆயிட்டா அழிந்துபோய் விடுவோம்''என்றார்.

''என்னை மன்னிச்சிடுங்கப்பா''என்று தலை குனிந்தான் சுரேஷ்.

''ஒரு புதுச் சட்டையை எடுத்துக் கொண்டு பாபுவின் வீட்டுக்குப்போய் அவனுக்குப் பிறந்தநாள் பரிசா இதைக் கொடுத்துட்டு என் செய்கைக்கு மன்னிப்புக் கேட்டுட்டு வர்றேம்பா'' என்று விரைந்த மகனைப் பெருமையுடன் பார்த்தார் தணிகாசலம்.

- ஐஸ்வர்யா



அண்ணனுக்குப் பரிசு

அப்பா வெளியே போயிருந்தார். அம்மா சமையலறையில். அம்மாவுக்கு உதவியாக அண்ணன் முரளியும் சமையலறையில். இதைவிட நல்ல வாய்ப்பா கிடைக்கப் போகிறது.


ராமு, முரளியின் புத்தக அலமாரியில் இருந்த புதுப் பேனாவை எடுத்தான். நேற்றுக் காலைதான் அந்தப் பேனாவை முரளிக்குப் பரிசாக அப்பா தந்திருந்தார். அவன் முதல் ரேங்க் வந்ததுக்குப் பரிசாம்!

அப்பா அதை வாங்கிக் கொண்டு வந்த உடனேயே ராமு பார்த்து விட்டான். ''எனக்குப்பா''என்று எடுக்க முயன்றான். ''அது உனக்கு இல்லை. அண்ணனுக்கு. அவன் முதல் ரேங்க் வாங்கிக் கொண்டு வந்திருக்கானே... அதுக்குப் பரிசு'' என்று அதை அவனிடமிருந்து வாங்கி, முரளியைக் கூப்பிட்டுக் கொடுத்து விட்டார்.

ராமுவுக்குக் கோபமான கோபம். அவனுக்குப் பிடிவாதம் அதிகம். எந்த ஒரு பொருளும் தனக்குக் கிடைக்கவில்லை என்றால் அவன் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவான். தனக்குக் கிடைக்காத பேனா, அண்ணனுக்குக் கிடைத்தது பற்றி அளவில்லாத பொறாமை. எப்படியும் பேனாவை அண்ணன் உபயோகிக்க முடியாதபடி செய்துவிட அவன் முடிவெடுத்து, அதற்கான வாய்ப்பைத் தேடிக் கொண்டிருந்தான். அந்த வாய்ப்பு இதோ கிடைத்து விட்டது.

ராமு, அண்ணன் முரளியின் புதுப் பேனாவை எடுத்துத் திறந்து அதைத் தலைக் கீழாகத் தரையில் குத்தினான். அந்த இங்க் பேனாவின் நிப்புமுனை கொக்கியாய் வளைந்து கொண்டது. திரும்ப அதை அப்படியே வைத்து ஓசைப்படாமல் விட்டு எழுந்து வந்து விட்டான்.

முரளிக்குப் போதாத காலம். அவசரம் அவசரமாக வந்த அப்பா, ''முரளி, அந்தப் பேனாவைக் கொடு, பெயர் போட்டுக் கொண்டு வந்து தரேன்'' என்றார். முரளி, பேனாவை எடுத்துப் பார்த்துவிட்டுத் திகைத்தான். அப்பா, செம்மையாக பூசை நடத்தினார். முரளிக்கு இரண்டு கன்னங்களும் வீங்கிப் போச்சு. அவன் அன்று பள்ளிக்குப் போகவில்லை.



முதல் பெண் ஃபோர்மென்

சுதா பார்த்தசாரதி என்பவர் சிவில் ஒன் இன்ஜினியராக மத்திய ரயில்வேயில் இருக்கிறார். அதுமட்டுமல்ல; இந்தியாவின் முதல் பெண் ஃபோர்மென் இவர்தான். இது என்ன பெரிய அதிசயம் என்கிறீர்களா? 20 வருடங்களுக்கு முன்பு இந்த சுதா காது கேளா தவராக இருந்தவர்.

சென்னை மொபரீஸ் சாலையில் உள்ள வித்யா லயா பள்ளியில் சேர்ந்து மெல்லச் செவிட்டுத் தன்மையைப் போக்கிக் கொண்டவர் இவர். இவருக் குக் காது கேட்கச் செய்த வித்யாலயா நிறுவனத்தைவிட்டு வழக்கமான பள்ளிகள், கல்லூரி என்று படித்து பி. டெக் பட்டம் பெற்று நல்ல பதவியையும் பெற்று விட்டார் சுதா. இவரைப் போன்ற ஏராளமான காது கேளாத – வாய் பேசாத குழந்தைகளை இந்தப் பள்ளி சீர்திருத்தி வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன் நடமாட வைத்திருக்கிறது.

– தங்க. சங்கரபாண்டியன

அண்ணனுக்கு அடிவாங்கி வைத்த மகிழ்ச்சியில் ராமு மட்டும் பள்ளிக்குக் கிளம்பினான்.

வகுப்பே அவனுக்காகக் காத்திருந்தது!

ஆசிரியர் நரசிம்ம அவதாரம் எடுத்திருந்தார்.

''எத்தனை துணிச்சல் இருந்தா கிறுக்கு வாத்தியார்ன்னு எழுதி படம் போட்டு என்னுடைய பையிலேயே போட்டு வைச்சிருப்பே?''

''சார், எனக்கு எதுவும் தெரியாது''- விம்மினான் ராமு.

''அந்தக் காகிதம், உன் கட்டுரை நோட்டிலேருந்து கிழிச்சு எடுத்தது. இப்போ எல்லாத்தையும் கண்டு பிடிச்சுட்டேன்''- ஆசிரியர் வெகுண்டார்.

''உன்னை மாதிரி பசங்களுக்கெல்லாம் படிப்பு எதுக்கு? டி.சி. கொடுத்து அனுப்புவதா முடிவு பண்ணிட்டேன். போய் உங்கப்பாவைக் கூட்டிக் கொண்டு வா'' என்று வெளியில் அனுப்பினார் தலைமை ஆசிரியர்.

''அப்பா, பேனா நிப்பு எப்படி இப்படி வளைஞ்சதுன்னு எனக்குத் தெரியாதுப்பா'' என்று அண்ணன் முரளி அடி தாங்காது அழுத காட்சி ராமுவுக்கு நினைவு வந்தது.

அண்ணனுக்கு இழைத்த அநீதிதான் இப்படியே வேறுவிதமாத் திரும்பி அவனை வாட்டுகிறதோ?

செய்தியைக் கேட்டதும் வலியை மறந்த முரளி சீறிக் கொண்டு புறப்பட்டான். தம்பியை அழைத்துக் கொண்டு தானே பள்ளிக்கு வந்தான்.

''ஏன்சார், ஆசிரியரை அவமதித்துப் படம் போடும் ஒருவன், தன்னுடைய கட்டுரை நோட்டுக் காகிதத்தைக் கிழித்துப் பயன்படுத்தி, அதை அந்த ஆசிரியர் பையிலேயேவா போடுவான்? ஆசிரியர் கண்டு பிடித்து விடுவார் என்பது அவனுக்குத் தெரியாதா? என் தம்பி அத்தனை முட்டாளா? அதோட, அவனுக்குப் படம் போடவே வராது சார். அதனால் கண்டிப்பாக இதை அவன் செய்திருக்கவே மாட்டான். அவனுக்கு அந்த அளவுக்குத் துணிச்சல் இல்லை. அவனை மாட்ட வைக்க வேண்டும் என்று திட்டம் போட்ட யாரோதான் இப்படிச் செய்திருக்கிறார்கள்'' என்று முரளி வாதித்ததை ஆசிரியரால் ஒதுக்க முடியவில்லை. ராமுவை வகுப்புக்குப் போக அனுமதித்தார்.

''அண்ணா, என்னை மன்னிச்சிடு'' என்று விம்மினான் ராமு.

– து.சந்திரன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.




கேமல் சேம்ப்
போட்டி
நீங்கள் ஒரு கேமல் சேம்ப்பாக வேண்டுமா மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகளையும் வெல்ல வேண்டுமா ? இது வெகு சுலபம்.
1 ஆம் பரிசு
2 ம் பரிசு
3 வது பரிசு
கேமல்
வெற்றி பெறும் வண்ணங்கள்
INTERACT VISION CL/M/17/TAM



ஆகும் சக்தியை ராஜு எவ்வாறு பெற்றான் என்பதைப் படியுங்கள்
கேமல் சேம்ப்
அன்பார்ந்த நண்பர்களே,
இன்று பள்ளிக்கூடத்தில் ஒரு ஜோக் செய்தேன்.
கேமல் ஆயில் பேஸ்டல் உபயோகித்து ஒரு அழகான பட்டுப்பூச்சியைப்போல் வண்ணம் தீட்டி கரும்பலகையில் ஒட்டி வைத்தேன். பார்ப்பதற்கு இது மிக அழகாக இருந்தது. வண்ண ஜாலத்துடன் இயற்கையாக இருந்தது. ஒவ்வொருவரும் ஏமாந்து போனார்கள். அவர்கள் அதை நிஜமானப் பட்டுப்பூச்சி என்று நினைத்தார்கள். அது மட்டுமல்ல, இரண்டு பட்டுப் பூச்சிகளும் அதைச் சுற்றி வட்டம் வந்தன, அதனுடன் சிநேகம் செய்து கொள்ள. என்ன வேடிக்கை! நான் உண்மையில் ஒரு கேமல் சேம்ப். எவ்வாறெனில் உண்மையான பட்டுப்பூச்சிகளையும் நான் கேமல் ஆயில் பேஸ்டல் கொண்டு ஏமாற்ற முடியும்.
உன் அன்புள்ள,
ராஜு
camel
OIL PASTELS
கேமல்
வெற்றி வண்ணங்களை உபயோகியுங்கள். கேமல் சேம்ப்பாகத் திகழுங்கள்.
கேம்லின் ஆர்ட்மெட்டீரியல் டிவிஷன், ஜே.பி. நகர், அந்தேரி (கிழக்கு), பம்பாய்-400 059.

REGISTERED NO. TN/MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

10 வித்தியாசத்தை கண்டுபிடியுங்கள்



விடை

1. பூவிலுள்ள இதழ்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன.
2. கிளியின் மூக்கு திறந்துள்ளது.
3. கிளியின் கழுத்தை சுற்றி சிவப்புப் பட்டை உள்ளது.
4. பெண்ணின் கண்கள் திறந்துள்ளன.
5. பெண் சிரிக்கிறாள்.
6. அவளுடைய மேலாடையில் நட்சத்திரங்கள் உள்ளன.
7. பெண்ணின் வளையலில் வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன.
8. நாயின் நாக்கு வெளியில் தொங்கிக் கொண்டிருக்கிறது.
9. தட்டின் மேல் பார்லேவின் பெயர் எழுதப்பட்டுள்ளது.
10. தட்டில் மேங்கோபைட் வைக்கப்பட்டுள்ளது.